Registered as a Newspaper in Srilanka

வெள்ளிக் கிழமைகளில்
உங்கள் கரங்களில்...
வார இதழாக
மக்கள்
கருத்துக்களுடன்

صوت المسلم

# முஸ்லிம் குரல்

මුස්ලිම් කුරල් MUSLIM KURAL

'சுயநிர்ணயத்துடன் கூடிய முஸ்லிம்களின் கௌரவமிக்க சமத்துவமான வாழ்விற்கு'

தருகை - 20 ரூபா | 26 டிசம்பர் 2003 வெள்ளிக்கிழமை | 02 துல்கஃதா - 1424 | சுவடு- 29



சதாமை கைது செய்து காவலில் வைத்துள்ள அமெரிக்க இராணுவம் தமது அடுத்த இலக்கு ஒசாமா பின்லாதின் என ஆர்ப்பரித்து நிற்கின்றது...

# பிரபா - ஹக்கீம் கூட்டறிக்கையை புலிகளே புஷ்வாணமாக்கி விட்டனர்!!

## ஹக்கீமின் சாதனைக் கோட்டை சரிகிறது!





மு.கா. தலைவர் ஹக்கீமின் சாதனைச் சிகரத்தில் வீற்றிருந்த பிரபா - ஹக்கீம் கூட்டறிக்கை இப்போது புஷ்வாணமாகி விட்டது. அக் கூட்டறிக்கையை புலிகள் தூக்கியெறிந்து விட்டனர். 13 ஏப்ரல் 2002ஆம் ஆண்டு வன்னியில் இரு தரப்பினதும் நேரடிப் பிரசன்னத்தில் பிரபாகரனால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையானது, தங்களை எந்த விடயத்திலும் கட்டுப்படுத்தாது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் இப்போது மிக வெளிப்படையாகத் தெரிவித்து விட்டார்!

இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஆச்சரியம் தரும் செய்தி இல்லைதான். ஆனாலும் மு.கா. தலைவர் முஸ்லிம் சமூகத்திற்கு தான் செய்த சாதனைகளில் தலையாயது பிரபாகரனுடன் செய்த ஒப்பந்தந்தான் என பல தடவை மார்தட்டிப் பேசிவந்துள்ளார். அவ்வொப்பந்தத்தை வானாரப் புகழ்ந்து அதற்கு குஞ்சம் கட்டி, பூச்சூடி மகிழ்ந்திருக்கிறார். அதன் பெருமையில் திளைத்து முஸ்லிம் சமூகத்தின் சாதனைத் தலைவன் தான்தான் என மார் தட்டியிருக்கிறார். இப்போது அந்த உச்சபட்ச சாதனைச் சிகரம் புலிகளின் வெளிப்படையான ஏமாற்றுத்தனத்தால் சரிந்து விட்டது! இப்போதாவது மு.கா. தலைவர் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மு.கா. தலைமையிடம் எதனை எதிர்பார்க்கின்றனர் என்பதை உணர்தல் வேண்டும்.


இக்கூட்டறிக்கை கைச்சாத்திடப்பட்டு அதன் மை காயும் முன்பே கூட்டறிக்கையின் இணக்கப்பாடுகளை புலிகள் நமது சமூக அரங்கில் மீறத் தொடங்கிவிட்டனர். இரு தரப்புக்குமிடையில் இணக்கப்பாடு கண்ட ஏழு அம்சங்களில் ஒன்றைத்தானும் புலிகள் நேர்மையாகச் செயற்படுத்த முன் வரவில்லை. அக்கூட்டறிக்கையை புலிகள் எப்போதும் கௌரவிக்கவும் இல்லை, கணக்கெடுக்கவும் இல்லை.

2002 ஜூன் 27இல் புலிகள் மிகப்பெரும் அழிவினையும், காட்டுத் தர்பாரையும் வாழைச்சேனையில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். மூதூர், கிண்ணியா என தொடர்ச்சியாக மீறல்கள் நடந்தன. இன்றுவரை இந்நிலை தொடர்கிறது. இச் சந்தர்ப்பத்தில் எல்லாம் மு.கா. தலைமை மௌனம் காத்தது. இந்த உடன்பாட்டை ஏன் மீறுகிறீர்கள் என புலிகள் தரப்பை மு.கா விரல்சுட்டிக் கேட்கவேயில்லை. செய்வதை யெல்லாம் செய்துவிட்டு இப்போது புலிகள், கூட்டறிக்கையை மீறியது முஸ்லிம் தரப்புத்தான் என உண்மையைத் திரித்து குற்றம் சாட்டுகிறனர். ஆதிக்கத்தரப்பின் அடாவடித்தனத்திற்கும் திமிர்த்த னத்திற்கும் இதைவிட நமது அரசியல் அரங்கில் வேறு சான்றுகள் வேண்டுமா? ○

## பள்ளிவாசல் அழிப்பு - வீடுகள் உடைப்பு! வத்தளை ஹூனுப்பிட்டியில் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்கள்!

உள்ளே
பாதிக்கப்பட்ட மக்களின்
வாக்குமூலங்கள் -
ஒரு நேரடி ரிப்போர்ட்







## அமேரிக்காவின் முகமூடி கிழிகிறது! சதாமின் கைது அம்பலத்திற்கு வருகிறது!!

சதாமின் கைது விடயத்தை அமெரிக்கா கொண்டாடி வருவதை பெரு முயற்சியின் பின்னான சிறு வெற்றி என உலகம் கணித்துவரும் வேளையில், அச்சிறு வெற்றியையும் தனக்கானதாக்கிக் கொள்ள அமெரிக்கா ஆடிய கபட நாடகம் இப்போது உலக அரங்கில் அம்பலத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

சதாம் உசைன் ஒரு போதுமே அமெரிக்கப் படைகளினால் கைது செய்யப்படவில்லை. ஜலால் தலபானியின் பாலைவன குர்தீஷ்தான் தேசபக்த அமைப்பினரால்தான் சதாம் சிறைப்பிடிக்கப்பட்டார். அவரை சிறைப்பிடித்து அமெரிக்க இராணுவத்திடம் கையளிப்பதற்கான பேச்சுகள் நடைபெற்றன. பேரம் பேசல்கள் வெற்றியளிக்கும்வரை சதாம் குர்திஷ்தான் படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளார் - என்ற தகவலை பிரித்தானியாவின் 'சண்டே எக்ஸ்பிரஸ்" பத்திரிகை ஆதாரத்துடன் இப்போது அம்பலத்திற்கு கொண்டு வந்திருக்கிறது.

இதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் மேற்குலகின் புலனாய்வு அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், 'சதாம் அமெரிக்க பிரித்தானிய புலனாய்வால் பிடிக்கப்படவில்லை. இறுதியாக சதாமை ஒருவர் பலி எடுப்பார் எனத் தெரிந்திருந்தோம். அவர் எவ்வாறு பிடிபடுவார் என்பதே முக்கிய விடயமாக இருந்தது. முதன் முதலில் தலபானியே இச்செய்தியை உலகுக்கு வழங்கினார் என்கிறார் அவர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் அண்மித்துக் கொண்டிருப்பதால் அமெரிக்க மக்களின் கண்களுக்கு முன் பளிச்சிடுவதற்காக ஜோர்ஜ் புஷ்ஷுக்கு சதாமைக் கைது செய்த செய்தியின் ஊடாக தனது வீரத்தையும் அமெரிக்கப் படைகளின் வீரத்தையும் காட்ட வேண்டிய தேவை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போது, புஷ்ஷுக்கு மீண்டுமொரு தலை குனிவு. ○

## திலங்க விவகாரம்: நீதிபதிக்கு 80 இலட்சம் இலஞ்சம்!

திலங்க சுமதிபாலவை விடுவிக்கும் முயற்சியில் சம்பந்தப்பட்ட நீதிபதிக்கு 80 இலட்சம் இலஞ்சமாக வழங்கப்பட்ட உண்மை இப்போது வெளிவந்துள்ளது. நீதித் துறையை அதிர்ச்சிக் குள்ளாக்கிய இச்சம்பவத்தில், இப்பணத்தை நீதிபதிக்கு வழங்கிய முன்னணி நிறுவனமொன்றின் தலைவர் இப்போது இவ் உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார்! □

## மின்சாரம், காஸ்விலை அடுத்து வரும் வாரங்களில் அதிகரிக்கப்படவுள்ளது!

எதிர்வரும் சில வாரங்களுக்குள் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. வற் வரியினை 10வீதம் தொடக்கம் 15 வீதம் வரை உயர்த்தியதே இதற்கான காரணமாகும். காஸ் விலையை அதிகரிப்பதற்கும், காஸ் கம்பனி நுகர்வோர் அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளது. □

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக் குரல்! சுதந்திரத்திற்கான குரல்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரிசி ஆலைகளினால் சுகாதாரம் மாசடைகின்றது

பொலன்னறுவைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கல்லலை அரிசி ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், உமி காரணமாக ஏற்படும் துர்நாற்றத்தினால் அப்பகுதிகளில் உள்ள பாடசாலை, பள்ளிவாயல், வீடுகள் பாதிப்படைகின்றன. இது மக்களின் சுகாதா[illegible]திற்குச் சவாலாக அமைந்துள்ளது. இவை சம்பந்தமாக உ[illegible]ய அதிகாரிகளுக்கு குடியிருப்பாளர்கள் புகார் செய்[illegible]ம். இதுவரையும் எந்த நடவடிக்கைகளையும் சுகாதாரத் திணைக்களம் எடுக்கவில்லை.

— எம்.ஐ.எம். நக்கீப் கல்லலை

## பாலத்தின் அவலமும், ஒளியின்மையும்

மூதூர் பிரதேசசபைக்கு உட்பட்ட மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள, அக்கரைச்சேனையையும், ஆணைச்சேனையையும் இணைக்கின்ற பாலம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

கொழும்பு-கந்தளாய் மற்றும் ஏனைய கிராமங்களுக்கான போக்குவரத்து இப்பாலத்தின் ஊடாகவே நடைபெறுகிறது. அந்-நஹார் பெண்கள் கல்லூரிக்குச் செல்லும் நூற்றுக் கணக்கான மாணவியர்கள் இப்பாலத்தின் ஊடாகவே பயணம் செய்ய வேண்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இரவு நேரங்களில் மின் ஒளி இல்லாமையாலும் பாலத்தின் இரு மருங்கிலும் தடுப்புச் சுவர் இல்லாமையாலும் ஓர் அபாயகரமான நிலை இருந்து வருகின்றது. இக்குறைபாட்டினை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகின்றனர்.

கே. கனீஸ். ஆணைச்சேனை. மூதூர்-02.


## சிங்கள மொழி மூலம் இஸ்லாம் கற்பிக்கும் ஆசிரியர்கள் தட்டுப்பாடு

கம்பஹா மாவட்டத்தில் தமிழ்மொழி மூல முஸ்லிம் பாடசாலைகள் இருபதுக்கு மேல் அமைந்துள்ளன. இப்பகுதி முஸ்லிம் மாணவர்களில் ஒரு பகுதியினர் சிங்கள. ஆங்கில மொழி மூல பாடசாலையில் கல்வி கற்பதில் ஆர்வத்தினைக் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக சிங்கள மொழி மூலப் பாடசாலையில் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கின்றபோது, இஸ்லாம் பாடத்தை கற்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதற்கு முக்கிய காரணமாக இருப்பது பாடநூல்கள் சிங்கள மொழியில் இருந்தாலும் அதனை போதிக்கவல்ல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதேயாகும்.

நமது மாணவர்களை சிங்கள. ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளில் படிப்பிப்பதன் மூலம் இஸ்லாம் பாடத்தில் அவர்கள் சித்தியடைவதில் பெரும்பாலும் தவறி வருகின்ற நிலைமை இருப்பதனையும் கவனத்திற்கொண்டு, நமது பாராளுமன்ற உறுப்பினர்களும், புத்திஜீவிகளும் இது விடயத்தில் கவனஞ்செலுத்தி, சிங்கள.ஆங்கில மொழிமூலம் இஸ்லாம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வெற்றிடத்தை முதலில் நிரப்புவதற்கு ஆவன செய்துவிட்டு, முஸ்லிம் அல்லாத பாடசாலைகளில் நமது பிள்ளைகளைப் படிப்பிப்பதில் ஆர்வத்தினை முன்னெடுப்பதே எதிர்காலமுடையது. சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனஞ்செலுத்துவார்களா?

எம்.டி.எம். நஸார். தலைவர். இஸ்லாமிய இளைஞர் பேரவை
ஹ‍ீனுப்பிட்டிய. வத்தளை




## முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

***நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாகச் சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!***

### சந்தா விபரம்!

**3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-**
**6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 500/-**
**1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-**


தொடர்புகளுக்கு:
Muslim Kural Publication.
181/1, Maligakanda Road,
(White Park).Colombo-10.
Phone : 0114 734507, Fax:0114 734508

**(பிரதிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)**

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publication Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

### சதாமைத் தொடர்ந்து அரபுலகம் இழக்கப்போகும்

# அடுத்த தலைவர் யார்?



ஐ.நா. சபையின் தீர்மானத்தை மீறாத குற்றத்திற்காக சதாம் கைது செய்யப்பட்டு நீதி விசாரணைக்கு முகம் கொடுக்கும் போது. அதே ஐ.நா. சபையை மீறிய புஷ்ஷைத் தண்டிப்பது யார்? அவர் எப்போது கைது செய்யப்படுவார்? இதற்கு ஐ.நா. சபை பதில் தரவேண்டும் என்று நீதியின் காவலர்கள் கேட்கின்றனர்.

ஈராக்கை ஆக்கிரமிப்பதற்கும், அந்த நாட்டின் இறைமையை அழித்தொழிப்பதற்கும். மக்களைக்குண்டு போட்டு படுகொலை செய்வதற்கும் புஷ் முன்வைத்தகாரணம் பேரழிவு தரும் இரசாயன ஆயுதத்தை சதாம் மறைத்து வைத்திருக்கிறார் என்பதுதான், ஆனால் அப்படியான எந்த ஆயுதமும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதுபற்றி இன்றுவரை இரசாயன ஆயுதங்கள் என்னிடம் இல்லை என்ற சதாமின் கூற்று பொய்ப்பிக்கப்படவுமில்லை. ஆனால். இன்று வரை சர்வதேசத்தைப் பொய் சொல்லி ஏமாற்றி வருபவர் புஷ்ஷைத்தவிர வேறு யாருமல்ல. எனவே இவருக்கான தண்டனை என்ன?

இன்று அரபுலகம் வெட்கித்தலைகுனிய வேண்டும். சொந்தச் சகோதர நாடான ஈராக்கையும். சதாமையும் காட்டியும். கூட்டியும் கொடுத்து புஷ்ஷுக்கு சாமரம் வீசியதை விட அவமானம் வேறு எதுவுட[illegible]லை. சதாம் அக்கிரமக்காரன் என்றால் அவரைவிட மிகப் பெரிய அக்கிர மக்காரன் புஷ் என்பதை யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. "ஒரு அக்கிரமக்காரனை மற்றுமொரு அக்கிரமக்காரனிடம் இறைவன் ஒப்படைப் பான்" என்ற இறைவனின் கூற்றுப்படி சதாம் இன்று புஷ்ஷினால் கைது செய்யப்பட்டுள்ளார். என்று வைத்துக்கொண்டால் அந்த விதியின்படி புஷ் மிக விரைவில் அவரை விட மகா பெரிய அக்கிரமக்காரனால் கைது செய்யப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. தர்மம் எப்போதும் தோற்பதில்லை.

பதவியில் உள்ள எவருக்கும் அரசியல் எதிரிகள் இல்லாமலில்லை. புஷ்ஷுக்கு அமெரிக்காவில் அரசியல் எதிரிகள் இருப்பதுபோல். சதாமிற்கும் ஈராக்கில் அரசியல் எதிரிகள் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால். புஷ்ஷுடன் சதாமை ஒப்பிடும்போது சதாம் ஒரு அப்பாவி. புஷ் நடாத்திய ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரில் மனித உயிருக்கு ஆபத்தான கதிர்வீச்சுக்கள் கொண்ட ஆயுதத்தை புஷ் பாவித்ததை உலகம் அறியும். ஆனால் சதாம் அப்போரில் புஷ் கூறியதைப்போல் எவ்வித இரசாயன ஆயுதத்தையும் பாவிக்கவில்லை. எனவே இவ்விருவரில் யார் அக்கிரமக்காரர் என்பதை சர்வதேசம் மறைக்க முடியாது.

மௌலவி றபீயுடீன (ஜமாலி)



## வாசகர்களைச் சிந்திக்க வைக்கிறது

பெயருக்கேற்றாற்போல், முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுக்கிறது முஸ்லிம் குரல்!

கதை, கவிதை,கட்டுரை போன்ற காத்திரமான ஏனைய பற்பல அம்சங்களோடு தனித்து விளங்குகிறது முஸ்லிம் குரல்!

மற்றயவர்கள் மட்டுமல்லாது எம்மவர்களின் "மறுபக்கத்தை" யும் புரட்டிக் காட்டி, கூடவே எதையும் நேருக்கு நேர் துணிந்து கூறி, வாசகர்களை வித்தியாசமான வடிவில் சிந்திக்கவைக்கும் முஸ்லிம் குரலுக்கு வாசகர்களாகிய எங்கள் விசேட பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

கோட்டை முனை 'முத்து மணி
பதுளை

## எமக்கான ஊடகம்

மூலை முடுக்குக்குள் வாழும்
முஸ்லிம்களின் செய்திகளை
கிழமைக்கொருமுறை
வெளி உலகிற்கு
புடம் போடும்
முஸ்லிம் குரலே...!

முஸ்லிம்களுக்கென்று
வந்துதித்த பொக்கிஷம் நீ...!
எமக்கென்று ஒரு
ஊடகம் இல்லையென்று
அனுதினமும் குமுறிய
நேரங்களில் எமக்கென்று
ஒரு ஊடகமாய் வந்துதித்தாயே...!

முஸ்லிம்கள் படும்
துன்பங்கள் துயரங்கள்
அவல நிலை பற்றி
பல்வேறு வடிவங்களில்
எடுத்துரைக்கும் உன் சேவை....!
முஸ்லிம்களுக்காய்
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாய்
தொடர வேண்டுகிறோம்...!

இளைய நிலா யூனுஸ்
காத்தநகர் - 01

## சமூகத்தை பண்படுத்துகின்றது

"முஸ்லிம் குரல்" பத்திரிகை எமக்கு நிலையாக வேண்டுமென்று உணர்தல் பரவலாக எம்மத்தியில் காணப்படுவது நமக்கெல்லாம் சந்தோஷமான செய்தியேயாகும். நாம் நமக்குள் எழுதுவோம். பேசுவோம் கருத்துப் பரிமாறிக்கொள்வோம் என்கின்ற நிலைப்பாடானது நமது சமூகம் பண்படுவதற்குப் போதிய வழியை "முஸ்லிம் குரல்" ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதன் பணி 'தொடர்ந்தும் நமக்குக் கிட்டுவதற்குப் பிரார்த்திப்போம்.

முஹம்மட் இஸ்மாயீல் றபீக்கா
சம்மாந்துறை.

## தினசரியாக மாறவேண்டும்

முஸ்லிம்களைப் பற்றி முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு இன்று நம்மத்தியில் இருக்கும் ஊடகங்கள் மிக மிகக் குறைவு. முஸ்லிம் குரல் என்பது முஸ்லிம்களின் குரலாக வாரத்துக்கு ஒரு முறையாவது வெளிவருவதை நினைத்து மிகவும் சந்தோஷம். காலப்போக்கில் இறைவன் துணையால் தினசரி வெளியீடாக முஸ்லிம் குரல் வெளிவருதற்காக நானும் பிரார்த்திக்கிறேன்.

ஆர். அலிக்கான்
பிறைந்துறைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பையூஸ் அஹமட்

# தமிழ்ச் செல்வன் சொல்வதும் நாம் புரிந்து கொள்வதும் என்ன?

கடந்த 19ஆம் திகதி கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு தமிழ். முஸ்லிம் பத்திரிகையாளர்கள் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைமைகளை சந்தித்து உரையாடியதை நாம் அறிவோம்.

இந்த உரையாடலானது நமது அரசியல் அரங்கைப் பொருத்தவரை மிக முக்கியமானதாகும். ஏனெனில் விடுதலைப்புலிகளின் முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாட்டை மிகத்தெட்டத் தெளிவாக நமக்கு உணர்த்திய புலிகளின் உத்தியோகபூர்வமான கருத்துக்களாக இவை இருக்கின்றன.

தமிழ்ச்செல்வன் வன்னியில் முஸ்லிம். தமிழ் பத்திரிகையாளர்களிடம் உரையாடிய முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் இரண்டு விடயங்கள் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

முதலாவதாக முஸ்லிம்களின் தனித்துவத்தரப்பு - விடயத்தை ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாது என்பதும். இரண்டாவதாக வன்னியில் கைச்சாத்திட்டு வெளியான பிரபா - ஹக்கீம் கூட்டறிக்கை செல்லுபடியற்றதாக மாறிவிட்டது என்பதுமே அம் முக்கிய

முஸ்லிம்களை பேச்சுவார்த்தை மேசையில் தனித்துவத் தரப்பாக பங்குபற்ற வைக்க வேண்டிய தேவைப்பாடு அதற்கு இரண்டாம். மூன்றாம் பட்சமானதேயாகும். ஒரு வேளை தமிழ் தேசத்தை வழிக்கு கொண்டு வருவதற்கு முஸ்லிம் தனித்துவத்தரப்பு விடயத்தை அரசாங்கம் ஒரு உபயமாக பாவிக்க மட்டுமே முயலும். இதுவே சிங்கள அரசியலின் யதார்த்தமாகும். ஆகவே. இப்போது நமக்கு முன் பல கேள்விகள் எழுகின்றன.

I. பாராளுமன்றத்தில் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டால். நாம் பேச்சுவார்த்தை அரங்கில் சமத்துவத் தரப்பாகக் கலந்து கொண்டுவிட முடியுமா?

II. இலங்கை அரசாங்கம் நம்மைக் கைவிடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

III. சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் என்ன நிலைப்பாடுகளை எடுக்க உள்ளன?

IV. சமத்துவத் தரப்பாக பேச்சுவார்த்தை அரங்கில் கலந்து கொண்டு அப்பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை முன்வைத்து பேசுவதற்கு நமக்கான தீர்வினை நாம் அடையாளம் கண்டு விட்டோமா?

இக்கேள்விகள் தமிழ்ச்செல்வனின் கருத்திற்குப்பின். நமது அரசியல் சூழலில் எழுந்து கொண்டிருக்கும் போதே. மு.கா. தலைவர் ஹக்கீம் அம்பாறையில் மு.கா. உள்ளூராட்சிப் பிரதிநிதிகளை சந்தித்து உரையாடியபோது. "முஸ்லிம்கள் வெற்றிக் கம்பத்தை எட்டிக் கொண்டிருக்கிறார்கள்" எனப் பேசியுள்ளார். இதனை விட வேறு எந்த முட்டாள்தனம் நமது தலைமைகளிடம் எஞ்சி உள்ளன?

நடைபெறும் அரசியலின் யதார்த்தம். அதன் பாரதூரமான உட்கிடை புரியாமல் நமது அரசியல் தலைமைகள்

செய்திகளாகும்.

புலிகளின் இந்த நிலைப்பாடானது எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை. அரங்கில் முஸ்லிம் சமூகம் வகிக்க வேண்டிய பாத்திரம் தொடர்பில் பெரும் கேள்விகளை எழுப்புகின்றன. அதாவது பேச்சுவார்த்தை அரங்கானது முஸ்லிம் தேசத்தையும் சமத்துவமாக நடாத்துவதற்கு இன்னும் அரசியல் ரீதியாக தயார் படுத்தப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் அது தற்காலிகமாக இருப்பினும் அல்லது நிரந்தரமாக இருப்பினும் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றும் அந்தஸ்த்துக்காக கடுமையாக உழைக்க வேண்டி உள்ளதை புலிகளின் இந்நிலைப்பாடு நமக்கு முன் வெள்ளிடை மலையாக எடுத்தியம்பி நிற்கிறது. இதுதான் உண்மை. இந்த உண்மையை நாம் ஜீரணித்தே ஆகவேண்டும்.

ஏனெனில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை சமத்துவமாகக் கொண்ட எந்தப் பேச்சுவார்த்தை அரங்கையும் ஏற்குப் போவதில்லை என தமிழ்ச் செல்வன் இச்சந்திப்பில் தெளிவுபடச் சொல்லியுள்ளார். அதாவது தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் பேச்சுவார்த்தையை முத்தரப்பாக (சிங்கள. தமிழ். முஸ்லிம்) மாற்றுவது முடியாது என்பதே புலிகளின் அரசியல் நிலைப்பாடாக உள்ளது.

ஆகவே. புலிகள் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பின். எதிர்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையில். அரசாங்கம் முஸ்லிம்கள் சமத்துவத்தரப்பாக இல்லாத பேச்சுவார்த்தையை புலிகளுடன் நடாத்த முன் வராதா? என்கிற கேள்வி நமக்கு எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதில் நம் அனைவருக்கும் தெரிந்ததுதான். ஏனெனில் சிங்கள அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நிர்ப்பந்தம் இருக்கின்றதே தவிர.



அனைத்தும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன "எப்படித் தொடர்ந்தும் நமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதென."

மேலே வலியுறுத்திய முதல் இரு அம்சங்களுக்குமான தொடர்பினையும் நாம் இந்த விடயத்தில் பார்க்க வேண்டியுள்ளது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடிப் பிரசன்னத்துடன் மிக வெளிப்படையாக இணங்கிக் கொள்ளப்பட்டு கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையே காலாவதியாகி விட்டது என விடுதலைப் புலிகள் சொல்லும்போது. அது எந்த வகையிலும் தங்களைக் கட்டுப்படுத்தாது என வீறாப்புப் பேசும்போது. ஸ்ரீலங்காவின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட: விடுதலைப் புலிகளால் ஏற்க முடியாது என தெரிவித்து வருகின்ற சமத்துவத்தரப்பு நிலைப்பாட்டை முஸ்லிம்கள் மிக இலகுவாக அடைந்து விட முடியுமா?

இங்கு பிரதானமாக வலியுறுத்த வருவதும். அதிகம் கவனிக்கப்பட வேண்டியதுமான விடயம் யாதெனில். "சமத்துவத்தரப்பு அந்தஸ்த்து" என்பது கனவுகளின் ராஜபாட்டை அன்று. அது தீராத உழைப்பினதும். போராட்டத்தினதும் பெறுபேறாகும். சமத்துவத்தரப்பு நிலைப்பாட்டை அரசியல் அரங்கில் உறுதிப்படுத்துவதற்கு முஸ்லிம் மக்களாகிய நாம் அதிகம் உழைக்க வேண்டியுள்ளோம்! எதிர்காலம் இந்த விடயத்தில் நமக்கு பல சவால்களைத் தரக்காத்திருக்கிறது. உறுதியான அரசியல் தலைமைகளினால் மட்டுமே அந்த இலக்கை அடைய முடியும்!

படமும். தகவலும்

மருதமுனை பி.எம்.எம்.ஏ. காதர்

## வாழைச்சேனை ஹிஜ்ரா நகர் முஸ்லிம்களின் காணிகள் அத்துமீறி அபகரிக்கப்படுகிறது

வாழைச்சேனை ஹிஜ்ராநகரைச்சேர்ந்த முஸ்லிம்களின் காணிகள் - இப்போது மிகத்திட்டமிட்டு அபகரிக்கப்பட்டு வருகிறது.

அச்சுறுத்தலால் இடம்பெயர்ந்த 250 முஸ்லிம் குடும்பங்களின் காணிகள் - இப்போது ஆதிக்கத்தரப்பால் குடியேற்றத்திட்டமாக மாற்றப்பட்டு வருகிறது.

காணிகளுக்குச் சொந்தமான பெண்கள். குழந்தைகள் ஆகியோர் இக்குடியேற்றத்தைத் தடுப்பதற்கு அப்பிரதேசத்திற்குச் சென்றபோது அச்சுறுத்தி திருப்பி அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## காத்தான்குடி மக்களின் முன்மாதிரி!

கடந்த வாரத்தில் நடைபெற்ற ஹர்த்தாலின்போது காத்தான் குடியில் வைத்து உடைக்கப்பட்ட இரண்டு தனியார் பஸ்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு காத்தான்குடி பொது நிறுவனங்கள் முன் வந்தது. இல்லையேல் மட்டக்களப்பு நகரில் உள்ள முஸ்லிம்களின் கடைகளை திறக்க முடியாமல் போகும் நிலை இருந்தது. நடைபெற்ற சம்பவத்திற்கு நஷ்டஈடு கோருபவர்கள் - முஸ்லிம்களுக்கு இதுவரை நடந்த சம்பவங்களுக்கு நஷ்டஈடு தர முன்வருவார்களா?

காத்தான்குடியைச் சூழவுள்ள எட்டுக்கும் மேற்பட்ட கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1985க்குப் பின் காத்தான்குடியைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவைகளுக்கு யார் தருவர் நஷ்டஈடு?

ஏ.எல். சுபைதீன். காத்தான்குடி.




### முஸ்லிம் பத்திரிகையாளர்கள் தமிழ்ச்செல்வனை சந்தித்த கதை!

மிகத்திட்டமிட்டு கிழக்கிலங்கை பத்திரிகையாளர் சங்கத்தை வைத்து ஒரு சுற்றுலா என்ற பெயரில் முஸ்லிம் பத்திரிகையாளர்களை வன்னிக்கு அழைத்துச் சென்று புலிகள் கூற வேண்டியதைக் கூறிப்போட்டார்கள். தாங்களாகவே பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டி பேச வேண்டிய விடயத்தை கிழக்கிலங்கை செய்தியாளர்கள் புலிகளைச் சந்தித்தபோது சொன்னதாக. மிக இலேசாகக் காரியத்தை முடித்து விட்டார்கள். படு கில்லாடிகள்தான் புலிகள்.

### எம்.பி பதவி வேண்டாம்! சேர்மன். தூதுவர் பதவி கிடைத்தால் போதும்!

திருமலையை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு முஸ்லிம் எம்.பிக்கள் தங்களுக்கு எம்.பி பதவி வேண்டாம். கூட்டுத்தாபனம். திணைக்களங்களில் சேர்மன் பதவி அல்லது வெளிநாட்டுத் தூதுவர் பதவி கிடைத்தால் போதுமென இப்போது எண்ணத் தொடங்கி விட்டார்களாம்!

### சோம தேரரின் மரணமும், அச்சந்தரும் சூழலும்.

கடந்த 12ஆம் திகதி ரஷ்யாவின் பீட்டர்ஸ் பார்க் மருத்துவமனையில் உயிர் நீத்த கங்கொடவில சோம தேரரின் மரணம் சம்பந்தமான சந்தேகங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லையாம். மரணச் செய்தி வந்த தினத்திலிருந்து அச்சம் தரும் சூழல் தென்னிலங்கை முழுவதும் பரவி உள்ளது. இவரின் மரணத்திற்கான காரணம் கிறிஸ்தவ மிஷனரி ஒன்றின் வேலை என கதைகள் உலாவருகின்றன. இதில் உண்மை. பொய் நமக்குத் தெரியாது! ஆனால் சோமதேரர் இருக்கும்போதும். அவர் இறந்த பின்னும் அவருக்கு ஒரு பலமான அரசியல் இருக்கிறது என தெரிகிறது.

சிங்கள மக்கள் மத்தியில் கணிசமான ஆதரவையும். அன்பையும் மகாநாயக்க தேரர்கள் பெறாத அளவிற்கு இவர் பெற்றுள்ளார் என்பது இப்போது அதிகமாக வெளிப்பட்டு நிற்கிறது. இதற்குப் பிரதான காரணம் தேரரின் அதிகமான சேவையும் மதக் கருத்துகளும்தானாம்!

### தேர்தல் உறுதியாகியதால் பேரம் பேசுதலும் தொடங்கிவிட்டதாம்!

நமது அரசியல்வாதிகள் உஷாரடைவது தேர்தல் வந்தால்தான். மக்களுக்கு என்ன நடப்பினும் அவர்களுக்கு அது இரண்டாம் பட்சமானது தான். இப்போது முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டத்தில் பல்வேறு பேரம்பேசும் பேச்சுகள் தொடங்கிவிட்டதாம். முழு மந்திரி. அரை மந்திரி. தேசியப்பட்டியல் தொடக்கம் இன்னும் பல பல கோரிக்கைகளாம்! விடிந்தால் அம்பலத்திற்கு வரும்தானே?

### ஹர்த்தாலும் - அது தொடர்பான பார்வையும்

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர் எழுச்சிக் குழுவால் நடாத்தப்பட்ட ஹர்த்தால் தொடர்பாக பல்வேறு திரிபுபடுத்தல் செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டன. அதில் பிரதானமாக இருந்த விடயம். ஹர்த்தால் நடாத்துவதால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் பற்றியதாகவே இருந்தன. உண்மையில் இது கவனிக்கப்பட வேண்டிய கருத்துத்தான். அது சரி. முஸ்லிம் தரப்பு நடாத்தும் ஹர்த்தாலுக்கு மட்டும்தானா இந்த நீதியும் பார்வையும்? ஏன் இந்த நயவஞ்சகம்?

### அஷ்ரஃப் கொலையை புலிகள் மறுக்கவுமில்லை, ஏற்கவுமில்லை.

வன்னியில் புலித்தேவனை முஸ்லிம் பத்திரிகையாளர்கள் சந்தித்தபோது பல்வேறு கேள்விகளைக் கேட்டனர். அவற்றில் ஒன்றுதான் மு.கா. தலைவர் அஷ்ரஃப் அவர்களின் கொலை தொடர்பானது. அக்கேள்விக்கு புலித்தேவன் அளித்த பதில் - ஏற்கவுமில்லை. மறுக்கவுமில்லைபோல் இருந்ததாம்!

## திருமலையில் முஸ்லிம் வர்த்தக நிலையம் திட்டமிடப்பட்டு குண்டுவைத்துத் தகர்ப்பு

கடந்த வெள்ளி இரவு திருமலை நகரில் அமைந்திருந்த "முபிதாஸ்" ஜவுளி மாளிகை சக்தி வாய்ந்த குண்டுகளால் வெடிக்கவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. திருமலை நகரின் வர்த்தக மையத்திலிருந்து முஸ்லிம்களை திட்டமிட்டு அகற்றும் நோக்கில் தொடரும் அச்சுறுத்தல் சம்பவங்களினால் திருமலை நகரிலிருந்து முஸ்லிம் வார்த்தகர்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றி உரிமையாளர் கூறும்போது தன்னுடன் தனிப்பட்ட யாருக்கும் பகை கிடையாது என்றும். திருமலை நகரில் எல்லா இன மக்களுடனும் அன்பாகப் பழகி மூன்று நிறுவனங்களை திறம்பட நடாத்தி வருவதாகவும். முஸ்லிம் இன அழிப்பை முன்னின்று நடாத்தி வரும் ஒரு அமைப்பே இக்குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்றும். குண்டுகளை திறமையாகக் கையாளுகின்ற ஓர் இயக்கமே இதைச் செய்துள்ளது என்பதற்கு இலங்கையில் எந்த சாட்சியுமே தேவையில்லை என்றும் தெரிவித்ததோடு தனது மூன்று நிறுவனங்களையும் உடனடியாக மூடிவிட்டு திருமலை நகரில் இருந்து வெளியேறப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இதயத்தின் உள்ளக் குமுறல்

அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கின்றேன்.

அன்புள்ள இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே உங்களின் சிந்தனைக்கு சில விடயங்கள். இன்று எமது நாட்டிலும் எமது சமூகங்களிலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நாம் அறிந்திருக்கின்றோம். இன்றும் அறிந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் அறிய வேண்டிய நிலையும் ஏற்படலாம். இதுதான் இன்றைய உண்மைகளாக இருந்து கொண்டிருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் காரணம் அந்நிய சமூகத்தினரால் எமது இஸ்லாமியச் சகோதரர்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்பதே. ஆனால் நாம் அதனை கைகட்டி, வாய்மூடி, செவியால் கேட்டும், கேளாதபடி எமது சிந்தனைகளிலே எடுக்காதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எமது இஸ்லாமியச் சகோதரர்கள் பலர் பொறுமையாக வாழ்ந்து கொண்டும் இருக்கின்றார்கள். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. ஆனால் நாம் பொறுமையின் சிகரமாய் உயர்ந்தும் நின்றோம். எமது பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்க வேண்டுமல்லவா? சகோதரா எமது இஸ்லாமியச் சகோதரர்களை துண்டம் துண்டமாக வெட்டியும், செங்குருதி பாய்ந்தோட கொலை செய்வதும், உடலை துளையிட்டு உயிரைக்குடிக்கும் நவீன ஆயுதங்களுக்கு இரையாக்குவதும் அந்நிய சமூகத்தினரின் அன்றாட விளையாட்டாக மாறிவிட்டது போலும்.

முஸ்லிம் சகோதரர்களாகிய நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் சகோதரர்களே என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எமது குடும்பத்திலே உள்ள ஒரு சகோதரன் கொலை செய்யப்பட்டால் அல்லது ஏதேனும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டால் எம்முடைய உணர்வுகளால் மனம் எப்படித்துடிக்கும். எமது இரத்தம் எப்படியெல்லாம் கொதிக்கும் இவையெல்லாம் ஏன் சகோதரர்களே உங்கள் மனம் உணர மறுக்கிறது. "குட்டக் குட்ட குனிகின்றவனும் முட்டாள். குட்டுபவனும் முட்டாள்" இவ்விடத்தில் குட்டு வேண்டி குனிகின்றவர்கள்
எமது
இஸ்லாமியரே.
நாம்
முட்டாள்களாக
இருக்கலாமா?

எத்தனையோ
இஸ்லாமியச்
சகோதரர்களை
கொலை செய்து உயிரைக் குடித்த



காட்டு மிராண்டித் தனமுடையவர்களை எமது அரசாங்கம் கண்டறிந்து தண்டித்ததா? இல்லையே. இவற்றுக்கெல்லாம் தீர்வு காண அரசியல்வாதிகளை நாம் நம்பியிருந்தது எமது மடமைதானே. சற்று சிந்தித்தால் உண்மை நன்கு புரியும் சகோதரர்களே. எமது உடமை, உயிர்களை எவ்வித காரணமுமின்றி இழந்தோம். இவற்றையெல்லாம் மீண்டும் இழக்க முஸ்லிம் சகோதரர்களே நீங்கள் தயாராகவா இருக்கின்றீர்கள்? நிச்சயமாக இல்லை என்பதே உங்கள் எல்லோரின் பதிலாக அமையும். அந்நிய சமூகத்தினருக்கு நாம் என்ன தீங்கு செய்தோம்? அவர்களைப் போல் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொண்டோமா? இல்லையே வாய்மூடியபடி சமாதானத்தை எதிர்பார்த்து ஒதுங்கி வாழ்ந்தோம். "எட்டாக்கனிக்கு கொட்டாவி விட்டதுபோல" சமாதானமும் எகிறிக்கொண்டு போக பலிக்கடாவாக எமது இஸ்லாமிய, சகோதரர்கள் மாண்டு கொண்டு போகின்றனர். எமது இனத்தையும், மதத்தையும் காக்க இன்றைய இளைஞர்கள், யுவதிகளின் கரங்கள்தான் ஓங்கி இருக்க வேண்டும். ஒவ்வொரு ஊர்களிலும் முஸ்லிம்களுக்கு ஏற்படும் அக்கிரமங்களுக்கு தீர்வுகாண அல்லாஹ்வின் பாதையில் போர் (ஜிஹாத்) செய்யப் புறப்படுங்கள். பிறர் கையை நம்புவதை விட எம் கரங்களே எமக்குதவி என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

கண்ணீர் சிந்தும் ஓர் இதயம்
அஸ்மியா பேகம். புதிய காத்தான்குடி

இவ்வுலக வாழ்வில் பணம், குடும்பம், வியாபாரம், விளையாட்டு, பொழுது போக்கு போன்ற இவைதான் அவசியம் என்று கருதாமல், எமது சந்தோசத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளாது பிறரின் சந்தோசத்திற்காகவும், எமது இன்பத்தை தியாகம் புரிந்து அல்லது இழந்து வாழ்வதிலும் ஓர் இன்பம் உண்டு. இவ்வுலக வாழ்க்கை ஆகக் குறைந்தது 65 வருடம்தான். சிலருக்கு அதை விடக் குறைவாகவும் விதிவிலக்காக அமைகின்றது. நிரந்தரமான வாழ்க்கைதான் மறுமை வாழ்க்கை. இதை நாம் விசுவாசித்தால் இவ்வுலக வாழ்வு மிகவும் அற்பமானது. இறைவனின் பாதையில் போர் செய்து மரணித்தாலும் மறுமையில் சுவர்க்கமே. அன்புச் சகோதரர்களே! படிப்பறிவு இல்லாத எத்தனையோ மக்கள் இன்று எமது சமூகத்தில் முஸ்லிம்களாக வாழ்கின்றனர். அவர்களுக்கு எமது இஸ்லாமிய வழிமுறைகளைக் கூறி ஒன்று திரட்டுங்கள்.

எமக்குள்ளேயே ஆர்வமும், துடிப்பும் உள்ள இளைஞர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். அவர்களை இலை மறை காயாக இருக்க விடாமல் அவர்களையும் இணைத்துக் கொண்டு நம்பிக்கையும், உறுதியும், பலமும் கலக்க உங்களின் போர் கொடியையும் ஏந்துங்கள். ஏன் அந்நிய சமூகத்தினரும் தனது சமூகத்தைக் காக்க புறப்படவில்லையா? நாம்தான் பொறுமையாய் இருந்து சாதிக்க நினைத்தோம் ஆனால் அதை ஏனையவர்கள் கோழைத்தனம் என எண்ணிவிட்டார்கள் போலும். எமது தூதரான நபி (ஸல்) அவர்கள் கூட எமது தீனையும், சமூகத்தையும் காக்க பல தடவைகள் போர் செய்யப் புறப்பட்டுள்ளார்கள். அவர்களின் உம்மத்தினர் நாம் அதில் சிறிதளவேனும் எம்மிடம் உருவாக்க வேண்டாமா? நாளைய சமூதாயத்திற்காக நாமும புறப்படுவோம். எங்களாலும் சாதிக்க முடியும் என்று நிரூபிப்போம். உயிர்போனாலும் இறைவனுக்காய் மரணிப்போம் எல்லாவற்றிற்கும் இறைவன் எம்மைப் பாதுகாப்பான். இன்ஷா அல்லாஹ் எமது சமூகத்தைப் பாதுகாக்கக்கூடிய சக்தி எம்முடைய இளைஞர்கள் கையில்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. நன்கு துணிந்தவர்கள் ஏனையோரை வழிகாட்ட ஒன்றுபடுங்கள். நிச்சயமாக எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கெல்லாம் துணை புரிவானாக!
(ஆமீன்)

---

## "ஆயுதங்களைக் கையிலேந்தி"



இரவுகள் மட்டும்
ஏனோ நீண்டுகிடக்கிறது
தொலைத்த உறவுகளை
தேடியலைவதற்காக-

♥♥♥

எங்கள் சொந்தங்கள்
நிர்க்கதியாக்கப்பட்டது
வேடிக்கையா,
வேதனையா,
சிலபேர் வேடிக்கை
சிலபேர் வேதனை

♥♥♥

தூக்கிவீசப்பட்ட
நாமெல்லாம்
துவண்டுபோவதுதான்
எஞ்சிக்கிடக்கிறது.
எத்தனை காலம்தான்
இத்தனை வேதனைகள்
இழந்து இழந்து
இழக்கவே நாதியில்லை
தற்றுயிராய் போனபிறகு
வாழத்தான்
என்ன இருக்கிறது?

♥♥♥

பிறர் -
சந்தோஷிக்கும்போது
நாம் வெந்து சாவதா -
உறவுகளும்
உயிர்ச் சொத்துக்களும்
காடையர் கைகளில்
நிர்க்கதிக்குள்ளாவது
ஓய்வதுதான் எப்போது?
'துண்டிப்புக்கள்'
இன்னும் வேரூன்றிய பிறகு
கிண்ணியா மட்டும்
விதிவிலக்கா.

♥♥♥

தூரக்கிடக்கும்
சகோதரச் சொந்தங்கள்
துடிப்பது கேட்கிறதா?
துவண்டு விடாதீர்கள்
'தொழுகை, பிரார்த்தனை'
இவையிரண்டும் தான்
எம் ஆயுதங்கள்
'இப்போது'
எமக்காய் வேண்டுங்கள்
கண்ணீர் சிந்துங்கள்
அல்லாஹ் ஏற்பான்.

♥♥♥

மொஹம்மட்டஷ்மீர்
குறிஞ்சாக் கேணி - 03

---

## வாரமொரு உரைகல்

# முஸ்லிம் சமுதாயம் இரண்டுபடலாகாது

"நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் (ஒற்றுமை எனும்) கயிற்றை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள்." (குர்ஆன் 3:103)

ஒரு சமூகம் தனது தூய இலட்சியங்களை வெற்றி கொள்வதற்கும், சீரிய பாதையில் தமது வாழ்வு நிலையை நிலை நிறுத்துவதற்கும், ஒன்று பட்டபண்பினைப் பேணிக் கொள்ளும் பங்கு அவசியமாகின்றது

ஒற்றுமை எனும் அம்சம் எந்தச் சமூகத்தில் இல்லையோ அச்சமூகம் கட்டமைப்பை இழந்து விடுவதுடன், தமது மக்களுக்கிடையிலிருந்து எழும் பிணக்குகளையும், அடுத்த சமூகத்தினர்களிடையிலிருந்து வரும் ஆக்கிரமிப்புகளையும் தடுத்து விடும் வல்லமையை இழந்து விடும் என்பது ஒரு யதார்த்தமான நிலைப்பாடாகும்.

ஒரு சமூகத்தில் 'அகச்சூழலில்' வேற்றுமைகள் பெருகிக் காணப்படுமாயின் அச் சமூகம் பலம் குன்றியதாகவும், தைரியமிழந்ததாகவும் மாறி விடும் அபாயம் நிறைந்தது. இந் நிலையானது ஓர் ஆரோக்கியமான சமூக அமைப்பின் உறுதிக்குப்பங்கமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கருத்து முரண்பாடுகளும், சிற்சில வேறுபாட்டுச் சிந்தனைகளுடன் கூடிய நடைமுறைமைகளும் ஒரு சமூகத்தினுள் தலைகாட்டுவதென்பது இயல்பான பக்கங்களாக இருப்பது மறைவன்று. இவ்வாறான சூழல் என்பது முஸ்லிம் சமூகத்தினுள்ளும் காணப்படுகின்ற ஒன்றாகவே இருக்கும். அதற்காக வேண்டி நிரந்தர பகைமை கொண்டதாகவோ, பாகுபாட்டை நிரந்தரமாகக் கடைப்பிடிக்கின்ற ஒன்றாகவோ ஆக்கிவிடலாகாது என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

கூட்டுறவு வாழ்வு நெறிக்குப்புறம்பான அனைத்து பக்கங்களையும் நாம் வெகு தூரமாக்கிக் கொண்டு, இணைந்தும், சேர்ந்தும் வாழ்வதற்கு நெருக்கமான வழிமுறைமைகளை இனங்கண்டு அவற்றின் அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ்வதற்கான வழிவகையில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் நாம் பலமுடைய சமூகமாக இருப்போம்.

கூட்டுப்பலமுடையவர்களாக நாமிருப்பதன் மூலமே அகச்சூழலிலும், புறச்சூழலிலும் எம்மை எதிர் கொள்கின்ற அனைத்து எதிர்ப்பினையும் முறியடித்து முன்னேறிச் செல்லக்கூடிய ஒரு கட்டமைப்பான சமூகமாகத் திகழ முடியும் என்பதையும் நாம் மறக்காதவரை வெற்றி நமதாகவே இருக்கும்.

மேற்கண்ட திருவசனத்தில் ஒற்றுமைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கும் கயிறு என்பது உறுதியானதும், இறுகியதுமான பலம் கொண்டதாகும். கயிறாக மாறுவதற்கு முன்னர் தனித்தனித்தும்புகளாக இருக்கும் போது அதற்கு எந்த விதமான பலமும் இன்றி வெறும் தும்பாகவே அது இருக்கின்றது. பல தும்புகள் பிணைக்கப்பட்ட கயிறாக மாறியதும் அது பலமுடையதாக அமைகின்றது.

ஆகவே, பிணைந்திருக்கும் ஒற்றுமையை நம்மிடையே வளர்த்துக் கொள்வதன் மூலம் பலஹீனங்களுக்குரிய அனைத்தையும் வெகு தொலைவில் ஆக்கி, உறுதியான சமூகமாகவும், எதனையும் எதிர் கொள்கின்ற சக்தியுடைய, முழுமையான கட்டமைப்புள்ள சமூகமாகவும் திகழ்வோம். அதனை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வோமாக.

- மருதூர் மெய்யொளி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திப்பிட்டிகொட பள்ளிவாசல், வீடுகள் அழிப்புச் சம்பவம்!

கடந்த திங்கட்கிழமை இரவு (22ம் திகதி) ஹுனுப்பிட்டி, வத்தளை திப்பிட்டிகொட வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றும், அதனைச் சூழ உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான 12க்கும் அதிகமான வீடுகளும் - சிங்களத் தரப்பால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. பள்ளிவாசல் முற்றுமுழுதாக தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், பள்ளியுனுள் இருந்த குர்ஆன் பிரதிகள், மார்க்க நூல்கள் அனைத்தும் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.

அங்கு ஏலவே நடைபெற்ற வன்முறையின் தொடர்ச்சியாகவே முஸ்லிம்களின் பள்ளிவாசலும், வீடுகளும் திட்டமிட்டு இலக்காக்கப்பட்டுள்ளன என்பதை அங்கு சென்றபோது எம்மால் உணரமுடிந்தது. பொலிசார் அங்கு கடமையில் இருந்தும் இம்மோசமான சம்பவத்தை தடுத்து நிறுத்த முயற்சிக்கவில்லை.

தென்னிலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்டு நடைபெற்றுவரும் சம்பவங்களின் தொடர்ச்சியான தாக்குதலாகவே இதனையும் பார்க்க வேண்டி உள்ளது. தென்னிலங்கையில் சிங்கள மக்களைச் சூழ வாழ்ந்துவரும் முஸ்லிம்கள் இப்போது அதிக பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. குறிப்பாக மத, கலாசார, பொருளாதார விடயங்களில் முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல் வன் உணர்வுகள் தூண்டி விடப்படுகின்றன. இன்றைய சமூக தரப்பில் இச்சம்பவங்களை நாம் குறைத்து மதிப்பிட முடியாது!

இச்சம்பவங்களின் தாக்கத்தை ஊடகங்கள் குறைத்தும் திரிவுபடுத்தியும் வெளியிட்டு வருகின்றன. மிக மோசமான இழப்புகளுக்கும் - அடையாளச் சிதைவிற்குமுள்ளாகியுள்ள அம்மக்களின் கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்! (பிரதம ஆசிரியர்)






திருக்குர்ஆன் பிரதிகள், மார்க்க நூல்கள் என்பன தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் வீடு ஒன்றுக்கு முன் கஞ்சா குடித்துக்கொண்டிருந்த சிங்கள வாலிபர்களை இங்கு வைத்து இந்த வேலை செய்ய வேண்டாம். இது சிறுபிள்ளைகள். பெண்கள் உள்ள இடம் வேறு இடத்துக்குச் செல்லுங்கள் என்று கூறிய முஸ்லிம் இளைஞனை, சிங்கள வாலிபர்கள் தாக்கியுள்ளனர். பதிலுக்கு அங்கு நின்ற முஸ்லிம் இளைஞர்களும் சிங்கள வாலிபர்களைத் தாக்கியுள்ளனர். பிறகு பத்து நிமிடங்கள் கழித்து சுமார் 50 சிங்கள இளைஞர்கள் வந்து பாதையால் சென்ற முஸ்லிம்களின் தொப்பிகளைக் கழற்றி அடித்து காயப்படுத்தியுள்ளனர். மறுநாள் பாதையால் சென்ற முஸ்லிம் இளைஞன் ஒருவன் மீது ஆட்டோவால் வேண்டுமென்றே மோதி, இன்னும் அரை மணித்தியாலத்தில் வேலையைக் காட்டுவோம் பாருங்கள் என்று கூறிச் சென்றுள்ளனர். அதற்குப் பிறகுதான் அவர்கள் கூட்டமாக வந்து கலவரங்களில் ஈடுபட்டுள்ளனர். அந்நேரம்தான் அங்கு கிரனைட் வெடித்துள்ளது. பொலிஸார் டில்சான் என்ற வாலிபரை துன்புறுத்தி தான்தான் கிரனைட் எறிந்ததாக ஒப்புதல் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற அன்று பகல் கிரிபத்கொட பொலிஸாரும், வத்தளை பொலிஸாரும் இங்கு இருந்தார்கள். ஆனால், பள்ளிவாயலை அவர்கள் எரித்து உடைத்து நாசப்படுத்தும்போதோ வீடுகளையும், பொருள்களையும் உடைக்கும்போதோ பொலிஸாருக்கு நன்கு தெரிந்திருக்கின்றது. முஸ்லிம் கலாசார அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களிடம் சொன்னபோது அமைதியாக இருங்கள் என்று சொன்னார். ஆனால் இதுவரை எந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களும் இங்கு வரவில்லை. சிங்கள வானொலி, தொலைக்காட்சி, பேப்பர்களில் முஸ்லிம்கள்தான் இச்சம்பவங்களுக்கு காரணம் எனச் சொல்கின்றனர் எங்களுக்கு நடக்கும் அநியாயங்களுக்கு என்ன செய்வது?

ஆரம்பத்தில் நடந்த தாக்குதல் சம்பவத்தின் போது மரணமடைந்த பானு என்ற சிங்கள வாலிபருடைய சடலத்தை ஈமைக்கிரிகைக்காக எடுத்துச் சென்ற பின் பொலிஸாரால் காவல் போடப்பட்டிருந்தது. மாலை 5.45 அளவில் சம்பவம் நடந்தபோது பொலிஸார் இருந்தபோதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த பள்ளிவாயல் உடைப்பு சம்பவத்தில் சிங்கள இனவாதக் காடையர்களுடன் சேர்ந்து பௌத்த பிக்கு ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளார். சம்பவத்திற்கு முன்னரே சவம் எடுக்கப்போகின்றார்கள். "இங்கு நீங்கள் இருந்தால் பிரச்சினை வரும். நீங்கள் இங்கு இருக்கவேண்டாம்" என்று பொலிஸார் எங்களை அனுப்பிவிட்டனர். நாங்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து அக்பர் டவுன் பள்ளி அருகில் இருந்தபோதே அவர்கள் இந்த அநியாயத்தைச் செய்துள்ளார்கள். நாங்கள் இங்கு இல்லாதது அவர்களுக்கு சாதகமாகப்போய்விட்டது. சம்பவத்தை அறிந்தவுடன் நாங்கள் இங்கு வரமுயன்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையால் எங்களால் உடனே வரமுடியாமல் போய்விட்டது. ஏற்கனவே அன்று மதியம் 2.00 மணியளவில் முஸ்லிம் கலாசார அமைச்சரிடமும், பொலிஸாரிடமும் பள்ளிக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்படி கேட்கப்பட்டிருந்தும் மேற்படி சம்பவத்தை தடுத்து நிறுத்த அவர்களால் முடியாமல் போய்விட்டது. பொலிஸ் தலைமை அதிகாரியைத் தொடர்புகொண்டு அவர்களைச் சந்தித்து விடாப்பிடியாக பள்ளியைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பிற்பாடு பொலிஸ் பாதுகாப்புடன் பள்ளியை வந்து பார்த்தோம். பள்ளி சம்பூரணமாக உடைத்தும் எரித்தும் நாசமாக்கப்பட்டிருந்தது.

இந்த பள்ளி 1962ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை அவர்களால் இந்தப் பள்ளிக்கு இடைஞ்சல்தான். இந்தப் பள்ளிக்கு முன்னால் உள்ள புத்தர் சிலைக்கு நாங்கள் ஒரு கல்லைக்கூடத்தானும் வீசியிருக்கமாட்டோம். இந்தப் பள்ளியை இங்கிருந்து அகற்றுவதற்குப் பலமுறை பெட்டிசன் அடித்து பள்ளியின் கட்டுமான வேலைகளை நிறுத்த பல வழிகளில் அவர்கள் முயன்று வருகின்றனர்.




உடைத்து நொறுக்கப்பட்ட பள்ளிவாசலின் தோற்றம்

இது ஒரு நாசகார வேலை. இது ஒரு மிருகத்தனமான செயல். இந்த நாசகாரச் செயலுக்குத் தகுந்த சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எல்லா அரசியல் வாதிகளுக்கும் சம்பவம் தொடர்பாக நாங்கள் அறிவித்திருந்தும் இதுவரை எந்த அரசியல் வாதியும் இங்கு வரவில்லை. நாங்கள் மிகுந்த ஏமாற்றத்தோடு உள்ளோம். அரசாங்கத்தின் பாதுகாப்பில் எந்த அர்த்தமுமில்லை. பாதுகாப்புக்கு மத்தியில்தான் இவ்வளவு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. பொலிஸார் கூட ஒருதலைப்பட்சமாகவே ஆதரவு வழங்குகின்றனர். எங்களின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தல் உள்ளது.

# நடப்பதை நாம் விளங்கிக் கொள்கிறோமா?

முந்தநாள் இரவு நாங்கள் சிங்கள இளைஞனின் சவம் எடுக்கும்போது ஏதாவது நடக்கும் என்று பயந்து இங்கிருந்து சென்றோம். பள்ளிவாயலை அவர்கள் மிச்சம் காலமாகவே குறிவைத்துக்கொண்டிருந்தார்கள். பள்ளிக்கு ஏதாவது நடக்குமென்று நாங்கள் மிகவும் பயந்துபோய்த்தான் இருந்தோம். எங்கள் பிள்ளைகள் தொழ பள்ளியில்லை. அவர்களுக்கு குர்ஆன் ஓதுவதற்கு மத்ரஸா இல்லை. உங்களின் வீட்டிற்குமுன் வந்து யாராவது கஞ்சாக் குடித்துக்கொண்டிருந்தால் நீங்கள் விடுவீர்களா? அவர்கள் கொண்டு வந்த கிறேனைட்தான் வெடித்துள்ளது. பள்ளி எப்போது கட்ட தொடங்கப்பட்டதோ அன்றிலிருந்து அவர்கள் பள்ளிக்குள் சிறுநீர் கழிப்பதும் மலம் கழிப்பதுமாக பள்ளியை அசுத்தப்படுத்தி வந்திருக்கிறார்கள். நார்சா கொண்டு சென்ற பாத்திரத்தின் மீது சிறுநீர் கழித்துள்ளனர். பலமுறை எனது வாப்பாவினதும், பிள்ளையினதும் தொப்பிகளைக் கழற்றி மிரட்டியுள்ளனர். இரண்டு நாட்களுக்கு முன்பு வத்தளை பொலிஸார் வந்து எங்களை எங்கும் செல்லவேண்டாம் என்றும் பாதுகாப்புக்கு நாங்கள் உத்தரவாதம் என்றும் கூறிச்சென்றார்கள். ஆனாலும், நாங்கள் இரவுகளில் வேறு இடங்களுக்குச் சென்று தங்குகின்றோம். எங்களுக்கு பள்ளி வேண்டும். அவர்களுக்கு பௌத்த கோயில்கள் எவ்வளவு பிரதானமோ அதேபோல எங்களுக்கும் எங்கள் பள்ளி. எங்காவது பௌத்த கோயில்களை நாங்கள் உடைத்ததாக கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? ஆனால் எங்கு பிரச்சினை நடந்தாலும் அவர்கள் பள்ளியில்தான் கைவைப்பார்கள். கங்கொடவில சோம தேரரின் மரணத்திற்கு கொடிகட்ட வந்த சிங்கள இளைஞர்களை முஸ்லிம் இளைஞர்கள் தடுத்து தாக்கியதால் பிரச்சினை உருவானதென்று தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன. உண்மையில் அவர்கள் கொடி கட்ட எனது தம்பிமார்களும்கூட உதவி செய்தனர். இது கஞ்சா குடித்ததால் வந்த பிரச்சினை. அவர்களின் தன்சலவின் போது அவர்களுக்கு பொருள் பண உதவி வழங்குவது யார்? நாங்கள்தான். ஒருபோதும் நாங்கள் அவர்களிடம் சென்றது கிடையாது. அவர்கள்தான் எங்களிடம் ஆதரவு தேடி வருவார்கள். எங்கள் பிள்ளைகள் இரவு, பகலாக மண் சுமந்து வேலை செய்து கட்டிய பள்ளி இது.





பள்ளிவாசல் ஹவ்ழு உடைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் மற்றுமொரு நாடகம் அம்பலமாகியது!

மூதூர் செய்தியாளர்

மூதூரில் நோன்புப்பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் சில புலிகள் முஸ்லிம்களின் கடைகளில் முஸ்லிம்களின் அடையாளங்களுள் ஒன்றாக விளங்கும் தொப்பிகளை வாங்கிச் செல்லமுற்பட்டனர். கடைக்காரர் "ஏன் இந்தத் தொப்பியைக் கேட்கிறீர்கள்" என்றபோது "விற்கத்தானே வச்சிருக்கிறியள். காசுதாறம் தரவேண்டியது தானே" என்று புலிகள் முறைக்க, ஏற்கனவே, ஹிஜாப், அணிந்து சென்று இராணுவத்தினரை தாக்கிவிட்டு புலிகள் முஸ்லிம் பிரதேசங்களுக்கூடாக ஓட இராணுவத்தினர் முஸ்லிம் பெண்களைத் தொல்லைப்படுத்தியதெல்லாம் அப்போது ஞாபகத்துக்கு வர "தொப்பி தரமுடியாது" எனக் கடைக்காரர் கறாராகக் கூறிவிட்டார். "நீ தெராட்டா என்ன தொப்பி கிடைக்காதெண்டு நெஞ்சியே" எனப் புலிகள் உறுமிவிட்டுச் சென்றன. முஸ்லிம்களின் கலாசார அடையாளங்களுடன் தாக்குதல் நடாத்தி முஸ்லிம்களையும், இராணுவத்தினரையும் மூட்டிவிடும் படலத்தை புலிகள் தற்போது மீண்டும் ஆரம்பித்துவிட்டனர் என்பதை அறிந்த மக்கள் விழிப்படைந்தனர்.

அன்று 58ஆம் கொலனி ஜின்னாநகர் வாய்க்காலில் இராணுவத்தினர் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது (உயிர்போகுமளவுக்கு சுட முடியுமாயினும்) ஒரு வீரனின் தோள்பட்டையைத் துப்பாக்கி வேட்டு துளைத்துச் செல்கிறது. தோளைப்பிடித்துக் கொண்டு வெடிவந்த திசையைப்பார்க்க அங்கே முஸ்லிம்கள் போல வேடமிட்ட புலிகள் சுட்டுவிட்டு முஸ்லிம் பிரதேசத்துக்கூடாக ஓடுவதை அவ்வீரர் காண்கிறார். அங்கு ஓடிவந்த முஸ்லிம்கள் அவ்வீரரை உடன் சிகிச்சைக்காக எடுத்துச் செல்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பெண் ஒருவர், "முஸ்லிமாக்கள் ஆமியச்சுட்டுப் போட்டினம்.... முஸ்லிமாக்கள் ஆமியச் சுட்டுப்போட்டினம்" என்று உரத்துக் கத்திக்கொண்டு ஓடுகிறார். அதற்கடுத்த கட்டமாக கிளிவெட்டியில் இருந்து மூதூர் நோக்கிச் சென்ற வாகனங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புலி வீதம் ஏறுகின்றனர். "முஸ்லிமாக்கள் ஆமியச்சுட்டுப்போட்டாங்கள் தெரியுமே...." என வாகனத்துள் வதந்தி பரப்புகின்றனர். வாகனம் தோப்பூர் சந்தியை அண்மித்ததும் இறங்கிக் கொள்கின்றனர். (இச்சந்தர்ப்பத்தில் ஏறி இறங்கியமைக்கு காசுகேட்ட நடத்துனருக்கு அறைவிழுந்தது வேறுகதை) அப்போது ஜின்னா நகரை அண்மித்துள்ள இராணுவமுகாம் பொறுப்பதிகாரி அம்முஸ்லிம் பிரதேசத்தை ரவுண்டப் செய்து முஸ்லிம் ஆண்களை வடிகட்டி எடுத்து வதைக்கிறார். பின்பு, 'முஸ்லிம்கள்தான் அவ்வீரரைச் சுட்டனர்' என (பொய்) தகவல் வெளியிடுகிறார். காயப்பட்ட வீரரிடம் வாக்குமூலம் பெறாமல்.

ஏற்கனவே அவ்விராணுவமுகாம் பொறுப்பதிகாரியின் பிறழ்வான நடத்தையை அப்பிரதேச முஸ்லிம்கள் கண்டித்ததனால் அம்மக்களோடு விரோதம் பூண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே புலிகளின் மேற்படி முஸ்லிம விரோதச்செயற்பாட்டில அவ்வதிகாரியின் ஒத்துழைப்பும் இருக்கிறது என்பதை இலகுவாக உணர்ந்து கொண்ட மக்கள், அடுத்தடுத்து நடக்கப்போகும் ஆபத்தை உணர்ந்து இடம்பெயரத் தொடங்கினர். இதனால் அவ்விராணுவ பொறுப்பதிகாரியின் பொறுப்பற்ற செயலைக் கண்டிக்கும் முகமாக தற்போது அவர் (தண்டனையாக) இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்.

ஏனெனில், காயப்பட்ட வீரரான லான்ஸ் கோப்ரல் ஜயசிங்க ஆராச்சிகே சரத்குமார (வயது 25) வின் வாக்குமூலம் பின்வருமாறு காணப்படுகிறது. "என்னைப் புலிகள்தான் சுட்டார்கள். முஸ்லிம்கள் போல வேடமிட்டிருந்தாலும் அவர்களை நான் நன்கறிவேன். அதேவேளை உரியநேரத்தில் என்னைச் சிகிச்சைக்காக எடுத்துச் செல்ல முஸ்லிம்கள் உதவியிருக்காவிட்டால் அதிக ரத்தப் போக்கினால் இறந்திருப்பேன்" என்றார். இதில் பரிதாபம் என்னவென்றால் இந்நாட்டில் இராணுவவீரனின் வாக்குமூலத்தை பொலிஸார் பின்வருமாறு திரித்து தகவல் வெளியிட்டனர். அதாவது "இராணுவவீரர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் எனக் கூறப்படுகிறது." (M.O.U க்குப்பின் புலிகளுக்கெதிரான முறைப்பாட்டை ஏற்கவேண்டாமென்ற பிரதமரின் பணிப்புரையின்படி முஸ்லிம்கள் மாத்திரமல்ல இந்நாட்டின் பாதுகாப்புக்காகப் பாடுபடும் இராணுவ வீரரும் செல்லாக்காசுதான் போலும்.....)

யதார்த்தம் இவ்வாறிருக்க, இனி, தமிழர் ஊடகங்களின் புனைகதை எவ்வாறிருந்திருக்கும் என்பதைச் சொல்லித் தெரியத்தேவையில்லை. "இராணுவவீரர் முஸ்லிம் பிரதேசத்துக்கூடாக சைக்கிளில் பயணித்தாராம் அப்போது வெடிப்பட்டதாம்......" என்று பின்னிவிட்டார்கள் போங்கள்....

# பொலன்னறுவையில் புதிய தமிழ் மொழி மூல நியமன ஆசிரியர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு

மேற்படி இச்செயலமர்வின் கருத்தரங்கானது கடந்த 18.12.2003 தொடக்கம் 21.12.2003 வரை பொ/ முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வினை பொலன்னறுவை கல்வி வலயத் தமிழ்ப்பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.எச்.எம். முஸ்தபா நடாத்தி வைத்தார். இக்கருத்தரங்கிற்கு விசேட அதிதியாக வடமத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. திஸாநாயக்க கலந்து சிறப்பித்தார். மேலும் ஆரம்பக்கல்விப் பாட இணைப்பாளர் எம்.எஸ். அஹமட், தமிழ்மொழி ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ. ஈஸாலெவ்வை, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் எஸ்.டீ. உபாலி, யு.டீ. சிறிபால, முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் ஐ.ஏ. உசனார், அல்-ஹிலால் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.எல். புஹாரிதீன், செவனப்பிட்டிய வித்தியாலய அதிபர் ராஜநாயகம் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இவ்வாறான கருத்தரங்கு பொ/ முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திவுளானை நபீல்

**இளைஞனே!... விழித்துக் கொள்.**

இளைஞனே!
எதிரியின் - பக்கமிருந்து,
உனக்கு,.... பலத்த அடிகள்
இடியாக - விழுவதற்குள் !!
விழித்துக் கொள்,

இளைஞனே! - உன், இமைகளின்,
தளர்வுபார்த்து, தலையெடுக்க,
தறிபார்க்கிறார்கள்,
அதற்குள்! ....... விழித்துக் கொள்

இளைஞனே!
சோர்வுகளுக்கு,.....
சோடை - போயிடாதே!
சதிகளுக்கெதிரான,.....
சவுக்கடி
சடுதியாகவேண்டும்.
அதற்கும்,...... நீ
விழித்துக்கொள்,

வளர்பிறை. கல்முனை - 06

எத்தனை தடவை நமது தலைவர்கள் ஏமாற்றியபோதும் அதனை கருத்தினில் கொள்ளாது தொடர்ந்தும் ஏமாறுவதற்கு நமது பொதுஜனம் கங்கணம் கட்டி ஆதரவளிப்பதானது எமது மக்களின் குற்றமேயன்றி ஏமாற்றுபவர்களின் குற்றமல்ல. ஏனெனில் ஏமாற்றுவது அவர்களின் தொழில்களில் ஒன்று. அவர்களைப்பொறுத்தவரை மக்களை ஏமாற்றுவது கஞ்சியுடன், பேரீத்தம் பழம்தின்பது போன்றதாகும். தலைவர்களான தமது நடவடிக்கைகளால் அப்பாவிகளான பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றார்களே சற்று மீட்டிப்பார்ப்பீர்களேயானால் எத்தனை ஏமாற்றுக்களைச் செய்திருப்பீர்களென்று தெரியும். அத்தனைக்கும் நீங்கள் பதில் சொல்லியாகவேண்டும்.

தலைவர்களே! நீங்கள் ஓடி, ஓடிச்சேர்த்த கோடான கோடிச் சொத்துக்களில் ஒரு குறிப்பிட்ட தொகையே உங்களுக்குச் சொந்தமானது. ஏனையவையனைத்தும் உங்களால் ஏமாற்றப்பட்டு வரும் பொது ஜனங்களுக்குரியவையாகும். அம்மக்களின் சொத்துக்களை உங்களது வாரிசுகளுக்கு உரித்துடையதாக்கி விட்டு இவ்வுலகை விட்டும் மறைந்தாலும்,

# ஏமாறுவதற்கென்றே நாம் இருக்கும்போது ஏமாற்றுபவர்களை எப்படி குற்றம் சொல்ல முடியும்?

என்று அவர்கள் நினைப்பார்களேயானால் இன்று நாட்டில் இனப் பிரச்சினையே தோன்றியிருக்காது.

போஸ்டர் ஒட்டுவதற்கும், பதாதை, பந்தல்கட்டுவதற்கும், தோளின் மேல் தூக்கி வைத்து தக்பீர் சொல்வதற்கும் இன்னுமே எம்மவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள். எனவே எத்தனை தேர்தல்கள் வந்தாலும் நாங்கள் இன்னும் இன்னும் ஏமாறத்தயாராகவே இருக்கின்றோம் என்பதனையே இது காட்டுகின்றது. ஆனால் ஒன்றை மட்டும் மறந்துவிட்டோம். நாங்கள் ஏமாறுவ்தற்கு எமக்கு உரிமைகள் இருக்கின்றன. எனினும் எமது வருங்காலச் சந்ததிகளையும் ஏமாளியாக்குவதற்கு எமக்கு எந்த விதமான உரிமையுமில்லையென்பதை ஏமாறும் நாங்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.



நாங்கள் ஏமாறுவதற்கு சிலருக்கு வெகுமதிகள், சிலருக்குப் பதவிகள், சிலருக்குப் பட்டங்கள். சிலருக்குக் கொந்தராத்துக்கள் என பற்பல காரணங்களும், சுயலாபங்களும் இருக்கின்றன. ஆனால் இந்த அற்பச்சந்தோசங்களால் நமது வருங்கால சமுதாயத்தினரை அடகு வைக்கும் கைங்கரியங்களை நாங்கள் மறைமுகமாகச் செய்கின்றோமென்பதை நினைவுறுத்திக் கொள்ளவேண்டும். தமது காரியங்கள் கச்சிதமாக நிறைவேற காதும் காதும் வைத்தது போல் காரியமாற்றும் எமது முஸ்லிம் பெருந்தகைத்தலைவர்கள் தங்களை யாரும் கண்டு கொள்ளவில்லையென மனப்பால் குடித்து வீராப்புப் பேசினாலும் நம்மைப் படைத்த அல்லாஹ் நீங்கள் செய்யும் அனைத்து "திருவிளையாடல்களையும்" பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்பதை மறந்து விடலாகாது.

அவனிடம் உங்களது கைலஞ்சங்கள் செல்லாது. நீங்கள் இதுவரை செய்த, தற்போது செய்கின்ற அனைத்து திருகுதாளங்களுக்குமான தண்டனைகள் கிடைக்குமென்பதை மறந்திருந்தாலும் நினைவுபடுத்துகின்றோம். நீங்கள் கடந்த காலங்களில் மக்களிடம் மேடைக்கு மேடை பேசிக்கொடுத்த வாக்குறுதிகளை மறுஉலகில் நீங்கள் பதில் சொல்லியேயாக வேண்டும். மேலும் உங்களின் வாரிசுகளும் பொது மக்களின் சொத்துக்களை (ஹறாமாகத்) தின்ற பாவத்தினை சுமக்க நேரிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

தலைவர்களே! நீங்கள் ஆட்சியைக்கவிழ்க்க, இனப்பிரச்சினையைத் தீர்க்க தலைவர் முதல் உறுப்பினர் வரை ஆளுக்கு இவ்வளவென்று கோடிகள் பல பெற்றதாக உங்களுக்குள் இருந்து வெளியான ஆட்களே கூறித்திரிகின்றனர். ஆனால் ஏதும் யாம் கண்ணால் கண்டதில்லை. ஆனால் அவைகட்டுக்கதைகளென்று ஒதுக்கிடவும் முடியவில்லை. ஏனெனில் அவைகளை நிரூபிக்கும் தோரணையில் உங்களின் அரசியல் நடவடிக்கைகள் இருக்கின்றன. "பேசுவது சகோதரத்துவம்" செய்வது "துரோகத்தனம்" அத்தனைக்கும் எடுத்துக்காட்டு உங்களது செயல்பாடுகள் இதனை மறுப்பீர்களா?

எங்கள் தலைவர் போல் யாருண்டு! எமது நாட்டிலே சேவைக்கு என பெருமைப்பட்டு எழுதிவந்தோம். அந்த வரலாற்றை எங்கள் தலைவர் போல் யாருண்டு "வாங்குவதற்கு" "பேரம் பேசுவதற்கு" என்று எள்ளி நகையாடும் நிலைக்கு மாற்றிவிட்ட பெருமை உங்களைப்போன்றவர்களையே சாரும். மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கு தொடராக தலைகுனிவை உண்டாக்கி தலையினில் குட்டவைத்தும், எட்டி உதைப்பதற்கும் களம் கொடுத்த வரலாற்றுச்சிறப்பும் உங்களுக்கேயுரியதாகும்.

தலைவர்களே! எமது மக்கள் ஏமாற மீண்டும் தயாராகவே உள்ளார்கள். அவர்கள் ஏமாற ஏமாற அவர்களின் பாவங்கள் குறைகின்றன. ஆனால் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக நீங்கள் ஏமாற்ற ஏமாற்ற உங்களின் தலைகளில் பாவங்கள் டொன் கணக்கில் ஏறிக்கொண்டேயிருக்கும். ஆனால் முடிவு? இப்படியொரு தலைவன் இருந்தான் என மறைந்த மாபெரும் தலைவரின் புகழ்பாடும் மு.காங்கிரஸ் வரலாற்றில், இப்படியும் ஏமாற்றும் பேர்வழிகளும் இருந்தார்கள் என்று வசைபாடும் வரலாறும் எழுதப்படும். அந்நிலையை நீங்கள் விரும்புகின்றீர்களா?

எம்.எல்.எம். முஸ்தபா - மருதமுனை

## பரிசளிப்பு விழா

வெல்லம்பிட்டி, ஒருகொடவத்தை அல் மஜீத் முஸ்லிம் நலன் புரிச் சங்கம், அதன் வருடாந்த போட்டியையும் பரிசளிப்பு விழாவையும் அண்மையில் வெகு விமர்சையாக நடாத்தியது. குர்ஆன் மத்ரஸா, அஹதியா பாடசாலை, மற்றும் சுற்று வட்டாரத்தில் வாழ்கின்ற அனைத்து இன மாணவ, மாணவியர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

சங்கத் தலைவர் டி. நயிம் தலைமையில் நடைபெற்ற விழாவுக்கு பிரதம அதிதியாக மேல்மாகாண சபை உறுப்பினர் சாஹூல் ஹமீத் முஹம்மத் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் பீ.எம். முர்ஷிதீன், சாஜித் அமீர், ரிஸ்வான் பாயிஸ், எம்.ஜே.எம். பிர்தவுஸ் றுஸானுதீன், சமூக சேவையாளர் அப்துல் ரஸாக் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். செயலாளர் பாதில் பாயிஸின் நன்றியுரையுடன் 250 மாணவ மாணவியர்களுக்குப் பாடசாலைச் சீருடையும் அப்பியாசக்கொப்பிகளும் வழங்கப்பட்டது.

தகவல் : ஏ.எஸ்.எம். சப்றாஸ். மாளிகாவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சிவப்புக் கவிஞன்

பாலைநகர் ஜிஃப்ரி

மயான வெளியாய்
மாறிப் போன எனதூரில்
உயிர் பிழியப்பட்ட மைந்தரின்
நினைவினைப் பாடுவேன்



அவன் வாலிபக் கூண்டில்
கனவினைச் சுமந்தபடி
அவர்களின்
அழைப்பேற்றேகியவனை
அவர்கள் உயிருடனோ,
அன்றில் பிணமாகவோ
அனுப்பிராத கொடுமையின்
நிகழ்வினைப் பாடுவேன்
அமைதி பூத்த தெருக்களில்
ஆரவாரங்களுடெழுந்த
கலவரங்களால்
காவு கொள்ளப்பட்டதவனுயிர்.

முழுமையாய் சிதைக்கப்
பட்டிருந்தவன்

தேகத்தின் புலன்களெல்லாம்
புடுங்கப்பட்டிருந்த அவலத்தை
ஓர்சிவப்புக்கவிதையாய் தருவேன்.
விரல்களில் வளரும்
நகங்களைப்போல்
நெஞ்சினில் வளரும் அவன்
நினைவினைக் கூறுவேன்.

ஜனாஸாவில் கடைசிச்
சடங்கையேனும் அவனுக்கு
நிகழ்த்த முடியாது போன
துயரத்தை
அவன் சகோதரனையும்
சேர்த்துப் புதைத்த அவலத்தை
வன்மமாய் உயிர் பறிக்கப்பட்ட
அப்பாவிகளின் கூக்குரலை
சிவப்புக்கவிஞனாய்ப் பாடு -
வேன்.

அவனது தாயின் கண்ணீருக்கு
அவன் தந்தையின் துயரத்துக்கு
அவன் சோதரரின் ஓயாத
அழுகைக்கு
அவன் நண்பர்களின்
தோய்ந்த முகங்களுக்கு

ஓர் பிரசையை இழந்து விட்ட
அவன் சமூகத்துக் கென்னபதில்
துப்பாக்கி வேட்டுக்களும்-
கிரனைட் வீச்சுக்களுமா?

## 'ஆப்ரஹாவின் அழிவு' ஒளிப்பேழை அறிமுகம்

எமது முஸ்லிம் உம்மத் பின்னடைவை நோக்கிக் கொண்டு சென்று கொண்டு இருக்கும் இவ்வேளையில் நாம் மிகக் கவனமாக சிந்தித்து செயல்பட வேண்டியதன் அவசியம் எம்மனைவரையும் சாரும். தென்னிந்திய சினிமா கலாசாரத்தில் மூழ்கி இருக்கும் இளைஞர்களை அதன் பிடியில் இருந்து எவ்வாறு வெளியே




- மூதூர் ஜஸ்ரி -

கொண்டுவரமுடியும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், அண்மைக் காலங்களில் இஸ்லாமிய மாற்றீடு "ஆப்ரஹாவின் அழிவு" என்ற ஒலி, ஒளிப் பேழை வெளிவந்துள்ளது.

ஆப்ரஹாவின் படை கஃபாவை தாக்க வந்த சம்பவத்தையும், அல்லாஹ் அதனை எவ்வாறு பாதுகாத்தான் என்ற சம்பவத்தையும் கார்டூன் சித்திர வடிவில் அமைந்த திரைப்படமாக வந்துள்ளது. இதனை "சூறதுல் ஃபீல்" அழகாக எடுத்துக் கூறுகிறது. எமக்கானதொரு இலத்திரனியல், அச்சுப்பதிப்பு ஊடகம் இல்லை என்று ஏங்கும் எமக்கு இந்த ஒலி, ஒளிப்பேழை ஆறுதலையும், ஆதங்கத்தையும் ஓரளவு நிறைவு செய்வதாக உள்ளது. இஸ்லாமிய வாழ்க்கை நெறிக்கோட்பாட்டில் புகுந்துள்ள மடமைகளையும், மூட நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து எமது தஃவாப் பாதையில் பல தரப்பட்ட மக்களையும் ஒன்றிணைத்து செயற்படும்போது வெற்றி எமக்கே.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

**நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!**

கேள்வி - பார்வை ஞானமுடையவராக காழி இருக்கவேண்டும்.

காழி நீதவான் என்பவர் "முஜ்தஹித்" தேடலுடையவராக இருக்கவேண்டும். ஒரு வழக்கை அவசரமாக விசாரித்து தீர்ப்பு சொல்லாமல், அதுபற்றிய யதார்த்த நிலையை நன்கு புலனாய்ந்து, விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டும். இப்னு கையிம் என்ற அறிஞரின் கூற்றுப்படி குர்ஆனினதும் ஹதீஸினதும் சட்டவாக்கங்களில் நன்கு தேர்ச்சிபெற்று அதன் நிழலில் நின்று தீர்ப்பெழுதுபவரே உண்மையான 'முஜ்தஹித்' ஆகும்.

சம்மந்தப்பட்டவையாகவே இருக்கின்றன. இத்தகைய பிரச்சினைகளை விசாரிக்கும் குழு பெரும்பாலும், இஸ்லாமிய சட்டவாக்கத்தில் போதிய பரிச்சயமும், அறிவும் அற்றவர்களாகவே இருப்பர். இஸ்லாமிய சட்டத்தில் ஒரு குற்றத்திற்கு இன்ன தண்டனை என்ற குறிப்புகள் இருந்தாலும், அதனை புறந்தள்ளி விட்டு, "ஊர்வழக்கப்படி" தீர்ப்புச் சொல்லும் பஞ்சாயித்து மன்றங்களாகவே பள்ளிவாயல் நியாய சபைகள் மாறியுள்ளன. இத்தீர்ப்பில் அதிருப்தியுறும் முறைப்பாட்டாளர்கள், மீளவும் பொலிஸ் நிலையங்களை நாடவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படுகின்றது.

02

# "காழி" - நீதவான்களின் பண்புகளும் முஸ்லிம், தேசத்தின் "நியாய சபை"யும் சிலகுறிப்புகள்

மேலும் இப்னு கையிம் அவர்கள் காழியின் குணவியல்புகள் பற்றி சிலாகிக்கும்போது பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்: கோபமற்ற, அவசரமற்ற ஒருவர், ஆதாரங்களையும், பிணக்குக்கான காரணிகளையும், ஐயமற அறிந்து, தீர்ப்பு வழங்குவார். இவரே முஸ்லிம் உம்மாவின் காழிக்குத் தகுதியானவர்.

காழி எப்பொழுதும் சரியான தீர்ப்பை வழங்குவதில் உறுதியைப் பேணுவார். வலிமையோருக்கெதிராக குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், தயவுதாட்சண்யமின்றி அவர் தீர்ப்புவழங்க வேண்டும்.

வலிமையற்றோர், பணப்பலமற்றோர் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என அல்லாஹ்விடம் முறையிடக்கூடிய அளவிற்கு காழியின் தீர்ப்பு அமையக்கூடாது. இது இறையாட்சியல்லாத நீதித்துறையில் சர்வசாதாரணம். அரசியல் செல்வாக்கு, பொய்ச்சாட்சிகளின் கைங்கரியம், மறைமுக மிரட்டல் போன்ற அடாவடித்தனங்கள் மூலம், நீதியை கேலிக்குட்படுத்துகின்ற அசிங்கம் அங்கு அரங்கேற்றப்படுவது தாராளமாய் நடக்கிறது. இஸ்லாமிய சட்டவாக்கம், இதை வன்மையாகக் கண்டிக்கின்றது. ஏனெனில் நீதிபதியானவன் தனது கரங்களின் முன் குர்ஆனையும், அதற்கு விரிவுரையான ஹதீஸையும் ஏந்தியவனாக தீர்ப்புச் சொல்வான். அவனது தீர்ப்பு சுயத்துவமான தீர்ப்பல்ல. அது அல்லாஹ்வினால் வழங்கப்படும் தீர்ப்பு. இங்கே அநீதிக்கு கிஞ்சித்தும் இடமில்லை.

அஷ்ஷெய்க் தகியுத்தீன் இப்னு தைமியா (ரஹ்) கூறுகின்றார்கள்; தீர்ப்பானது இரண்டு அம்சங்களில் பொதிந்துள்ளது. I - உறுதி II - (அமானத்) நம்பிக்கை, தீர்ப்பை எதிர்பார்த்திருப்பவர் இந்த இரண்டிலும் நம்பிக்கை வைத்துக் காத்திருப்பார், தீர்ப்பு வழங்கும் நீதிபதியானவர் இந்த இரண்டையும் தக்க வைத்துக்கொள்ளவும, இதற்கு பங்கமேற்படாமல் தீர்ப்பளிக்கவும் செய்வார்.

பசி, தாகம், துக்கம், தூக்கம், கடுங்குளிர், உஷ்ணம், அல்லது மலசல உபாதைகள் போன்ற நிலைமைகளில் தீர்ப்புச் சொல்வதை காழி தவிர்க்க வேண்டும். ஏனெனில் இத்தகைய நிலையில் மனம் ஒரு முகப்பட்டு கிரகித்து, வாதங்களை பரிசீலிக்கும் நிலையில் இருக்காது. இஸ்லாத்தின் இந்த வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டுதான், இன்றைய நீதிமன்ற வளாகங்களில் நீதிபதிகளுக்கு அசௌகரியம் ஏற்படுகின்ற சிறு ஒலிகளைக்கூட நீதித்துறை தடைசெய்துள்ளது. நீதிமன்ற எல்லையில் ஓடும் வாகனங்களின், 'ஹோர்ன்' ஒலியைக்கூட நீதிமன்றம் குற்றமாக கருதுகின்றது.

எனவே, முஸ்லிம் தேசத்தின் பிரத்தியேக முக்கிய கூறுகளில் ஒன்றாக நீதித்துறையும், அதனை செயற்படுத்தும் காழிகளும் இயங்குவது இன்றியமையாதது.

இன்று முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் காழி நீதிவான்கள் நியமிக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரிந்த விஷயம். இவர்கள் முஸ்லிம் விவாகச்சட்டங்களுக்கு மட்டுமே தீர்ப்புச் சொல்ல அங்கீகாரமளிக்கப்பட்டவர்கள். கணவன்-மனைவியைச் சேர்த்துவைத்தல் அல்லது, தலாக் கூறி பிரித்து வைத்தல் என்ற பிரதான பணியைத்தவிர வேறெந்த வேலையும் இவர்களுக்கு ஏவப்படவில்லை.

ஊரில் பள்ளிவாயல் மூலமாக சிறுபிணக்குகளை தீர்த்துவைக்கும் மரபும் தொன்றுதொட்டு நமது சமூகத்தில் நிலவுகிறது.
பள்ளிவாயலுக்கு வரும் வழக்குகள் பெரும்பாலும், காணி, குடும்பத்தகராறு, கொடுக்கல் வாங்கல்

### மாற்றுவழிகள் என்ன?

இஸ்லாமியச்சட்டப்பிரகாரம் சிறு குற்றங்களுக்கு தீர்ப்பு வழங்கக்கூடிய அறிஞர் சபையை கிராமந்தோறும் உருவாக்க வேண்டும். இவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிகார முடையவர்களாக இருப்பர். இயன்றளவு, முஸ்லிம்கள், சிங்கள, தமிழ் காவல் நிலையங்களுக்குச் செல்வதை தடுத்து, பள்ளிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள ஷரிஆ நீதிமன்றத்தில் முறையிட வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

குடும்பத்தகராறு, காணிமற்றும், சிறு பிணக்குகளை நியாயமாக விசாரித்து, சமாதானப்படுத்தும் குழுவாக மேற்படி குழு இயங்கும். முஸ்லிம் பிரதேசங்களில் குடி, சூது, விபச்சாரம் போன்ற குற்றங்கள் நடைபெறாமல் கண்காணிக்கவும், தடைசெய்யவுமான உபகுழுக்களை அமைத்து, உபதேசங்கள், பயிற்சி முகாம்கள் மூலம் பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விபச்சாரக் குற்றங்களுக்கும், திருட்டு, கொலைபோன்ற பாரியகுற்றங்களுக்கும், ஷரிஆவை அமுல் நடாத்துவதென்பது, இந்நாட்டுச்சட்டங்களுக்கு முரண்பட்டது. எனவே இத்தகைய குற்றங்களை ஷரிஆ சபை விசாரித்து தீர்ப்பளிக்கும் விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டும். பெரும்பாலும் இவை பொலிஸ் நிலையம் மூலம் நீதிமன்றங்களையே நாடி நிற்கும்.

எனினும் சிறு குற்றங்கள், விபச்சார வழக்குகளை பள்ளிவாயல் நியாயசபை விசாரித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும். திருமணமாகியும் விபச்சாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு கல்லெறிந்து கொல்லும் ஷரிஆ சட்டத்தை இங்கு அமுல் நடாத்த முடியாது. இதற்கு மாற்று வழிகளை கையாள இஸ்லாமிய சட்டம் இசைந்துள்ளதா என்பது குறித்து ஆராய வேண்டும்.

குறைந்தபட்சம் நமது சமூகம் பொலிஸ் நிலையங்களில்

**- ஓட்டமாவடி அறபாத் -**

சில்லறை பிரச்சினைகளுக்காக சீரழிவதைத் தடுக்கவும், முஸ்லிம் தேசத்தில் தனியான நீதிமன்ற மரபைப்பேணவும் பள்ளிகள் தோறும் நியாயசபைகள் அமைக்கப்பட்டு, அவை மக்களின் நம்பிக்கையையும், வரவேற்பையும் பெறவேண்டும்.

எம்மாலியன்றளவு பிணக்குகளை இந்த சபைகளூடாகவே அணுகி, தீர்ப்புப்பெறும் நடைமுறையை அமுலுக்கு கொண்டு வரவேண்டும். இதுபற்றி விழிப்புணர்வு குத்பாக்கள் மூலம் மக்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். நம்மிடம் இதுகுறித்துப்பேச, செயற்பட குழுக்கள் தயாராக இருக்கும்போது, இன்னும் ஏன் பின்னடைவு என்பதுதான் புதிராக உள்ளது.

ஒரு நாட்டின் நீதித்துறை எப்படி நியாயமாக இயங்க வேண்டுமோ, அதற்கு இலக்கணமாக இயங்கி வரவேற்புப்பெற்றது நமது இஸ்லாமிய நீதித்துறை, ஒரு நீதிபதி எப்படி நடக்கவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக முஹம்மது (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள். முழு சமூகத்திற்கும் வழிகாட்ட வேண்டிய சிறந்த நீதியும், நிர்வாகமும் ஒருசேரப்பெற்றதுதான் முஸ்லிம் தேசம். இதை நிலைநிறுத்தி புத்துயிர் ஊட்ட வேண்டிய கடமை நம் எல்லோர் மீதும் உண்டு. புத்திஜீவிகளும், உலமாக்களும் இதுகுறித்து சிந்திக்க வேண்டும். கிராமங்கள் தோறும், ஷரிஆவின்படி தீர்ப்பு வழங்கும் நியாய சபைகள் உருவாக வேண்டும். ஏனெனில் அல்லாஹ் அல்குர்ஆனில் இப்படிக் கூறுகின்றான்,

"எதிரிகள் எவ்வளவு பலம் பெற்றிருப்பினும், நிச்சயமாக அல்லாஹ் இறை நம்பிக்கையாளர்களுடன் உள்ளான்"
அல்குர்ஆன் (08:19)

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு சுவர்களுக்குள் ஒரு பைத்தியக்காரியாக நழீஃபா...

**நடந்த கதையின் நகல்........**

அபூ ருஸைக்

நழீஃபா சமுதாய வெளிச்சத்தை காண விரும்பாத - தன்மீது பட விழைபாத ஒரு முதிர்கன்னி...... ஆம்.... இன்னுமே திருமண பந்தம் காணாத - செய்துவைக்க எவருமே முன்வராத - தனக்கு எப்போதாவது அப்படியொரு நிகழ்ச்சி நடைபெறும் என்ற நம்பிக்கை துளிகூட இல்லாத நாற்பத்தி ஐந்து வயது நங்கைதான் இந்த நழீஃபா...

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக, நான்கு சுவர்களுக்குள் ஒரு பைத்தியக்காரியாக அடைந்து கிடக்கின்றாள். எப்போதாவது ஒரு நாள் கைவாளியைத் தூக்கிக் கொண்டு, தோட்டத்து கழிவறைக்கு வருவாள். மற்றப்படி யார் கண்ணிலும் படாமல், படவிரும்பாமல் அந்த அறைக்குள் சங்கமமாகி விடுவாள்.. ஆம் இந்த நழீஃபா ஒரு சிறைக் கூடத்தில் அடைபட்டுக் கிடக்கும் ஓர் ஆயுட்காலக்கைதி.



இந்த நழீஃபாவின் குடும்பக் கதையை இந்த நழீஃபா.. இப்படி பைத்தியக்காரியாக மாறிய கதையைக் கேட்டால். கல்நெஞ்சமும் கசிய ஆரம்பித்துவிடும்.. ஆம் .... நழீஃபா... சோகத்தின் நிரந்தர சொந்தக்காரி....

குஞ்சும்மா... பென்னாம்பெரிய உருவம்... நல்ல சிவப்பான நிறம். அறுபது வயது மதிக்கத்தக்க பெரிய மனுஷி. இரு கரங்களையும் மணிக்கட்டுவரை மூடியகழுத்தெல்லாம் மூடிய வெண்ணிற ஜாக்கெட்டும், சேலையும் உடுத்திய, எப்போதும் தலையை விட்டும் விழுந்திடாத முக்காடு போட்ட மூதாட்டி... மலையாள முஸ்லிம்களின் வம்சாவளி பெண் இவள்!

இந்த குஞ்சும்மாதான்... இந்த நழீஃபாவின் உம்மம்மா. இந்த குஞ்சும்மாவுக்கு இரண்டேயிரண்டு பெண்பிள்ளைகள் மட்டுமே புத்திரபாக்கியம்! கணவர் குஞ்சிகாக்கா வபாஃத்தாகி இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னரே. குஞ்சும்மா இறையடி சேர்ந்தாள்....

குஞ்சும்மாவின் மூத்தமகள் கதீஜா, இளைய மகள் ஆயிஷா.. தாயார் இறையடி சேர்ந்த பத்து வருடங்களில் கதீஜாவும் இறக்க, தங்கை ஆயிஷா மட்டுமே!

ஆயிஷாம்மா.... மழைக்கும் பள்ளிக்கூட நிழலில் ஒதுங்காதவள். கணவர் சமுதாயத்தின் கிண்டலுக்கும், கேலிக்கும் உரிய உருவம் கொண்டவர். பாரதூரமான மனிதரில்லை. நினைத்தால் உழைக்கச் செல்வார். இல்லாவிட்டால் வீட்டிலே ஒரே படுத்துக்கிடப்பார்.

இந்த ஆயிஷாம்மாவுக்கு மூத்தமகள் ஜெய்த்தூன். இரண்டாவது மகள்தான் நம்ம நழீஃபா ஆண் பிள்ளைகள் இருவர் காசிம், தாசிம்.

ஜெய்த்தூனுக்குத் திருமணம் நடந்தது. கொழும்பு புறக்கோட்டை பஸாரில் பேமண்ட் வியாபாரம் செய்துவந்த ஜெய்த்தூனின் கணவர் முபாரக் காலமெல்லாம் குஞ்சும்மா வாங்கிய இந்த வீட்டில் வாழலாம் என்ற நிபந்தனையில்தான் கரம் பற்றி வந்தார்.

குடும்பத்தின் பெரிய தலைகள் எல்லாம் ஒவ்வொன்றாக மரணிக்கவே, ஜெய்த்தூனின் கணவர் தன் சுய உருவத்தை காட்டலானார். ஆயிஷாம்மா மேடுபள்ளம் தெரியாத ஒருமனுஷி. தன் மகள், மகளைக் கட்டிய மருமகன், பிள்ளைகள் என்று ஆயிஷாம்மாவுக்குத் தெரியுமே தவிர, மற்றப்படி குடும்ப விவகாரம் எதிலுமே பிடிப்பில்லாத பிரகிருதியாகவே இந்த ஆயிஷாம்மா வாழ்ந்து முடித்து விட்டார். இனி எப்போது வபாஃத் வரும் என்றே எதிர்பார்த்திருக்கின்றார்.

ஜெய்த்தூன்தன் கணவனின் வருவாயில், உம்மாவையும், தங்கை, தம்பியரையும் காப்பாற்றி வருகிறாள். ஒருநாள் ஜெய்த்தூனின் கணவர் முபாரக் தன் சுய உருவத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

வீட்டை தன் பெயருக்கு எழுதித் தரும்படி கேட்டார். மாமியாராகிய ஆயிஷாம்மா மருமகனே என்று வாளாவிருந்து விட்டார். "நாம என்னத்த பேசி. என்ன முடிவு செய்யப்போறோம்.... எல்லாம் மகள் ஜெய்த்தூன் பார்த்துக் கொள்வாள்" என்ற தைரியத்திலேயே இருந்து விடுவாள்.

இரு மகன்மார்களும் ஆளைவிட்டால் போதும் என்று, எப்போதுமே வெட்டி நடப்பவர்கள். நாளடைவில் அவ்விருவரில் மூத்தவன் போதைவஸ்த்துக்கு ஆளாகி. பொலிஸில் அகப்பட்டு சிறையில் கிடக்கிறான். தம்பியோ கிடைத்ததைச் சுருட்டி. தான் வாழ்ந்தால் போதும் என்று ஒதுங்கி வாழ்பவன்.

நழீஃபாவுக்கோ சகோதரி புருஷன் - மச்சான். வீட்டை தன் பெயருக்கு எழுதிக் கேட்டது. எந்த வழியிலும் நியாயமாகப்படவில்லை. தனக்கு நாளைக்கு கல்யாணம் பேசிவந்தால். மாப்பிள்ளை வீடு கேட்டால். இதே வீட்டை காட்டித்தானே பேச வேண்டும். இருக்கும் ஒரே வீட்டை மச்சான் பெயருக்கு எழுதிவிட்டால். நாளைக்கு தாயாரும். தானும். தம்பியரும் நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுமே என்ற தூரநோக்கு. நழீஃபாவை சற்றே தடித்த வார்த்தைகளைச் சிந்த வைத்துவிட்டது.

"அட... வயசில சின்னவ. என்னை எதிர்த்து பேசுறாளே" என்ற ஆவேசம், முபாரக்கை கோபத்தின் உச்சிக்கே இழுத்துப் போய்விட்டது. "நீ என்னையா எதிர்த்துப் பேசுறே.... இரு... உனக்கு சரியான வேலை செய்றேன்" என்று சூளுரைத்தார் மூத்த மருமகனான முபாரக்.

ஒருவாரம் கழிந்தது. நழீஃபாவுக்கு தலைவலியாக வந்தது. அப்போது பிடித்த, காய்ச்சல் ஒரு டாக்டரிடம் மருந்து எடுத்தாள். குணமாகவில்லை. தலைவலி - காய்ச்சல் - நெஞ்சுவலி என்று ஒவ்வொரு வியாதியாக, பருவக்குமரியாக பளபளத்த நழீஃபாவை உருக்குலைய வைத்தது. எங்கெல்லாமோ மருந்து எடுத்தும் பலனில்லை. கவனிப்பாரும் சோர்ந்துவிட்டனர். சுமார் பத்து வருடங்களாக ஒரு பைத்தியக்காரியாக அந்த அறையிலேயே முடங்கிக் கிடக்கிறாள். இந்த நிலை ஏன் வந்தது? "மச்சான் அவளுக்கு சூனியம் செய்துவிட்டான்" என்று பகுதி மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

# சிறைச்சாலைக் கதவுகளும் மருதானி வாசல்களும்

ஊரின் எல்லைகளைக் கொண்டு
சிறைப்பட்டுப் போகிறது ஒரு வாழ்க்கை

உரிமைகளைப் பொட்டலமிட்டு
ஊன்றியடைக்கப்பட்ட சிறைச்சாலைக் கதவுகள்
இன்னும் இரகசியப் பூட்டுடுத்தி
தொங்கிக் கொண்டிருக்கின்றன.

எங்கள் உம்மாமார்களின் அழுகுரல்களும்
வாப்பாக்களின் வியர்வைத் துளிகளும்
சகோதரிகளின் விதவைக் கோலங்களும்
சிறைக்குரித்தான சோகங்களைப் போல்
புழுக்கம் காணும்.

வயல் நில வரம்புகளிடையே
கால்களில் தடுக்குப்படும்
சிதையுண்ட மனிதப்பிணங்களும்,
பாதங்களின் கீழும், இருப்பிடங்களுக்கடியிலும்
மருதானி பீய்ச்சிய சிவப்பு சாயங்களாக
நாட்பட்டுப்போன இரத்தக் கசிவுகளும்,
தினமுமான பொழுதுகளுடன் திரட்சி கொண்டு
புலரும்.

இறத்தலுக்கான இருப்பு தாங்கிய எங்கள்
மருதானி வாசல்களின் கதவுகள்
விடுதலைவேண்டி திறக்கப்படுவதேயில்லை
யாருக்கேனும்.

அஜ்வத் சிஹாப்தீன்
ஜாமியா நழீமிய்யா

# இலஞ்ச ஆணைக்குழு முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு எச்சரிக்கை

முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நிலவும் நிதி மோசடிகள் குறித்து இலஞ்ச ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், எதிர்காலத்தில் சேகரிக்கப்படும் பல்வேறு நிதிகள் குறித்துத் தகவல் வெளியிடப்படுதல் வேண்டும் எனவும் விதித்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்குரிய பெருந்தொகையான பணம், 1997ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலையின் பழைய மாணவியர் சங்கத்தின் வங்கிக் கணக்கில் இடப்பட்டுள்ளது.

பழைய மாணவியர் சங்கத்தின் பணம் அரசாங்கக் கணக்காய்வுக்கு உட்படுத்துவதில்லை என்றும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் இறுதிக்கணக்கில் காண்பிக்கப்படுவதில்லை என்றும் பெற்றோர் முறையீடு செய்துள்ளனர்.

2002ஆம் ஆண்டின் இஸ்லாமிய தினத்துக்காக ரூபா 90,000/= சேகரிக்கப்பட்டபோதிலும் ரூபா 2817/50 சதம் மட்டுமே கணக்கில் உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சண்டே லீடர். 21/12/2003

# முஸ்லிம் குரல்

## புதிர்ப் போட்டி இல - 08

அகழ்வு : நிஷாத் கரீம்

## போட்டி நிபந்தனைகள்

- ✔ உங்கள் விடைகளை ஒற்றைத்தாளில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
- ✔ சரியான விடை எழுதியவர்களில் அதிஷ்டசாலிகள் இருவருக்கு சிந்தைக்கு விருந்தான நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.
- ✔ புதிர்ப்போட்டி எண்ணை மறக்காமல் குறிப்பிடவும்.
- ✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 17.01.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடிய தாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## புதிர்கள் :-

01. புனித இஸ்லாத்தை தழுவி வன்னி மாவட்டத்தின் பிரதியமைச்சராக இருந்தவர் யார்?

02. காகித தொழிற்சாலை அமைந்துள்ள முஸ்லிம் தேச பிரதேசம் எது?

03. தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய உப-வேந்தர் யார்?

04. பிலியட்ஸ் விளையாட்டின் மூலம் இலங்கைக்கு தங்கப்பதக்கத்தை பெற்றுத் தந்து. பெருமை சேர்த்த முஸ்லிம் யார்?

05. முஸ்லிம்களின் பெரும் தலைவர் பதியுத்தீன் மஃமூத் அவர்களால் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட முஸ்லிம் ஆண்கள் கல்லூரி எது?

06. முஸ்லிம் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அமைந்துள்ள இடம் எது?

07. நளீம் ஹாஜியார் அவர்களால் உருவாக்கப்பட்டு, பாகிஸ்தான் பல்கலைக் கழகம் ஒன்றுடன் இணைக்கப்பட்டுள்ள கலாபீடம் எது?

08. 550 முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் யார்?

09. திட்டமிட்டு கண்ணி வெடி வைத்து அழித் தொழிக்கப்பட்ட வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்லிம் மேலதிக அரசாங்க அதிபரும், மூத்த எழுத்தாளரும் யார்?

10. இஸ்லாமிய அரசின் தோற்றத்திற்கு நபி (ஸல்) அவர்கள் புரிந்த 1வது யுத்தம் எது?

✔ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 08
181 1 மாளிகாகந்த வீதி,
(வைட் பார்க்)
கொழும்பு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு முஸ்லிம்களின் கல்வியை காத்திட இதோ ஒரு யோசனை...

கொழும்பு வாழ் முஸ்லிம்கள் கல்வித்துறையில், நாளுக்கு நாள் பின்னடைவு கண்டே வருகின்றனர். விரல் நீட்டிக்காட்டும் படியாக, கல்வி வளர்ச்சியிலும், புறக்கிருத்திய நடவடிக்கைகளிலும் சாதனை படைத்து வரும் ஒரு பள்ளிக்கூடத்தையேனும், கொழும்பு நகர முஸ்லிம் வித்தியாலயங்களிடையே சொல்லிக்காட்ட முடியாத சோகம், சமூக நலன் விரும்பும் நெஞ்சங்களை கவ்வி வருகிறது.....

இந்தக் கொழும்பு மாநகரில் பிற இன சகோதரர்களின் பாடசாலைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றுள் கல்வியிலும், பிற நடவடிக்கைகளிலும் முன்னேறிய, முன்னேறி வரும் பாடசாலைகள் இருப்பதுபோன்று, நம் முஸ்லிம் பாடசாலைகளில் ஒன்றுதானும் இல்லாதது ஏன்? ஒரு காலத்தில் நல்ல தரத்தில் சாதனை படைத்த கொழும்பு முஸ்லிம்கள், வித்தியாலயங்கள்கூட, இப்போது பததோடு பதினொன்றாக அமைதிகாத்து வருகின்றனவே தவிர, திரும்பிப் பார்க்கும் நிலையோ, அண்ணாந்து பார்க்கும் தன்மையிலோ, ஒன்றுகூட தேறாதது ஏன்?



கடந்த காலங்களில் கொழும்பு எம்.பி.க்கள், அமைச்சர்கள், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும், கொழும்பு நகர முஸ்லிம் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக, தங்களது நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிதியுதவி வழங்கியே வந்துள்ளனர். பாடசாலைகளின் அத்தியாவசியத் தேவைகள், இவ்வாறான ஒதுக்கீட்டு வழிகளில் பூர்த்தியாக்கப்பட்டே வந்திருக்கின்றன. அப்படியெல்லாம் அவ்வப்போது பாடசாலைகளுக்கு "கரம்" தந்து, "உரம்" வழங்கிய போதும், கல்வித்தரம் மேற்படி முஸ்லிம் பள்ளிக்கூடங்களில் உயர்ச்சிபெறவில்லை என்பதை மறுக்க முடியாது.

இந்நிலை தொடரத்தான் வேண்டுமா? வர வர கொழும்பு முஸ்லிம் பாடசாலைகள் தரம் தாழ்ந்து கொண்டே போகத்தான் வேண்டுமா? இப்படி வினாக்களைத் தொடுத்தால், சமுதாய எழுச்சியின் மீது பற்றுக்கொண்டவர்கள் "வேண்டாம்" என்று சட்டென்று பதிலளித்து விடுவர்.

அப்படியானால் கொழும்பு முஸ்லிம்களின் கல்வித்தரம் உயர்ந்திட, நாம் அவசரமாகவும். அவசியமாகவும் ஏதாவது செய்தாக வேண்டும். இந்த இடத்தில் முல்லாவின் சிந்தனையில் மலர்ந்த ஒரு யோசனையை இங்கு சபைப்படுத்த விரும்புகிறேன். வாசியுங்கள் முதற்கண். அதன்பின் யோசியுங்கள், நேசியுங்கள்.

சமுதாய உடன்பிறப்புக்களே! கொழும்பு முஸ்லிம்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் அல்லது முஸ்லிம் அமைச்சரொருவர்,

கொழும்பு முஸ்லிம்களின் கல்விநிலையை மேம்படுத்தும் நோக்கத்தை முதலில் தன் மனத்தில் தேக்கமுறச் செய்ய வேண்டும். இவ்விடயத்தில் உரிய இலக்கை அடையும்வரை எக்காரணம் கொண்டும் பின்வாங்குவதில்லை என்ற உறுதியையும் மேற்கொள்ள வேண்டும்.

அதன்பின் அந்த எம்.பி அல்லது அமைச்சர் காரியத்தில் இறங்க வேண்டும். தனது தொகுதியிலுள்ள முஸ்லிம் வித்தியாலய அதிபர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க வேண்டும். "கடந்த ஐந்தாண்டுகளின் க.பொ.த சாதாரண, உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளையும், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளையும் எடுத்துவருவதுடன், பாடசாலைக்கான தேவைகளின் பட்டியலையும் எடுத்துக் கொண்டு வரும்படியான ஓர் அழைப்பினை விடுத்து, ஒரு கலந்துரையாடல் சந்திப்பினை ஒழுங்கு செய்ய வேண்டும்.

பரீட்சை முடிவுகளையும், பாடசாலைத் தேவைகளையும் பிரஸ்தாபச் சந்திப்பில் சமர்ப்பிக்கச் செய்யவேண்டும். அமைச்சரினால் நியமிக்கப்படும் குழு, பாடசாலை அதிபர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை முடிவுகளையும், பாடசாலைத் தேவைகளையும் ஆவணப்படுத்தி, ஒவ்வொரு வித்தியாலயத்திற்கும் ஒரு திட்டமிடலுக்குக் கொண்டுவர வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளை, சமூகப்பிரமுகர்களை உள்ளடக்கிய பாடசாலை நலவுரிமை சங்கங்களை அமைச்சரே ஆரம்பிக்க வேண்டும். அரசு எல்லா உதவிகளையும், எல்லா நேரங்களிலும் செய்து விடுவதில்லை. அரசுமூலம் பெறத்தக்க அத்தனை உதவிகளையும் அமைச்சர் பாடசாலைக்குப் பெற்றுத் தருவதை உறுதி செய்ய வேண்டும்.

பாடசாலை நலவுரிமைச் சங்கத்தின் மூலம் சமூகமட்டத்திலும். இதர வட்டங்களிலும் பெறக்கூடிய, இதர எல்லா உதவிகளையும் பெற்று, பாடசாலைக்கான வளங்களைப் பெருக்கி விடுவதில் அமைச்சர் பக்க பலமாகவும். தக்க துணையாகவும் நிற்க வேண்டும். நல்ல பதவிகளிலும். தரத்திலும். அந்தஸ்த்திலும் இருக்கும் பழைய மாணவப் பெரியோர்களின் உதவி - ஒத்தாசைகளைப் பெறக்கூடிய சூழலையும் - வாய்ப்பையும் ஏற்படுத்தித் தர அந்த அமைச்சர் துணைநிற்க வேண்டும்.

இவ்வளவு வாய்ப்புக்களையும், வசதிகளையும், வளங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் அமைச்சர், கடந்த காலங்களில் பெற்ற பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கான காரணிகளை ஆய்வுசெய்து, பாடசாலை வளர்ச்சிக்கான பல்வேறு வகை உதவிகளையும் உண்டாக்கி, பாதையைச் சீர்படுத்திக் கொடுத்துவிட்ட இந்தக் கால கட்டத்தில் தவறுகள் ஏற்படாவண்ணம், ஆசிரியர் குழாத்தினால் திட்டமிடச் செய்து, பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரிப்பதற்கான வழிமுறைகளில் பாடசாலை இயங்க அமைச்சரே ஆலோசனை கூறிடவேண்டும்.

பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள் படிப்பிக்கும் நேரசூசி, ஆசிரியர்களின் லீவு விவகாரம், யாவற்றையும் அதிபரே கவனித்துச் செயற்பட வேண்டும். அமைச்சரின் குறுக்கீடோ, அரசியல்வாதிகளின் தலையீடோ இருக்காது என்பதை அமைச்சரே உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறெல்லாம் பாடசாலை எழுச்சிக்கும், கல்வியின் வளர்ச்சிக்கும் வழி செய்து கொடுக்கும் அமைச்சர், அடுத்து வரும் வருடங்களில் சிறந்த பரீட்சை பெறுபேறுகளை சமர்ப்பித்தாக வேண்டும் என நிர்ப்பந்திக்க வேண்டும். அவ்வாறு சிறந்த பரீட்சை முடிவுகளை பெற்றுத் தர தவறும் பட்சத்தில், அதிபர் அமைச்சருக்கு சிறந்த பெறுபேறு முடிவுகளை பெறாமைக்கான காரணங்களைக் கூறவேண்டும். பாடசாலையின் ஏற்ற இறக்க வளர்ச்சிக்கும், தளர்ச்சிக்கும் அதிபரே பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு பாடசாலை கல்வித்துறையில் பின்தங்கியுள்ளமைக்கான காரணங்களை பிரதேச எம்.பி. அல்லது அமைச்சர் நிவர்த்தி செய்து தரும்போது, தக்கபலனை காணத்தானே வேண்டும். இப்படி ஒரு திட்டத்தைத் தீட்டி, கட்டாயமாக நடைமுறைப்படுத்தினால், ஓரளவேனும் கொழும்பு மட்டுமின்றி ஏனைய பிரதேச பாடசாலைகளையும் கைதூக்கி விடலாம். இதுகுறித்து சிந்திப்போம், செயல்படுவோம்!

## 'ஏ' என்றால் அல்லாஹ்....!

'ஏ'(A) என்றால் அல்லாஹ் என்ற ஓடியோ கேசட்டைத் துபாயில் வெளியிட்டுள்ளார் பிரபல இஸ்லாமிய அறிஞர் யூசுஃப் இஸ்லாம். கேட்ஸ்டீவன்ஸ் துபாய் தகவல் தொழில்நுட்ப நகரத்தில் யூசுஃப் இஸ்லாம் தனது அலுவலகத்தைத் துவக்கிய பின்னர் வெளியிடப்படும் முதல் வெளியீடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் செப்டம்பர் 11 தாக்குதலையடுத்து மேற்கத்திய தகவல் தொடர்பு சாதனங்கள் இஸ்லாம் குறித்தும். முஸ்லிம்கள் குறித்தும் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதில் முழு முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன. இஸ்லாத்தை வன்முறை மார்க்கம் என வர்ணித்து வருகின்றனர். ஒவ்வொரு முஸ்லிமும் தீவிரவாதியாகச் சித்தரிக்கப்படுகிறார்.

'இந்த மாதிரியான சூழ்நிலையில் இது போன்ற தவறான கண்ணோட்டத்தைப் போக்க தங்களுக்குக் கடமையுள்ளது எனக் கருதி இஸ்லாத்தை அறியாத மக்களுக்கு இஸ்லாம் குறித்து எடுத்துரைக்க வேண்டும்' என்று கூறுகிறார் யூசுஃப் இஸ்லாம்.

'இஸ்லாம் குறித்த தொலைக்காட்சி ஒளிபரப்பு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அதற்கான வேலைகள் ஏற்கனவே முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், இன்ஷா அல்லாஹ் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தங்களது தயாரிப்புக்களைக் தொலைக்காட்சிகளில் காணும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்' என்று மேலும் கூறினார்.

## மாற்ற முடியாத மனிதனின் பிறவிக் குணம்

அமெரிக்க விமானப்படைப் பயிற்சிக் கல்லூரியில் சேரும் பெண்கள் பலர் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகிறார்கள்.

இதே போல் இந்தியாவில் மாடல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் இதே கதி! இவை காரணமாகவே இஸ்லாம் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றது.


### வெந்தயத்தின் பலன்களுக்கு ஒரு பட்டியல்

நீர்ச்சத்து. ரதசத்து. கொழுப்புச் சத்து. மாவுச்சத்து. தாது உப்புக்கள், நார்ச்சத்து, சுண்ணாம்புச் சத்து. சோடியம். பொட்டாசியம். விட்டமின் ஏ போன்ற பல சத்துக்கள் வெந்தயத்தில்!

வெந்தயம் உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கி சிறுநீரைப் பெருக்கும். நரம்புகளைப் பலப்படுத்தும். வாய்வுத் தொல்லைகளுக்கும் கைகண்டது. யூனானி வைத்திய முறையில் ஒரு தனியிடம் உண்டு.

ஊறவைத்த வெந்தயத்தை நன்கு அரைத்து முகப்பருவின் மீது பூசிப் பார்க்கலாம் பெண்கள்! வயிற்றுவலி, பொருமல், வெள்ளைப்படுதல் ஆகியவற்றைக் குணப்படுத்தும் தன்மையும் உண்டு.

குறைந்த செலவில் நிறைந்த நார்ச்சத்து கொண்ட உணவு வெந்தயம் என்பதை நாமும் நினைவில் வைப்போம்!



## 15 லட்சம் டாலர் செருப்பு



தலையில் அணியும் கிரீடத்தில் தான் நவரத்தின கற்கள் பதிக்க வேண்டும் என்பதில்லை. அமெரிக்காவின் நியூயோர்க்கைச் சேர்ந்த ஒரு நிறுவனம் பெண்களுக்கான புதிய செருப்பை தயாரித்துள்ளது. விலை மதிப்பற்ற 642 நவரத்தின கற்களை இந்த செருப்பில் பதித்துள்ளது. 15 லட்சம் டாலர் விலையுள்ள இந்த ஒரு ஜோடி செருப்பு. ஜப்பானின் டோக்கியோ நகரில் உள்ள வணிக வளாகத்தில் இது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. பலத்த பாதுகாப்பும் உள்ளது.

## சிறுமிக்கும் நாய்க்கும் திருமணம்

ஒரு சிறுமிக்கு வாழ்க்கைத் துணைவனாக தெருநாயை திருமணம் செய்துவைத்த சம்பவம் மேற்கு வங்கத்தில் நடந்துள்ளது.


ஹூக்ளி மாவட்டத்தில் உள்ள கன்யான் கிராமத்தில் திருமணம் நடந்தது. நாய்க்குத் திருமணம் செய்து வைக்கப்பட்ட சிறுமியின் பெயர் கர்னமோனி ஹஸ்தா. வயது 9. திருமணத்துக்கு 100க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் வந்திருந்தனர்.

நாய்களுக்கும் சிறுவர்களுக்கும் திருமணம் நடத்துவது என்பது சந்தால் இன மக்களிடையே வழக்கத்தில் உள்ள நடைமுறை.

## விவாகரத்து யாரிடம் அதிகம்

இந்தியத் தலைநகர் டில்லியில் ஓர்ஆய்வு செய்தார்கள். அந்த நகரில் படித்தவர்களே அதிகமாக விவாகரத்து செய்கின்றனராம்.

அதுவும் அவை கணவன் மனைவி ஒப்புதல் பேரிலேயே நடக்கின்றனவாம்!




நன்றி : தினமலர் (சென்னை)

## பெண் மகளை விரும்பிய அரசர்!

துருக்கி நாட்டை 1717 - 1774 வரை ஆண்ட சுல்தான் முஸ்தஃபாவுக்கு வரிசையாக ஆண் மக்கள்.

பெண்ணைப் பெறுபவளை மகாராணியாக ஆக்குவதாக ஒரு பிரகடனம். அப்படியும் பெண் பிறக்கவில்லை! 17 ஆண்டுகள் காத்திருந்து காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்ச வாசல்

அபூ அஸ்ரஸன்

ஆங்கிலத்தில்: பலஸ்தீன் இன்போமேஷன்

## எனது பெயர் இஸ்ரேல்

எனது பெயர் இஸ்ரேல். நான் மக்கள் எவரும் இல்லாமல் ஒரு நிலத்துக்கு - நிலம் இல்லாத மக்களுக்காக வந்தேன். இங்கு இருக்க வேண்டிய ஆனால் இங்கு இருக்க உரிமை இல்லை என நான் கணித்த மக்களை எனது மக்கள் விரட்டியடிக்கவும் கொல்லவும் செய்தார்கள். 480 பலஸ்தீனக் கிராமங்களை அழித்துத் தரைமட்ட மாக்கினார்கள். சரித்திரத்தை அழித்தார்கள்.

எனது பெயர் இஸ்ரேல். படுகொலை புரிந்த எனது மக்களில் சிலர் பின்னாளில் என்னைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதம மந்திரிகளாக உருவானார்கள். 1948ல் மொனாச்செம் பெகின், ஆண்கள், பெண்கள், சிறுவர் அடங்கலாக 'தெய்ர் யாசினி'ல் வெட்டிக் கொலை செய்யப்படுவதற்குப் பொறுப்பாக இருந்தார். ஏரியல் ஷரோன் 1953ல் 'கிப்யா'வில் வசித்தவர்களைக் கொலை செய்தார். பின்னர் 1982ல் ஷடில்லா, ஷப்றா அகதி முகாம்களில் மிலேச்சத்தனமாக இரண்டாயிரம் பேர் படுகொலையாவதற்கு வழி பண்ணினார்.

எனது பெயர் இஸ்ரேல். 1948ல் பலஸ்தீனத்தின் 78 சதவீத நிலத்தைத் துண்டாடினேன். அங்கு வாழ்ந்திருந்தவர்களை விரட்டியடித்து விட்டு ஐரோப்பாவிலிருந்தும் உலகின் ஏனைய பாகங்களிலிருந்தும் யூதர்களைக் கொண்டு வந்து குடியேற்றினேன். யாரெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளாக இங்கு வசித்து வந்தார்களோ அவர்களையெல்லாம் மீண்டும் வர முடியாத படி தடுத்த அதே வேளை, உலகெங்கிலுமிருந்து வந்த யூதர்களுக்கு உடனடிப் பிரஜாவுரிமை வழங்கினேன்.

எனது பெயர் இஸ்ரேல். 1967ல் எஞ்சியிருந்த - மேற்குக் கரை, காஸா - பலஸ்தீன நிலத்தை விழுங்கினேன். அங்கு வாழ்ந்திருந்தவர்களை இராணுவச் சட்டங் கொண்டு ஒடுக்கினேன். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு விடயத்திலும் அவர்களை அவமானப் படுத்தினேன். அவர்கள் இங்கு வாழ்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற செய்தியைப் பெற்றுக் கொண்டிருக்கச் செய்த அதே வேளை, லட்சக் கணக்கான பலஸ்தீனர்கள் ஜோர்தானிலும் லெபனானிலும் உள்ள அகதி முகாம்களில் வாழுமாறு நிர்ப்பந்திக்கச் செய்தேன்.


எனது பெயர் இஸ்ரேல். எனக்கு அமெரிக்கக் கொள்கையையே கட்டுப் படுத்தும் சக்தி உண்டு. எனது 'அமெரிக்க இஸ்ரேல் பொது விவகாரக் குழு' அமெரிக்கா தேர்ந்தெடுக்கும் எந்த ஒரு அரசியல்வாதியையும் முறியடிக்கும் பலம் கொண்டது. நீங்கள் அறிந்து வைத்திருப்பதைப் போல, அவர்கள் எம்மிடம் தயவு கோருகிறார்கள். உலகு முழுக்கவும் உள்ள - எனக்கு எதிரான எல்லாச் சக்திகளும் எனக்கு முன்னால் வலுவிழந்தவை, ஐக்கிய நாடுகள் சபை உட்பட. எனது யுத்தக் குற்றங்களுக்கு எதிராகப் பழி சுமத்தப்படுவதைத் தடுக்க என்னிடம் அமெரிக்க வீட்டோ சக்தி உண்டு. ஷரோன் தனது வாக்கு வன்மையால் வெளிப்படுத்துவது போல 'நாங்கள் அமெரிக்காவைக் கட்டுப்பாட்டில் வைத்துள் ளோம்.'

எனது பெயர் இஸ்ரேல். நான் அமெரிக்காவின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொடர்பு சாதனங்களில் ஆதிக்கம் செலுத்துகிறேன். அவற்றில் நீங்கள் எப்போதும் எனக்குச் சாதகமான செய்திகள் இடம் பெறுவதையே காண்பீர்கள். லட்சக் கணக்கான அமெரிக்க டொலர்களை பொதுசனத் தொடர்பு, மற்றும் சி.என்.என், நிவ்யோர்க் டைம்ஸ், மற்றும் சிலவற்றிலும் மூலதனமிட்டுள்ளேன். அவர்கள் மிக அற்புதமாகவும் சுச்சிதமாகவும் என்னை முன்னிலைப்படுத்திப் பிரசாரம் செய்கிறார்கள். வேறு சர்வதேச ஊடகங்களைப் பார்த்தீர்களானால் இந்த வித்தியாசத்தை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

எனது பெயர் இஸ்ரேல். ஆனால் பலஸ்தீனியனே.. உனக்கு என்னோடு சமாதானம் செய்து கொள்ள ஆசையா? ஆனால் நீ என்னைப் போல் கம்பீரமானவனாக இல்லையே. நான் சமாதானம் செய்து கொள்கிறேன்... நீ உனது நகர சபைகளை வைத்துக் கொள். நான் உனது எல்லைகளை, உனக்குரிய நீரை, உனது வான் பரப்பை, மற்றும் ஏனைய முக்கியத்துவம் மிக்க யாவற்றையும் நான் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கிறேன். நாம் சமாதானம் செய்து கொள்ளும் போது உனது மலைச் சிகரங்களை நான் விழுங்கி விடுகிறேன். அதில் அடிப்படைவாதிகளைக் கொண்ட, ஆயுதங்களை வாயிலில் நிறுத்திய எனது குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கிறேன். இந்தக் குடியிருப்புக்கள் உன்னால் பயணம் செய்ய முடியாத பாதைகளைத் தொடுத்து அமைந்திருக்கும். இதன் மூலம் உனது அகதிக் கொட்டில்களில் நீ சிறைப்படுத்தப்படுவாய். உன்னைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் சோதனைச் சாவடிகள் அமைந்திருக்கும்.

எனது பெயர் இஸ்ரேல். அணு ஆயுதங்களை வைத்திருக்கும் உலகத்தின் நான்காவது சக்தி மிகுந்த இராணுவ பலத்தைக் கொண்டுள்ளேன். வெறும் கற்களைக் கொண்டு எனது ஒடுக்கு முறையை உங்களது சிறுவர்கள் எப்படி எதிர்க்க முடியும்? எமது படை வீரர்கள் அவர்களது தலைகளைச் சிதறடிக்கத் தயங்கவே மாட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா? கடந்த பதினேழு மாதங்களில் 900 பேரைக் கொன்று குவித்திருக்கிறேன். 17,000 பேரைக் காயப் படுத்தியிருக்கிறேன். இவர்களில் அநேகர் பொது மக்களாவர். நூற்றுக் கணக்கான இஸ்ரேலியப் படை வீரர்கள் தங்களது மனச் சாட்சியின் குரல்களை ஏற்றுக் கொண்டு, உங்கள் நிலத்தின் மீதும் உங்களது மக்கள் மீதும் நான் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுப்பதனை வழமை போல நான் அலட்சியம் செய்து வருகிறேன்.

எனது பெயர் இஸ்ரேல். உங்களுக்குச் சுதந்திரமா வேண்டும்? என்னிடம் துப்பாக்கி ரவைகள் உள்ளன. டாங்கிகள் உள்ளன. ஏவுகணைகள் உள்ளன. உங்களைத் துடைத்து அழிப்பதற்கு அப்பாச்சி ஹெலிகொப்டர்களும் , எஃப் 16 ரக விமானங்களும் உள்ளன. உங்களது நகரங்களை எனது முற்றுகையில் வைத்திருக்கிறேன். உங்களது நிலங்களைப் பறிமுதல் செய்திருக்கிறேன். உங்களது மரங்களை வேரோடு பிடுங்கி வீசியிருக்கிறேன். உங்களது வீடுகளை இடித்துத் தள்ளியிருக்கிறேன். உங்களுக்கு இன்னும் செய்தி கிடைக்கவில்லையா? நீங்கள் ஒரு போதும் அமைதியையோ சுதந்திரத்தையோ பெற்றுக் கொள்ள முடியாது.





தமிழ் பேசும் மக்களின் பத்திரிகை என மார்தட்டிக் கொண்டும் முஸ்லிம்கள் காசுகொடுத்து வாங்குகிறார்கள் என்று தெரிந்தும் தினக்குரலின் சமாதானத்தின் மீது கொண்ட பற்றுறுதி? க்கு எடுத்துக்காட்டாக 4.12.03 அன்று வெளியான காட்டூன்.










உண்மையிலேயே தமிழ்பேசும் மக்களின் குரலாக யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் தினக்குரல் காட்டூன் வரைய விரும்பியிருந்தால் நிச்சயம் அது பின்வருமாறு அமைந்திருக்கும் அதுதான் சத்தியம்.

மஜீட்புரம் அஸ்கர்
(கிண்ணியாவிலிருந்து)

## திரித்துக்கூறும் 'தினக்குரல்'

தமிழ்த்தினசரிகள் முஸ்லிம்களுக்கெதிராக உண்மைகளைத் திரித்துக்கூறுங் கைங்கரியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதை அவற்றை வாசிக்கும் முஸ்லிம்கள் நன்கறிவர்.

இந்த அடிப்படையில் சில தினங்களுக்கு முன்பு நடந்த வாகனவிபத்தொன்றை எழுதிய விதம் தினக்குரலின் சுயரூபத்தை அக்குறணை முஸ்லிம்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. உண்மையில் நடந்தது இதுதான். வழமைபோல் வாயு வேகத்தில் வந்து கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்று முன்னால் சென்று கொண்டிருந்த வேன் ஒன்றுடன் மோதி ஆற்றுக்குள் தள்ளிவிட்டது. வேனில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் இறைவனருளால் உயிர்பிழைத்தார்கள். இதனால் ஆத்திரமடைந்த சிலர் பஸ்ஸின் சில கண்ணாடிகளை உடைத்துவிட்டனர். இதைத் தொடர்ந்து வழமைபோல் தனியார் பஸ் வேலை நிறுத்தம் தொடங்கி ஓரிரு நாட்களில் பிசுபிசுத்தது - முடிவடைந்தது. இது இப்படி இருக்க. தினக்குரல். அக்குறணையில் சில விஷமிகளால் தனியார் பஸ்ஸொன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டதால் ஏற்பட்ட தனியார் பஸ் வேலை நிறுத்தம் முடிவடைந்தது என்று தங்களது வழமையான பாணியில் செய்தியொன்றைப் பிரசுரித்துப் பக்கத்தை நிரப்பிக்கொண்டது.

இத்தகைய விஷமத்தனமான செய்திகளைப் பிரசுரித்து. பெரும்பான்மைச் சமூகத்துடன் அந்நியோன்யமாக வாழ்ந்துவரும் முஸ்லிம்களை மோதவிடும் உத்திகளைக் கைவிடவேண்டும் என தினக்குரலைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்த் தினசரிகளின் இத்தகைய சதிமுயற்சிகளை முறியடிக்க முஸ்லிம்களுக்கென ஒரு தினசரிப்பத்திரிகையை வெளியிட வக்கில்லாத ஒரு சமூகமாக முஸ்லிம் 'உம்மா' இருப்பது வேதனை தருவதாக இருக்கின்றது.

பீ.எம் ஜாபிர் - தொடங்கொல்ல - அக்குறணை




## சம்பந்தமென்ன ஐயா?

'வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு தீர்வும் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது' என துறைமுக. கப்பல்துறை. கிழக்கு அபிவிருத்தி அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளீர்கள்.

இக்கருத்தினை இப்பிராந்திய வாழ் முஸ்லிம்களாகிய நாம் மனதார வரவேற்கின்றோம். அதேவேளை சம்பந்தன் எம்.பி யிடம் இது தொடர்பான சில கேள்விகளையும் கேட்க விரும்புகின்றோம்.

"அதாவது 20 வருடகால யுத்தத்தின்பின் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுதேடி சர்வதேச நாடுகளில் பேச்சுக்கள் நடாத்திவரும் புலிகளிடமோ. அரசிடமோ இக்கருத்தினைத் தெரிவித்தீர்களா?"

"தெரிவித்திருப்பின் இதுதொடர்பில் புலிகள் சொன்னவை என்ன? அரசு சொன்னவை என்ன? வெளிப்படுத்துவீர்களா?"

அல்லது இப்பிரச்சினைகளோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என உங்கள் கூட்டமைப்பு கருதும் இவர்களிடம் நீங்களோ உங்கள் கூட்டமைப்போ எதுவும் பேசவில்லையாயின், பேச்சுக்கும், நடத்தைக்கும் சம்பந்தமில்லாத வகையில் பேசும் இத்தகைய பேச்சுக்களை நாட்டின் அதி உயர் சபையான பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசுவதைத்தவிர்த்துக் கொள்ளுமாறு இப்பிராந்தியத்தைத் தாயகமாகக் கொண்ட மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் தேசமக்கள்.

இஸ்லாமிய
சகோதரனே!
சொத்துக்களைச் சேர்த்து
சிறுத்தைக்குக்கொடு
அபகரித்து
அகிலத்தில் சொர்க்கம் கட்டினானே
'சத்தாத்து'
அவனைப்போல
இவனும் கட்டட்டும்
சொர்க்கம்

(மன்னுஸல்வா) மாபோலை முஹம்மட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அதிகாரப் போட்டி

அதிகாரம் என்பது என்ன? அது இப்போது யாரிடம் உள்ளது? உலகில் எழுந்துள்ள அதிகாரப் போட்டிக்கான விடையினைக்கண்டுபிடிப்பதற்கான ஒரு முயற்சியாகும் இது. பணமும், துப்பாக்கிப்பலமும் அதிகாரத்தில் முக்கிய பாகம் வகுப்பவை. எனினும் தேசிய அதிகாரத்தின் ஒரே மூலம் இவை மட்டும் அல்ல, அதிகாரம் என்பது இராஜதந்திரச் செல்வாக்கையும், சமூக ஒழுக்க நியமங்களையும், தொழில் நுட்பச் சக்தி போன்றவற்றையும் குறிக்கும். அதிகார பூர்வமான மூலங்களில் இருந்து தொகுத்து எடுக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி நியூஸ்வீக் சஞ்சிகை, உலக மட்டத்தில் உயர் நிலையில் உள்ள 10 நாடுகளை வகைப்படுத்தியுள்ளது.

### ஐக்கிய நாட்டு பாதுகாப்புச் சபை

| நிலை | நாடு | உறுப்புரிமை முடியும் தினம |
|---|---|---|
| 01. | சீனா | நிரந்தரம் |
| 01. | பிரான்ஸ் | நிரந்தரம் |
| 01. | ரஷ்யா | நிரந்தரம் |
| 01. | ஐ.இராச்சியம் | நிரந்தரம் |
| 01. | ஐ. அமெரிக்கா | நிரந்தரம் |
| 02. | அங்கோலா | 2004 |
| 02. | சிலி | 2004 |
| 02. | ஜேர்மனி | 2004 |
| 02. | பாகிஸ்தான் | 2004 |
| 02. | ஸ்பெயின் | 2004 |

"முதலாவது மன்னன் முதலாவது போருக்காக முதல் இராணுவத்தை அனுப்பிய தொடக்கம் இராணுவப் பலம் தேசிய மூலத்தில் அடிப்படைப் பலமாக அமைந்தது."

### வெளிநாட்டு உதவி அளித்தோர்

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா |
| 02. | ஜப்பான் |
| 03. | ஜேர்மனி |
| 04. | பிரான்ஸ் |
| 05. | ஐ.இராச்சியம் |
| 06. | நெதர்லாந்து |
| 07. | இத்தாலி |
| 08. | கனடா |
| 09. | சுவீடன் |
| 10. | நோர்வே |

### இராணுவச் செலவு

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா |
| 02. | ஜப்பான் |
| 03 | ஐ. இராச்சியம் |
| 04. | பிரான்ஸ் |
| 05. | சீனா |
| 06. | ஜேர்மனி |
| 07. | சவூதி அரேபியா |
| 08. | இத்தாலி |
| 09. | ஈரான் |
| 10. | தென்கொரியா |

### அணுவாயுதச் சக்தி

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா |
| 02 | ரஷ்யா |
| 03. | சீனா |
| 04. | பிரான்ஸ் |
| 05. | ஐ. இராச்சியம் |
| 06. | இஸ்ரேல் |
| 07. | இந்தியா |
| 08. | பாகிஸ்தான் |
| 09. | வடகொரியா |
| 10. | ஈரான் |

### ஆயுத ஏற்றுமதி

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ரஷ்யா |
| 02. | ஐ. அமெரிக்கா |
| 03. | பிரான்ஸ் |
| 04. | சீனா |
| 05. | ஜேர்மனி |
| 06. | ஐ. இராச்சியம் |
| 07. | இத்தாலி |
| 08. | கனடா |
| 09. | உக்ரேன் |
| 10. | நெதர்லாந்து |

## உலகின் பலம் வாய்ந்த 10 நாடுகள்

01. ஐக்கிய அமெரிக்கா: சுற்றாடல் ஒப்பந்தங்கள், தண்ணீர், எண்ணெய் ஒதுக்குவளங்கள் என்பவற்றில் மூழ்கியிருந்தாலும், ஐக்கிய அமெரிக்கா, 72 புள்ளிகளைப் பெறுகிறது.

02. ஜேர்மனி: இந்நாடு எதிலும் முன்னணி பெறவில்லை. எனினும் எல்லாத் துறைகளிலும் புள்ளிகளைப் பெற்றது. ஜேர்மனி இரண்டாவதிடம் பெறக்கூடிய வகையில் எல்லாத் துறைகளிலும் தாக்கத்தையேற்படுத்தி உள்ளது.

03. பிரான்ஸ்: ஐரோப்பாவில் தனது பரம்பரை எதிரியான ஜேர்மனியைப் பின்தொடர்கிறது. எனினும் அந்நாட்டின் உறுதிகள் பலவீனங்கள் போன்றவற்றில் பங்கு கொள்கிறது.

04. ஐக்கிய இராச்சியம்: இராணுவப் பலத்தில் பழமைத்தன்மை மிகுந்த இந்நாடு, பொருளாதாரப் போட்டியிருந்திராவிடின், உயரிடத்தைப் பெற்றிருக்கும்.

05. ஜப்பான்: இராஜதந்திரத் துறையில் பெற்றுள்ள அதிக புள்ளிகள், இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் ஆயுதக் கைவிடுதலைக் காட்டுகின்றது.

06. கனடா: ஆறாவது இடத்தைப் பெறக்கூடிய வகையில் கனடா பெருமளவு எண்ணெய், நீர் வளங்களைக் கொண்டது.

07. சுவீடன்: எதிர்பாராதவகையில் உறுதியைப் பெற்றுள்ளது. யூரோ நாணயத்தை ஏற்கக்கூடிய விதத்தில் வல்லமையைப் பெற்றுள்ளது.

08. சீனா: புதுக்கண்டுபிடிப்புகள், மக்கள், மூலவளங்கள் என்பவற்றின் பலவீனங்கள், பலமான இராணுவ, பொருளாதார வெளிப்பாட்டை மங்கலாக்குகின்றன.

09. நோர்வே: உயர் வாழ்க்கைத் தன்மை, இராஜதந்திரப் புகழ், சிறிதளவு எண்ணெய் என்பன உள்ளன. பெரும்பணம், ஆயுதங்கள் இல்லாமையினை இது நிறைவு செய்கிறது.

10. நெதர்லாந்து: இந்நாட்டில் உயர்பெறுமதி கொண்ட விவசாயம், உயர் தொழில் நுட்பவல்லமைகள், துப்பாக்கிக் கலாசாரத்தில் அதிசயிக்கத்தக்க விருப்பு என்பன உள்ளன.

### மூலவளங்கள்

| நிலை | நாடு |
|---|---|
| 01. | கனடா |
| 02. | ஐ. அமெரிக்கா, ஐஸ்லாந்து, ச.அரேபியா |

### இராணுவம்

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐக்கிய அமெரிக்கா |
| 02. | பிரான்ஸ் |

### பொருளாதாரம்

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா |
| 02. | ஜேர்மனி |

## பொருளாதாரப் பலம்

இரண்டாம் உலக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட உலகில் இருந்து பூகோளமயமாக்கல் உருவாக்கப்பட்டதுடன், பொருளாதாரப் பலத்தின் முக்கியத்துவத்தை உலகம் வெளிக்காட்டியுள்ளது.



### மொத்த, உள்ளூர் உற்பத்தி வளர்ச்சி

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ.அமெரிக்கா |
| 02. | சீனா |
| 03. | ஜப்பான் |
| 04. | இந்தியா |
| 05. | ஜேர்மனி |
| 06. | பிரான்ஸ் |
| 07. | ஐ. இராச்சியம் |
| 08. | இத்தாலி |
| 09. | பிரேஸில் |
| 10. | ரஷ்யா |

### ஏற்றுமதி

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ.அமெரிக்கா |
| 02. | ஜேர்மனி |
| 03. | ஜப்பான் |
| 04. | சீனா |
| 05. | பிரான்ஸ் |
| 06. | ஐ. இராச்சியம் |
| 07. | கனடா |
| 08. | இத்தாலி |
| 09. | நெதர்லாந்து |
| 10. | ஹொங்கொங் |

## தொழில்நுட்பச் சக்தி

புதுத்தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும், அவற்றைப் பயன்படுத்துவதற்கான மக்களின் சுதந்திரங்களும், தொழில்நுட்ப வல்லமைகளைப் போலித் தொழில் நுட்பங்களில் இருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன.

### விஞ்ஞான கண்டுபிடிப்புகள்

| நிலை | நாடு | மொத்தம் 1901-2003 |
|---|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா | 137 |
| 02. | ஜேர்மனி | 49 |
| 03. | ஐ.இராச்சியம் | 47 |
| 04. | பிரான்ஸ் | 18 |
| 05. | நெதர்லாந்து | 11 |
| 05. | ரஷ்யா | 11 |
| 06. | சுவிட்ஸ்லாந்து | 10 |
| 07. | ஜப்பான் | 8 |
| 07. | சுவீடன் | 8 |
| 08. | கனடா | 6 |

### இன்டர்நெட் பாவிப்போர்

| நிலை | நாடு | சதவீதம் |
|---|---|---|
| 01. | ஐஸ்லாந்து | 79 |
| 02. | சுவீடன் | 68 |
| 03. | டென்மார்க் | 63 |
| 04. | நெதர்லாந்து | 61 |
| 05. | ஹொங்கோங் | 60 |
| 06. | நோர்வே | 59 |
| 07. | ஐ. அமெரிக்கா | 59 |
| 08. | ஐ. இராச்சியம் | 57 |
| 09. | அவுஸ்திரேலியா | 54 |
| 10. | தென்கொரியா | 53 |

## மூலவளங்கள் பலம்

மக்கள் தொகை பெருகி, வளங்கள் அருகி வருவதால், உணவு, நீர், எண்ணெய் வளக்கட்டுப் பாடுகள் அதிகாரத்தின் மூலங்களாக, அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

### எண்ணெய் வளம்

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ச. அரேபியா |
| 02. | கனடா |
| 03. | ஈராக் |
| 04. | ஐ.அ.இராச்சியம் |
| 05. | குவைத் |
| 06. | ஈரான் |
| 07. | வெனிசுலா |
| 08. | ரஷ்யா |
| 09. | லிபியா |
| 10. | நைஜீரியா |

### விவசாய ஏற்றுமதி

| நிலை | நாடு |
|---|---|
| 01. | ஐ. அமெரிக்கா |
| 02. | பிரான்ஸ் |
| 03. | நெதர்லாந்து |
| 04. | ஜேர்மனி |
| 05. | ஐ.இராச்சியம் |
| 06. | கனடா |
| 07. | அவுஸ்திரேலியா |
| 08. | இத்தாலி |
| 09. | பெல்ஜியம் |
| 10. | ஸ்பெயின் |

### தனிப்பட்ட கணினிகள்

| நிலை | நாடு | 1000 மக்களுக்கு |
|---|---|---|
| 01. | சென்மெரினோ | 738 |
| 02. | ஐ. அமெரிக்கா | 574 |
| 03. | சுவீடன் | 507 |
| 04. | டென்மார்க் | 503 |
| 05. | சுவிட்ஸ்லாந்து | 493 |
| 06. | நோர்வே | 486 |
| 07. | பேர்முடா | 469 |
| 08. | அவுஸ்திரேலியா | 460 |
| 09. | லக்ஸம்பேர்க் | 446 |
| 10. | சிங்கப்பூர் | 436 |

அன்பின் வாசகர்களே இதனைத் தொகுத்துத்தந்ததன் நோக்கம், இன்றைய உலக அளவில் முஸ்லிம் நாடுகளின் நிலையை - உங்களுக்கு சுட்டிக்காட்டத்தான்.

எந்த அடிப்படையிலும் உலகின் முதல் தர நாடுகளின் பத்து எண் வரிசைக்குள் எந்த அரபு நாடுகளும் வரவில்லை. வள அடிப்படையில் - அந்த ஒரு துறைக்குள் மட்டுமே சவூதி அரேபியா வந்துள்ளது.

ஆனால் அந்த வளத்தையும் தனது ஆதிக்கத்தினுள் கொண்டு வருவதற்கே அமெரிக்கா தொடர்ந்தும் செயல் பட்டு வருகிறது. இப்போது அரபு தேசம் மீது அமெரிக்கா தொடுத்திருக்கும் போர் அல்லது ராஜதந்திர உறவுகள் எண்ணெய்க்கானதே! நாளை அந்த வளமும் ஏதோ ஒரு வகையில் அமெரிக்காவின் கையில் இருக்கலாம்.

நன்றி : நியு, ஸ் வீக் சஞ்சிகை-டிசம்பர்-2003
தமிழில் : ஏ.எம். முஹம்மத் மதனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருதய நோயாளர்களுக்கு சில அறிவுரைகள்

01. இரவு சாப்பாட்டிற்குச் சோறு பொருத்தமற்றது என்று சிலர் அபிப்பிராயப்படுகி ன்றனர். ஆனால், சிறிதளவு சோறு உண்பதால் எதுவிதக் கெடுதியுமில்லை.

02. உப்பை எல்லைக்குட்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால், உணவில் உப்பைக் குறைத்துக் கொள்வதால் உயர் இரத்த அழுத்தத்தை தடுக்கலாம்.

03. புகைத்தலை பூரணமாக நிறுத்திக் கொள்ள வேண்டும்.

04. நோயுற்று மூன்று மாதங்கள் கடந்த பின்பே வாகனங்களைச் செலுத்த வேண்டும்.

05. நோயுற்று ஆறு மாதங்கள் வரை மாடிப்படிகளில் ஏறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

06. நோயுற்று மூன்று வாரங்களுக்குப் பின் குளிக்கலாம். அதற்கு வேறொருவரின் உதவியை நாட வேண்டும். குளிர்ந்த நீர் இரத்த அழுத்தத்தை சிறிதளவு அதிகரிக்குமாதலால் குளிக்கும் நீர் வெதுவெதுப்பாக இருப்பது நல்லது.

07. பிரயாசையுடன் மலம் கழிக்கக் கூடாது.


08. 15 கி.கிராம் எடைக்கு மேல் தூக்கக் கூடாது.

09. நோயுற்று 06 வாரங்களின் பின் உடலுறவு கொள்ளலாம். வயிறு நிறைய உண்டவுடனோ, களைப்பாக இருக்கும் போதோ உடலுறவில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வாரத்தில் 2-3 முறை உடலுறவு கொள்வதால் கெடுதியில்லை.

## நாம் வாசிக்காதவை

ரீ.ஜே. அஹமட் ஜான்

### அழகு ஆபத்தானது



ஹவாய் என்பது அழகான தீவுக் கூட்டமாகும். ஆனால், எரிமலைகளே அங்கு நிறைந்துள்ளன. எந்த நேரத்தில் எரிமலை வெடித்து தீக்குழம்பைக் கக்கும் என்பதைக் கூற முடியாததாலும். அவற்றை அண்மித்துப் போக முடியாததாலும் எரிமலைகளின் புகைப்படங்கள் தற்செயலாகவே பிடிக்கப்படுகின்றன. அந்த வகையில் தற்செயலாக பிடிக்கப்பட்ட புகைப்படமே இது.

### முன்னிரண்டுகால்களுமற்ற நாய்



ஆராச்சிகட்டுவை-இலக்கட்டுவை பிரதேசத்தில் வசிக்கும் எஸ்.எம். ஜயதிலக்க என்பவரின் வீட்டில் இந்தப் புதுமையான நாய் வசிக்கிறது. அவரது வீட்டில் வசித்த பெண் நாயொன்று மூன்று வருடங்களுக்கு முன் நான்கு குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு நாய்க் குட்டிக்கு பிறப்பிலேயே முன்னிரண்டு கால்களுமில்லை.

ஆரம்பத்தில் எங்கும் செல்ல முடியாமல் ஒரே இடத்தில் காலத்தைக் கடத்திய இந்த நாய் பின்னர் பின்னிரண்டு கால்களுக்கு வார்கொடுத்து கங்காறு போன்று நடக்க ஆரம்பித்துள்ளது. வேறு நாய்களுடன் சண்டைக்கும் செல்லும். இது தற்போது 'மண முடிக்கவும்' தயாராகி உள்ளது.

## வாய்ப் புற்று நோயும், அதை ஏற்படுத்தும் காரணிகளும்

இலண்டன் அரச மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது. எல்லையற்ற மதுப்பாவனையும். புகைத்தலும் வாய்ப்புற்று நோய் ஏற்படக் காரணிகளாக அமைகின்றன என்று கண்டுபிடித்துள்ளனர்.

20-30 வயதுக்கு இடைப்பட்டோரே அதிகளவில் இந் நோய்க்கு ஆட்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.


சாராயம். பியர். வைன் போன்ற அல்க்கோலின் செறிவு அதிகமுள்ள பானங்களால் வாயிலுள்ள தசைகள் சேதமாகிப் பாதிக்கப்படுகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் அதிகளவில் புகைத்தலுக்கும். மதுப்பாவனைக்கும் அடிமையாகியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என அரச மருத்துவக்கல்லூரியின் வாய் சம்பந்தமான நோய்களுக்கான பேராசிரியர் நொவேல் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார். இவ்வாறு இவற்றைப் பயன்படுத்துகின்ற உலகிலுள்ள அனைவருக்கும் இந்நிலை பொதுவானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஆண்கள் மட்டுமல்ல, பெண்களிலும் பெரும்பாலானோர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள அநேகர் வெற்றிலை மெல்லுகின்றனர். வெற்றிலை மெல்லும்போது அதற்குச் சுண்ணாம்பும், புகையிலையும் சேர்த்துக் கொள்கின்றனர். முக்கியமாக இலங்கையைப் பொறுத்தளவில் இந்தச் சுண்ணாம்பும். புகையிலையுமே வாய்ப்புற்று நோய்க்கான காரணிகளாகும்.

### மஞ்சள் நிற பப்பாளி



பொதுவாக பப்பாளியின் வெளித்தோல் பச்சை நிறமாகும். பழுத்ததன் பின்புதான் அது மஞ்சள் நிறமாக மாறும். இது இயற்கை நிலையாகும்.

ஆனால் காய்த்த நாள் தொடக்கம் மஞ்சள் நிறத் தோலுடன் கூடிய அரிய பப்பாளி இனமொன்று குருவிட்டப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு விஷேசம் என்னவென்றால். இந்தப்பப்பாளி மரத்தின் இலைகளும் கூட மஞ்சள் நிறத்துடன் கூடிய பச்சை நிறமாகவே காணக் கூடியதாக உள்ளது.


குருவிட்ட, தெல்கமுவை.கொவிஜன சேவா மாவத்தையில் அமைந்துள்ள விஜேசிங்க என்பவரின் வீட்டுத் தோட்டத்திலேயே இப்பப்பாளி மரம் உள்ளது. இந்த மரம் தானாகவே உருவாகியதாகவும். பழுத்ததன் பின் தோலின் நிறம் செம் மஞ்சளாக மாறுவதாகவும் விஜேசிங்க தெரிவித்தார்.

## பள்ளிமுனைக் கிராமத்தின் கதை 20

குறுநாவல்

அத்தியாயம் 09

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! எனது அழைப்பையேற்று பள்ளிமுனையிலிருந்து, தலைமைத்துவத்தை மதித்து, அதற்குக் கட்டுப்பட்டு கொழும்புக்கு வந்திருக்கிற எனது இரண்டாம் தாயகமான பள்ளிமுனை உலமாக்களே...



பெரியோர்களே... சகோதரர்களே.. போராளிகளே...

வயற்சேனை பிரதேச சபைக்குள் மூன்று பிரதேசங்கள் அடங்குகின்றன. மீன்குறி, பசறிச்சேனை, பள்ளிமுனை இவற்றில் நமது கட்சி பலமாகவே உள்ளது. எனினும், முக்கிய தேசியக் கட்சியினர் தமது வேட்பாளராக பசறிச்சேனையின் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம். எல். அகமதுலெவ்வை அவர்களை நிறுத்தியுள்ளதாக செய்தி கிடைத்துள்ளது. எப்படியிருந்தாலும் நமது கட்சியே இன்ஷா அல்லாஹ் பிரதேச சபையைக் கைப்பற்றும்... ஐ.என்.பீ வேட்பாளரை மண் கவ்வச் செய்வதற்கு, நமது தலைமை வேட்பாளராக பள்ளிமுனை பள்ளித் தலைவரும் கட்சியின் ஸ்தாபக உறுப்பினருமான ஜனாப். செய்னுல்ஆப்தீன் ஹாஜியார் அவர்களை....'

தலைவர் 'சட்'டென உரையை நிறுத்தினார். சபை கும்மென்ற அமைதியுடன் இருந்தது. தலைவரின் முகத்தில் மர்மப் புன்னகை மறைய - அவரது தீட்சண்ய விழிகள் ஒரு கணப் பொழுதில் சபையையும், சபையின் மனோநிலையையும் அளந்தது. அடுத்த வசனம் கம்பீரமாக வெளி வந்தது.

'நமது பள்ளித் தலைவர் செய்லான் ஹாஜியார் அவர்களை வேட்பாளராக போட்டிக்கு நிறுத்தவில்லை...... என்ற உறுதியான நிலைப்பாட்டுக்கு தலைமைத்துவம் வந்துள்ளது! இதற்கு பிரதானமாக மூன்று காரணங்கள் உள்ளன...'

சபை அதிர்ந்து போய் வாய் பிளந்து (வாய்மூடி) இருந்தது. செய்லான் ஹாஜியார் துணுக்குற்று விறைத்துப் போயிருக்க-

'....முதற்காரணம், பள்ளிமுனைப் பள்ளித்தலைவரும், பசறிச்சேனை பள்ளித்தலைவரும் ஆக, இரு பள்ளித் தலைவர்கள் பதவிக்காக ஊர் பிரிந்து முட்டி மோதிக் கொள்வதை இஸ்லாமியக் கட்சித் தலைமைத்துவம் அனுமதிக்காது... நீங்கள் அனுமதிப்பீர்களா...?'

:ல்...லை...லைல்லை....ஏலா...ஏலா' என்றது சபை கமறலுடன்.

'.....பிரதேச ரீதியான துவேசப் பிரிவினையை ஊட்டி நம்மைப் பிரிக்க எத்தனிக்கும் பெரும்பான்மை இனச் சதிக்கு என்னருமைப் பள்ளிமுனை மக்கள் உடன்படுவார்களா.... சொல்லுங்கள்....'

'....ல்லை.. சேர்! உடமாட்டம்...ஒடன்படமாட்டம்'

தலைவர் மகிழ்வுடன் புன்னகைத்தார். மறுபடி அதிரடியாக,
'....பசறிச் சேனையின் ஐ. என். பித் தலைமை வேட்பாளரும், பெரும்பணபலம், பேரினப் படைப்பலம், அரச மேல்மட்ட அரசியற்பலம் மிக்கவருமான பெரிய மனிதர் ஒருவரைத் தோற்கடிக்க, பள்ளிமுனையின் ஒரு சாதாரண ஏழை விவசாயியான இளைஞன் ஒருவனை நமது கட்சி சார்பாக நிறுத்தி, அந்த வெற்றியை ஒரு சரித்திரமாகச் செய்ய நம்மால் முடியாதா.......? சொல்லுங்கள் !'

'...முடியும்... ஏலும்! சுவரு! சுவா! ஏலும் சேர்!' பல குரல்கள் பதிலளித்தன. சபையின் குரல்கள் அடங்கு முன்னரே தலைவர் தடாலடியாக

'.... எனவே நமது இஸ்லாமியக் கட்சியின் தலைமை வேட்பாளராக இதோ நிற்கின்ற முத்துமுஹம்மத்! முத்துமுஹம்மதை நிறுத்துவதற்கும் அவரை வெற்றி பெறச் செய்வதற்கும் ஏன் முடியாது?'

' ஆரு சென்ன... சுட்டாயம் வெல்லுவம்! வெல்ல வெப்பம்'

'அப்படியானால் சரி! நாரே தக்பீர்....?'
அல்... க்பர்... லாஹு...பர்..' சபை பற்பல குரல்களில் கலங்க தலைவர் மறுபடி கம்பீரமாக 'நாரே தக்பீர்!' என்றதும்
'அல்லாஹு அக்பர்!' - ஒரே குரலில் முழங்கியது சபை.
'சரி! தம்பி, முத்துமுஹம்மத்! இப்படிக் கொஞ்சம் வாங்க!'

முத்துமுகம்மது பேயறைந்தவன் போலிருந்தான். அதிர்ச்சியின் பீதி முகத்தில் அப்பியிருந்தது. இது கனவில்லை. தலைவர் அழைக்கிறார். தடுமாறிப்...பின், தயங்கியவனை, நெய்னார் முதுகில் பிடித்துத் தள்ள - முன்னால் வந்தான். அவனது ஊனக் கையைப் பற்றிப் பிடித்த தலைவர் -

'வயற்சேனை பிரதேச சபையின் இஸ்லாமியக் கட்சித் தலைமை வேட்பாளராக, நமது கட்சியின் ஆரம்பகாலப் போராளியும், இளைஞர் அணித் தலைவரும், கட்சியின் 'இளம்பிறை'யுமான ஜனாப். எம். முத்துமுஹம்மது அவர்களை நான் பிரேரிக்கிறேன்..'
என்றார். சபை செய்வதறியாது திகைப்பிலிருக்க, இணைப்பதிகாரி ஹுசைன் பாறுக் குறுக்கிட்டு, பொறாமைக்குரலில் -
'சபையில் யாராவது ஒருவர் ஆமோதியுங்கள்....'
என்றார். சுயநினைவு வந்த சபை பரபரப்பானது. மெலிதான களேபரக் குரல்களில் 'நீ ஆமோதி... நீயான் ஆமோதி... நகீபு எழும்பு... ஜாபிர் எழும்பு...' என்றன. திடீரென தாடி மாஸ்டர் முழுக்கையை உயர்த்தி -
'அதை நான் ஆமோதிக்கிறேன்'
என்றார். செய்லான் ஹாஜியாரைப் பார்க்காமல் உட்கார்ந்தார். தலைவர் சபையிலிருந்து மேலும் மூன்று வேட்பாளர்களைத் தெரிவு செய்தார். பின், மந்தகாசப் புன்னகையுடன் சபையினரை நோக்கி -


'....சரி... கூட்டம் இத்துடன் முடிவடைகிறது. அனைவரும் எழுந்து ஸலவாத் சொல்லுங்கள்...' என்றார்.

தலைவர் எழுந்து விட்டார். சபை எழுந்தது. செய்லான ஹாஜியார் தா..மதமாக எழுந்தார். பற்பல குரலில் ஸலவாத் ஆரம்பிக்க - புரட்சி மௌலவி புழைலின் உரத்த குரல் எல்லாக் குரல்களையும் கட்டுப்படுத்திப் பீறிட்டு முழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களின் நிலையான அரசியல் நிலைப்பாட்டின் தேவை

இலங்கை முஸ்லிம் சமூகம் உறுதியான ஓர் அரசியல் நிலைப்பாட்டிற்கு தம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமான காலப்பகுதி நெருங்கிவிட்டது. அவர்கள் தீர்க்கமான அரசியல் நிலைப்பாட்டிற்கு வர விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசத்தோடு போதுமானதும், இறுதியானதுமான அனுபவத்தைப் பெற்றுவிடுகின்றனர். அவர்கள் இதுகாலவரை வடக்கிலும், தெற்கிலும் பெற்ற பாதகமான அரசியல், சமூகவியல் செயற்பாடுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பு வடக்கு, தெற்கு முஸ்லிம்கள் ஒத்ததும், நிலையானதுமான அரசியல் நிலைப்பாட்டை கண்டு கொள்ள வேண்டும் என்பதையே காட்டி நிற்கின்றன.



விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்துடனான அரசியல் வரைவானது கிழக்கு முஸ்லிம்களுடைய இருப்பையும், தனித்துவத்தையும் பாதித்துள்ளது மட்டுமின்றி, முழு இலங்கை முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் வழிமுறைக்கும் சவாலாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம். தேர்தலொன்று ஏற்படுமிடத்து அரசியலில் தீர்மான சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் வகிக்கும் முக்கியத்துவம் செயலிழந்துபோக அதிகூடிய சாத்தியப்பாடுகள் உண்டு. ஆதலால் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இருப்பையும், தனித்துவத்தையும் பாதுகாப்பதற்கும் முஸ்லிம்களின் அரசியல் செல்வாக்கைக் காக்கும் வகையிலும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் உறுதியானதும், சாத்தியமானதுமான ஓர் அரசியல் ஒழுங்கை கண்டுகொள்வது அவசியம்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இருப்புக்கும், தனித்துவத்திற்கும் கிடைக்கப்போகும் பாதுகாப்பை மையமாகவைத்தே அவர்களின் அரசியல் நிலைப்பாடு அமையும். அவர்களுக்கான பாதுகாப்பை தனியரசியல் வழங்கும் என்ற எதிர்பார்ப்பு மறைந்துகொண்டு செல்வதை அவதானிக்கலாம். தனியரசியல் சிற்பிகள் பிரிவடைந்து வலுவிழந்து நிற்பதும் அதில் அவநம்பிக்கை கொள்ள வைத்திருக்கிறது. ஆகவே வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் கவனம் ஜே.வி.பி, பொ.ஐ.மு போன்ற பெரும்பான்மை கட்சிகளின்பால் செல்ல நிர்ப்பந்தங்களை தோற்றுவித்திருக்கின்றது. புலிகளின் அரசியல் வரைவு, முஸ்லிம்களை தனியரசியலை விட்டு அகற்றி பேரினவாதக் கட்சிகளின்பால் மீண்டும், அவர்கள் மீள்வதை இது காட்டுகிறது. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சுயநிர்ணயம், பாதுகாப்பு, தனித்துவம் என்பனவற்றை விடுதலைப் புலிகள் பொருட்படுத்தும்வரை முஸ்லிம்களின் அரசியல் கட்சித் தெரிவு ஈழக்கொள்கைக்கு எதிரான பேரினவாதக் கட்சிகளின் பால் மீள்வதைத் தவிர்க்க முடியாது.

விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தையும், அரசியல் செல்வாக்கையும் இனி முஸ்லிம்கள் தனியாக நின்று எதிர்கொள்ள முடியாது என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். புலிகளுடனான ஆதரவோடு ஐ.தே. கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வருமிடத்து வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமை மீறப்படும் முடிவுகள் எடுக்கப்படும் என்பது சந்தேகமற்றதொன்று. எனவே அவர்களின் பாதுகாப்புக் கருதி ஜே.வி.பி, பொ.ஐ.மு முதலிய கட்சிகளின்பால் முஸ்லிம்களின் கவனத்தை திசைதிருப்பிவிடுவதில் எவ்விதப் பிழையையும் காண முடியாதுள்ளது. தெற்கைப் பொறுத்தவரை ஐ.தே. கட்சிக்கு வாக்குகளை முஸ்லிம்கள் அளிப்பதைத் தவிர்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் இதனைச் சாதிக்கலாம். தற்போது முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடிக்கான உடனடி நிலைப்பாடு ஆலோசனையே இது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அபாயகரமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அவர்கள் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான அவர்களின் சிந்திப்புக்களுக்கும், முயற்சிகளுக்கும் சார்பாக நிற்கும் வகையில் தெற்கு முஸ்லிம்களின் அரசியல் செல்வாக்கு பயன்படும் வகையில் அதை அவர்கள் ஒழுங்குபடுத்த வேண்டிய யதார்த்தத்தை முஸ்லிம் சமூகம் விளங்க வேண்டும். அதே நேரம் அது தெற்கு முஸ்லிம்களை பாதிக்காத வகையில் அமைய வேண்டும். தெற்கு சிங்கள மக்களின் கருத்துக்களை வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாட்டிற்கு சார்பாக அமையும் வகையில் தெற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஈடுபாடு காட்ட வேண்டிய காலமிது.

தெற்கில் சிங்கள மக்களுடனான எமது தொடர்பு முரண்பாட்டு நிலமைகளைத் தோற்றுவித்துக்கொள்ளாத வகையில் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும். முஸ்லிம்கள் இஸ்லாமிய அரசியல், சமூகவியல் பண்பாடுகளை இவர்களோடு பகிர்ந்துகொண்டு உறுதியான ஒரு சமூகத் தொடர்பை பேண முயற்சிக்க வேண்டும். தெற்கில் முஸ்லிம்களின் அரசியல் உறுதிப்பாட்டிற்கு இவ்வாறான நடவடிக்கை இன்றியமையாததொன்று. முஸ்லிம்களின் தனியரசியல் பலம் கேள்விக்குறியாகும் காலப்பகுதி நெருங்குவதால் சிங்கள மக்களுடனான இணைந்த அரசியல் வலிமையுடன் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் தமது இருப்பைப் பாதுகாப்பதற்கான முனைவுகளை மேற்கொள்ள எத்தனிக்க வேண்டும்.


இலங்கை முஸ்லிம்களின் அரசியல் செயற்பாட்டிற்கு அல்லது வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இருப்புக்கான போராட்டத்திற்கு வெளியுலகச் சக்தியொன்றைப் பின்புலமாகக் கொண்டு இயங்க முடியாத ஒரு சர்வதேச சூழல்தான் முஸ்லிம்களுக்கு இன்று காணப்படுகின்றது. எனவே நாம் எமது அகரீதியான வளங்களைப் பயன்படுத்த சிந்திப்பதன் மூலமே மேற்சொன்ன இரு செயற்பாடுகளையும் கொண்டு செல்லலாம்.

தெற்கில் கட்சிசார்பற்ற முஸ்லிம் தொண்டர் சேவை நிறுவனமொன்றினை அறிமுகமூட்டுவதன் மூலம் அதனூடாய் இந்நாட்டு சிங்கள மக்களுடன் இஸ்லாமிய அரசியல், சமூகவியல் பண்பாட்டுத் தொடர்புகளைப் பேணலாம். இதை விரிவாய் விளங்கப்படுத்துவதாயின், நாட்டின் நகர, பிரதேச சபைகளில் முஸ்லிம்கள் சுயேட்சையாகப் போட்டியிட்டு பதவிக்கு வர முயற்சித்தல். பின்னர் அச்சுயேட்ச்சை அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து தேசியரீதியான கட்சி சார்பற்ற தொண்டர் நிறுவனமொன்றை அமைத்தல். இந்நிறுவனம் சிங்களவர்களுடனான இஸ்லாமிய சமூகவியல் பண்பாட்டைப் பேண ஒழுங்குகளை அமைப்பதும், முஸ்லிம்களுக்குச் சார்பான கட்சியொன்றை சமய சந்தர்ப்பத்தில் ஆட்சிக்குவர வழிவகைகளைச் செய்தல். இவ்வாறானதொரு நிறுவனம் அரசியல் பலம் கொண்டதாகவும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியுடையதாகவும், மக்களால் இது ஒரு நிலையானதொரு நிறுவனம் என அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாகவும் அமையப்பெறும் வகையில் ஒழுங்கு படுத்திக்கொள்ளல் வேண்டும். இவ்வாறான நிறுவனமொன்றின் செல்வாக்கு அழுத்தங்களின் மூலம் சிங்கள அமைச்சர்களைக் கொண்டு எமக்குத் தேவையான சமூகப்பணிகளை மேற்கொள்ள வகைசெய்யலாம். வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தேவைகளுக்கும் அரசை அழுத்தம் செய்ய இதை துணையாகக் கொள்ளலாம்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரை தனிக்கட்சிப் பிரயோகத்தைத் தொடர்ந்து பேணுவது இன்றியமையாததொன்று. தெற்கு முஸ்லிம் மக்களின் கட்சிசார்பற்ற இவ்வாறானதொரு நிறுவனம் காணப்படுமிடத்து தனி முஸ்லிம் கட்சி, அவர்களின் சூழலுக்குச் சார்பான தேசியகட்சியொன்றின் வெற்றிக்கு உறுதுணையளிக்கும் வகையிலான தெற்கு முஸ்லிம்களின் அரசியல் செல்வாக்கைப் பாவிக்க அவர்களின் கட்சி சார்பற்ற நிறுவனத்தோடு ஒரு நிலைப்பாட்டுக்கு வரலாம். வடக்கு, தெற்கு முஸ்லிம்களின் வெற்றிகரமான அரசியல் கலந்துரையாடலுக்கு இது உறுதுணையளிக்கும். வேறுபட்ட பௌதீக ஒழுங்கில் வாழும் முஸ்லிம் சமூகம் அவர்களுக்குரிய அரசியல் நிலைப்பாட்டைப் பேணுவதோடு தேசிய அரசியல் நிலைப்பாட்டிலும் ஒத்ததும், நிலையானதுமான ஒரு கருத்தைப் பேண சார்பாக நிற்கும்.

- எம்.எப்.எம். இஹ்ஸான். பேருவளை

# கவிக்கோவுக்கு ஒரு கடிதம் - 5



உஸ்மான் மரிக்கார்

நீ ஆனந்த விகடனின் ஆஸ்த்தான எழுத்தாளன் மட்டுமா? கருணாநிதியின் ஆஸ்த்தான கவிஞனும் அல்லவா? இரண்டு பக்கமும் புகுந்து விளையாடுகிறாய். ஈழத்தமிழர் கண்ணீரைக் காசாக்குவதில் நீ பலே கெட்டிக்காரன்.

சகோதரா! இன்னுமொரு தடவை நீ இலங்கை வந்துவிட்டுப் போ. அப்படி வந்தால் நீ காத்தான்குடிக்குக் கட்டாயம் வரவேண்டும். உன் தம்பி பிரபா ஓர் இரவில் இரு பள்ளிவாயல்களில் இறைவனைத் தொழுது கொண்டிருந்த 103 முஸ்லிம்களை - பச்சைப் பாலகனிலிருந்து, பல்லுப் போன பாட்டனார் வரை அவர்களது முதுகுக்குப் பின்னால் சுட்டுத்தள்ளி தன் வீரத்தை விளம்பரப்படுத்தி இருப்பதை உன் கண்களால் காண்பாய் - இது காத்தான்குடிப் படலம்.

அப்படியே புத்தளப் பக்கம் வந்து விட்டுப் போ. உனது புலிக்குட்டிகள், வடக்கு வானில் தவழ்ந்த இளம்பிறைகளை நட்சத்திரத் துண்டங்களாக நறுக்கி, சூரியன் சுட்டுப் பொசுக்கும் புழுதி படிந்த புத்தளத்து பூமியில் வீசியெறிந்ததைப் பார்த்தால் நீ பூரித்துப் போவாய் - இது புத்தளத்துப் படலம். அப்படியே ஏறாவூர்ப் பக்கம் வந்து விட்டுப் போ- பிரபாவின் கருணையே கருணை. விழித்துக் கொண்டிருப்போரைச் சுட்டுத்தள்ளினால் நோகுமே. ஆகவே தான் உறங்கிக் கொண்டிருந்த ஊர்மக்களில் 121 பேரைக் கொன்று குவித்தனர் புலிகள் - இது ஏறாவூர்ப் படலம்.

அப்படியே அம்பிளாந்துறைச் சந்திப் பக்கம் வந்துவிட்டுப்போ. புனித ஹஜ்ஜை முடித்து விட்டுத் தன் தாயகம் திரும்பிய 75 ஹாஜிமாரை அப்படியே சொர்க்கத்துக்கு அனுப்பி வைத்த பிரபாவின் பெருந்தன்மை கண்டால் மேனி சிலிர்ப்பாய் - இதுதான் அம்பிளாந்துறைச் சந்திப்படலம்.

அது மட்டும்தானா? அழிஞ்சிப்பொத்தானை, அகமட்புரம், பள்ளியகொடல்ல பக்கம் நீ கட்டாயம் வரவேண்டும். ஊர் உறங்கும் வேளையில் உதவிக்கு அபயக்குரல் எழுப்பி, உதவி செய்ய வந்த அப்பாவிகளை வெட்டியரிந்து குவித்து நரமாமிச வேட்டையாடியதை நீ காண்பாய்.

பச்சைப் பாலகனைத் தென்னை மரத்தில் அறைந்து கொன்ற வீரமறவர்களின் சரித்திரம் காண்பாய். இன்னும் நிறைமாதக் கர்ப்பிணியின் வயிற்றுத் திரை கிழித்து, கர்ப்பத்தில் உறங்குகின்ற இளஞ்சிசுவை வெளியிலெடுத்துத் தரையில் அறைந்து கொன்ற போராளிகளின் வீரம் காண்பாய். இந்த மூன்று கிராமங்களிலும் மொத்தம் 311 முஸ்லிம்களின் மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இவை சில இன்னும் பல உண்டு.

சகோதரா! உனக்குக் "கவிக்கோ" என்று பட்டப்பேர் சூட்டியவன் ஒரு மேதையாகத் தானிருக்க வேண்டும் ஏன்? அவனை ஒரு தீர்க்கதரிசி என்றே அழைப்பேன் நான்- அந்த "கவிக்கோ" என்ற பேர் உனக்கு எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது என்பதை அவதானித்தாயா? தமிழின் அழகே தனி.

"கவி" என்றால் "கவிஞன்" என்று அர்த்தம். தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போது நீ நெற்றிக் கண் திறந்து இந்தியச் சிவபெருமான் ஆனாய். அப்போது உண்மையிலேயே நீ கவிக்கோ - கவிஞர்களின் தலைவன் என்பதை நிஜமாகவே நிரூபித்து விட்டாய்.

அதே போல் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்ட போது நீ இருக்கின்ற இரு கண்களையும் மூடி ஜப்பானிய ஹனுமான் ஆனாய். (அதேபோல் உனது தம்பி மேத்தா இரு காதுகளையும் மூடிக் கொண்டு இரண்டாவது குரங்குப் பொம்மையானார். உனது இன்னொரு தம்பியான இன்குலாப் இரு கைகளாலும் தன் வாயைப் பொத்திக் கொண்டு மூன்றாவது குரங்குப் பொம்மையானார்.)

அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் - உங்கள் மூவரையும் அவமானப்படுத்தும் எண்ணம் கிஞ்சித்தும் கிடையாது. உன்னைப் புகழ்ந்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு, வாணியம் பாடியின் வானம் பாடி" கவிதை எழுதி "தினகரன்" பத்திரிகையில் வெளியிட்டவன் நான். மேத்தா மீது கூட எனக்கு மதிப்பு மரியாதை இருந்தது. இன்குலாப் என்ற சிவப்புச் சிந்தனையாளனையும் நான் ஒரு போதும் குறைத்து மதிப்பிட்டதில்லை. ஆனால் உங்கள் அனைவரதும் சமதர்மச் சாயம் எங்களது துயரைப் பொறுத்தவரை வெளுத்து விட்டது.

எப்படியோ சகோதரா! நீ அன்றும் கவிக்கோதான்; இன்றும் கவிக்கோதான்; என்றும் கவிக்கோதான். உனக்குப் பட்டம் சூட்டிப் பாராட்டியவனின் வாயில் ஒரு கிலோ சீனி போட வேண்டும். எப்படியோ கவிஞர்களின் ராஜாவான நீ குரங்குகளின் ராஜாவாகப் போனாய். அதை நினைக்கும் போதுதான் ரொம்பப் பரிதாபமாக இருக்குது.

சகோதரா! இது உனக்காக எழுதப்பட்ட கடிதம்தான். ஆனாலும் சகோதரா இதுநம்மில் பலருக்கும் பொருந்துது பார். "மேத்தா"வுக்கும் அற்புதமாகப் பொருந்துது பார். உனக்குத்தைத்த சட்டைதான். ஆனால் என் தோழர் மேத்தாவுக்கும் அச்சொட்டாய் பொருந்துது பார். ஆகவே இதில் ஒரு பிரதியை எடுத்து உன் தம்பி மு. மேத்தாவுக்கும் அனுப்பி வைக்கும் படி அன்புடன் வேண்டுகிறேன்.

உன்னால் முடியுமானால் இந்தப் பகிரங்க கடிதத்திற்கு ஒரு பதில் கடிதம் போடு. அதை அப்படியே பிரசுரிப்பதற்கு 'முஸ்லிம் குரல்' ஆவலுடன் காத்திருக்குது.

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தலாக்' இனி இல்லை!

ஆமினா!.... "இந்தாங்க, எனது இம்மாதச் சம்பளம் உங்களுக்கு விருப்பமான படி செலவு செய்யுங்கோ......" என்று மிக அன்புடன் கணவர் ஸரூக் தன் பாரியாரிடம் கொடுத்தான். ஓ..... இந்தப் பிச்சைக்காரச் சம்பளத்தால் என்னத்ததான் செய்ய; எகவுன் கடைக்கு 4000 ரூபா- புடவைக்கடைக்கு 2500ரூபா - நகைக்கடைக்கு 2000 ரூபா கரண்ட் 1000/- தண்ணீர் பில் 500ரூபா......... என்று அடுக்கிக் கொண்டு போனாள்...... ஆமினா. ஸரூக் என்ன பதில் சொல்ல என்று யோசித்துக் கொண்டு, "இவ்வளவுதான் சம்பளம் - அதற்குமேல் மேலதிக வருமானம் இல்லை.... அதனால் பார்த்துச் செலவுகளை செய்யுங்கோ......" என்று கூறிவிட்டு மனைவியின் பதிலை எதிர்பார்க்காது அஸர் தொழுகைக்காக பள்ளிவாயலுக்குச் சென்று விட்டான்.

ஸரூக் - ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் - தந்தை மவுத்தாகி ஒரு வருடம் கழிந்து விட்டது. தாயார் மவுத்தாகி இரண்டு வருடங்கள்..... தனக்கு இருந்த சொத்து - வீடும்- வீட்டைச் சுற்றியிருந்த 1/4 ஏக்கர் காணியும்தான். அவனது மூத்த சகோதரன் வெளிநாட்டில் தொழில்- ஒரேயொரு சகோதரி- அவன் விவாகம் செய்வதற்கு முன், அவளை ஒரு கடைக்காரருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டான். படிக்கும் காலத்திலேயே இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள்,பத்திரிகைகள்...... ஆழமாக வாசித்து-பக்தியும், நம்பிக்கையும், நடைமுறையும் உடையவனாக விளங்கினான். இஸ்லாமிய இயக்கங்களுடன் அடிக்கடி தொடர்புகள் கொண்டு கொள்கை விளக்கம் பெற்றுக் கொண்டான். கொழும்பில் ஒரு கம்பனியில் எகவுண்டனாக வேலை பார்த்தான். ஆனால் சம்பளமோ 7000 ரூபா தான்.

ஒரு ஸாலிஹான பெண்ணை விவாகஞ் செய்ய விரும்பிய ஸரூக் புரோக்கரை நம்பி அழகியான ஆமினாவை விரும்பி மணமுடித்தான். கல்யாணத்தின் பிறகுதான் தெரியும் ஆமினாவுக்கு மார்க்கப்பக்தியோ, அறிவோ அறவே இல்லை என்பது. என்ன செய்ய! கல்யாணம் முடித்த பின் தன் மனைவியை மார்க்க அடிப்படையில் வாழ வழிகாட்டலாம் என்று நினைத்தான். மார்க்கம் நன்கு விளங்கிய குடும்பங்களுடன் பழக வைத்துப் பார்த்தான். ஏராளமாக இஸ்லாமிய பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்ட நாடாக்களைப் போட்டுக் காட்டினான். நல்ல இஸ்லாமிய நூல்களை வாங்கி அவளுக்குப் படிக்கக் கொடுத்தான். ஆனால் அவள் அவற்றையெல்லாம் ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு -டி.வி., சினிமாப்பாடல்களைப் பார்ப்பதிலும், ஆபாச கதைப்



புத்தகங்களை வாசிப்பதிலும் காலந்தள்ளினாள். தொழுகைக்கு 'பாங்கு' சொல்லும்போதுகூட டி.வி. நாடகங்களைப் பார்த்து, இரசிப்பதில் ஈடுபட்டாள். எனினும், ஸரூக் வெறுப்பைக் காட்டிக் கொள்ளாது நிதானமாக நின்று அவளை மார்க்கத்தின்பால் திசை திருப்ப தொடர்ந்து முயற்சித்தான்.

தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு சென்றதும், ஸரூக் பர்ளுகளை முடித்துக்கொண்டு - நிறைய ஸுன்னத்துத் தொழுகைகளை நிறைவேற்றிவிட்டு, தனது மனைவிக்கு ஹிதாயத் கொடுக்குமாறு இறையிடம் இறைஞ்சினான்.

கல்யாணம் நடந்து ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. வரவுக்கு மிஞ்சியசெலவு செய்தாள் ஆமினா- ஒவ்வொரு மாதமும் நகைக்கடைக்குச் சென்று புதிய 'லேடஸ்ட் காப்புகள், காதுப்புக்கள் வாங்கி அணிந்தாள். அதே போன்று விதம் விதமான உடுப்புகளை கடையிலிருந்து கடனுக்கு வாங்கி அணியத் தொடங்கினாள். வீட்டுக்கு கடன்காரர்கள் வரத் தொடங்கியதும் ஆமினா ஒழித்துக் கொண்டாள். ஸரூக் கடன்காரர்களுக்கு பதில் சொல்ல வேண்டியிருந்தான். ஒரு முறை ஒரு நகைக் கடை முதலாளி ஸரூக்கைத் தேடி வந்து, கடனைத் தராவிட்டால் வழக்கு வைப்பேன் என்று பயமுறுத்தி விட்டுப் போனான். வேறு சிலர் மிக மோசமான வார்த்தைகளால் ஏசிவிட்டுப் போனார்கள். நேர்மையாகவும், நீதியாகவும் வாழ்ந்து கொண்டிருந்த ஸரூக் - இவ்வாறு கடன் தொல்லைகளுக்கு உட்பட்டு அவமானப்பட்டான். அனைத்துக்கும் காரணம் அவனது மனைவி ஆமினாதான். ஸரூக் தனக்குள் இவ்வாறு யோசிக்கத் தொடங்கினான். "மார்க்க ஒழுக்கமில்லாத பெண்ணுடன் வாழ்வதை விட அவளைத் தலாக் செய்து விட்டு, நல்லமார்க்க ஒழுக்கமுடைய ஒரு பெண்ணை மணம் முடித்தாலென்ன?" இஸ்லாம்தான் எனக்கு முக்கியம் - அழகு ஆபத்து அது ஆணவம். அவளின் அழகில் மயங்கி மணமுடித்தேனே! என்னைப்போல் புத்தி கெட்ட மனிதன் இருப்பானா?.........."

இப்படியெல்லாம் யோசித்து மூளையே பழுதாகிவிடும் போலிருந்த ஸரூக் "தன் மனக் கவலையை தனது சகோதரியிடம் கூறி ஆறுதல் பெறுவேன்" என்று முடிவெடுத்து சகோதரி வீட்டுக்குச் சென்றான்- "தாத்தா! எனக் கென்றால் என்ட மனைவியுடன் இனியும் வாழ முடியாத நிலை- ஊதாரி - ஆடம்பர வாழ்வுமோகம், வரவுக்கு மிஞ்சிய செலவு - எனவே நான் எப்படி எனது சம்பளத்தால் அவளுடன் வாழலாம்? நான் அவளைத் தலாக் பண்ணப்போகிறேன்" என்று கண்ணீர் வடித்த வண்ணம் கூறினான்.

"அழாதே தம்பி!" இது நடக்கும் என்று எனக்குத் தெரியும்! அந்தப் புரோக்கர் உன்னை ஏமாற்றிவிட்டான். பரவாயில்லை. அவசர முடிவு எடுக்காதே தம்பி! பொறுத்துப் பார்! அவளுக்கு நல்லுபதேசம் செய்துபார்! அவள் உன்னை மீறி கடைகளுக்குச் செல்லுகிறாள் என்று கூட கேள்விப்பட்டேன். என்ன செய்ய! அவளைத் திருத்தப்பார்" என்றாள் ஸரூக்கின் சகோதரி.

ஸரூக் தனது சகோதரி கூறிய ஆறுதல் வார்த்தைகளைக் கேட்டு, சரி பார்ப்போம் என்ற திருப்தியில் வீடு திரும்பினான். வீட்டினுள்ளே வந்ததுதான் தாமதம் மனைவி ஆமினா ஏசத் தொடங்கினாள், "இந்தாங்கோ என்னைக் காப்பாற்ற முடியாவிட்டால் என் வீட்டிற்கு திருப்பி அனுப்பிவிடுங்கோ! பிச்சைக் காரி மாதிரி இங்கு வாழ முடியாது. அடுத்த வீட்டு மதினி இன்று ஒரு நல்ல தங்கமாலை வாங்கிப் போட்டிருக்கிறாள் - எனக்கும் அதே போல ஒன்று வாங்கித் தாருங்க!." என்று அடம் பிடித்தாள்- ஆமீனா!..... "நீங்க கேட்கும் மாதிரி நகை வாங்க என்னிடம் பணம் இல்லை. அடுத்த மாதம் வாங்கித் தருவேன்" என்று ஆறுதல் கூறினான். ஆனால் அவள் கோபித்துக் கொண்டு, அன்று பகல் சாப்பாடு கூட சமைக்காது படுத்துவிட்டாள். ஸரூக் ஒன்றும் பேசாமல், லுஹர்த் தொழுகைக்கு பள்ளிவாசலுக்குச் சென்றான். அங்கு தனது மனைவியின் சன்மார்க்க வாழ்க்கைக்காக துஆ கேட்டான். உடனே வீடு திரும்பாது அஸர் தொழுகையை முடித்ததன் பின் வீடு திரும்புவது என்று தீர்மானித்து மஸ்ஜிதில் தூங்கி விட்டான்.

வீட்டில் ஆமினா மட்டும் இருந்தாள். யாரோ, ஓர் இளைஞர் 'அல் ஹஸனாத்! அல் ஹஸனாத்.....! வாங்கவில்லையா ? என்று கூறவே, ஆமினா முன் வந்து, அல்-ஹஸனாத் ஒன்றை வாங்கி மாதர் பகுதியைப் புரட்டினாள். அதிலே ஒரு கட்டுரை அவளது கவனத்தை ஈர்த்தது.......' பெண்கள் கணவருக்கு கீழ்படிந்து நடப்பது.... கணவரின் வருமானத்திற்கேற்ப சிக்கனமாக செலவு செய்வது...... கணவனின் சொத்தைப் பாதுகாப்பது........ ஒரு மனைவியின் கடமைகள் என்று வாசித்தாள். அவளுக்கு ஒரு திடீர் மனமாற்றம்! சிந்திக்கத் தொடங்கினாள். ஆம்! இஸ்லாமிய இல்லற வாழ்வுதான் சிறந்தது என்று உணரத் தொடங்கினாள்.

அஸர் தொழுகையை முடித்துவிட்டு வீடு திரும்பிய ஸரூக் என்றுமில்லாத ஓர் அமைதி வீட்டில் நிலவியதை அவதானித்தான். எப்பொழுதும் டி.வி. படம் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த நிலை முற்றும் மாறியிருந்தது. தனது மனைவியின் கையில் குர்ஆன் பிரதி ஒன்று இருப்பதைப் கண்டு ஆச்சரியப்பட்டான். அல்-ஹஸனாத் பக்கத்தில் இருந்தது. இன்னும் தனது அலுமாரியிலிருந்த மௌலவி

**- மீஆத் யுசுப் -**

ஷாஹுல் ஹமீது மன்பாஈ அவர்களின் "மறை கூறும் மனக்கோலம்" என்ற நூல் மேசையில் புரட்டப்பட்டிருந்தது. ஸரூக் ஆறுதலாக கதிரையில் உட்கார்ந்து மனைவியிடம், ஒரு கேக் பார்சலைக் கொடுத்தான். 'ஜஸாகல்லாஹு கைரன்' என்று கூறி பெற்றுக் கொண்டாள்.

'இந்தாங்கோ!நான் இதுவரை வீண் ஆடம்பரத்துக்காக கடனுக்கு வாங்கிய நகைகள், மேலதிக உடைகள் இவை எல்லாவற்றையும் வாங்கிய கடைகளுக்கு திருப்பிக்கொடுங்கள். இந்தாங்கோ எனது இந்த தங்க மாலையை விற்று ஏனைய கடன்களைத் தீர்த்து விடுங்கோ.......... என்று கூறினாள்.

இதைக் கேட்ட ஸரூக், யா அல்லாஹ்! நீ என் துஆவை ஏற்றுக் கொண்டு என் மனைவிக்கு ஹிதாயத் கொடுத்து விட்டாய்! இனி ' தலாக்' பற்றியே யோசிக்க மாட்டேன். இனிய இஸ்லாமிய இல்லற வாழ்வை வாழ்ந்து, பிள்ளைகள் பெற்று, உன் திருமறை வகுத்த பாதையில் நிற்பேன். இன்ஷா அல்லாஹ் என்று வாய்விட்டுக் கூறினான். ●

---




| | |
|---|---|
| நூல்: | விடியலின் ராகங்கள் (கவிதைத்தொகுதி) |
| நூலாசிரியர்: | யூஎல்.எம். அஸ்மின் |
| வெளியீடு: | ஸம்ஸம் இளைஞர் கழகம் மத்திய வீதி, பொத்துவில் - 07 |
| பக்கம்: 112. விலை: 100/= | |

கடந்த 1997இல் இலக்கிய உலகில் காலடி எடுத்துவைத்த பொத்துவில் யூஎல்.எம். அஸ்மின் அண்மையில் தனது இரண்டாவது கவிதைத் தொகுதியினை "விடியலின் ராகங்கள்" எனும் தலைப்பில் வெளிக்கொணர்த்திருக்கின்றார்.

இவர், இயலவே "விடைதேடும் வினாக்கள்" எனும் தலைப்பிலான தனது முதல் கவிதைத்தொகுதியினை வெளிக்கொணர்ந்து பலரின் ஆகர் ஷிப்பை பெற்றிருப்பதுடன் கவிதைப் போட்டிகளில் கலந்து பரிசில்களும் பெற்றிருக்கின்றார்.

இந்நூலில் "அன்னை" என்ற தலைப்பில் ஆரம்பித்து "கவிஞனே கேள்!" எனும் தலைப்பிலான வரை இருபத்தியெட்டு கவிதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. வீரம், காதல், அன்பு, சமூகமுடக்கம் போன்ற பல்வேறு கருப்பொருள்களில் மரபு, புதுக்கவிதைப் பாணியில் தனது படைப்புக்களைப் படைத்திருக்கின்றார். சமகாலத்தில் அவர் பெரும்பாலும எதிர் கொள்கின்ற சமூக விடுதலை உணர்வுகளை உணர்ச்சிபூர்வமாகச்




சொல்வதிலும், கவித்துவத் தன்மையோடு படைப்புக்களைப் படைக்கின்ற பாங்கும் இவரிடம் அநேகம் குடி கொண்டிருப்பதனை இந்நூலில் இடம்பெற்றிருக்கும் கவிதைகள் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

அதேநேரம் நம் நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினைகளின் அடிப்படை வேறுபாடுகளை வேறுபடுத்தி விளங்குவதில் தடுமாற்றம் இருக்கின்றது. இதற்கு உதாரணமாக "புதிய பாதையில் புரட்சிப் பாதங்கள்" (பக்கம் 69-73) எனும் தலைப்பிலான கவிதை தக்க சான்று.

கவிதைத்துறையில் இவருக்கு எதிர்காலம் இருக்கின்றது என்பதற்கு இந்நூல் ஒரு கட்டியமாகத் திகழ்கின்றது. இவரது இலக்கியப்பயணம் வெற்றியை நோக்கியதாக அமையும் என்ற நம்பிக்கையையும் இந்நூல் தருகின்றது.

**அபூ பாத்திமா பர்வின்**

! வாசகர் கவனத்திற்கு !
முஸ்லிம் குரலின்
1-24 இதழ்கள்
(பைண்டிங் தொகுப்பு)
தேவைப்படுவோர்,
ரூபா. 400/-க்கான
காசுக்கட்டளை/
காசோலை
அனுப்பிப் பெற்றுக்
கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாறு

எழுதுவது: லைலா அஷ்ராவி

ஊடகத்தின் இன்னொரு போக்கும் இருக்கிறது. அதாவது அது சில குறிப்பிட்டளவிலான மனித உரிமை மீறல்களையே பெரிதுபடுத்திக் காட்டுகிறது. உதாரணத்திற்கு இஸ்ரேலின் வன்முறைகளை பெரிதுபடுத்தாத ஊடகங்கள் பலஸ்தீன வன்முறைகளை ஊதிப்பெருப்பித்துக் காட்டுகின்றன!

உண்மைதான். உண்மைகளை திரிவுபடுத்துவதும் குறித்த சில விடயங்களில் குறிப்பிட்ட சிலவற்றைக் காட்டுவதும் பெரும் ஊடகங்களின் பண்பாகிவிட்டது. இதுவும் ஆதிக்க நிலை சார்ந்த விடயமே. விடயங்களை மறைத்தல் என்பது அதிகாரத்தில் உள்ள சில மக்கள் கூட்டத்திற்காகச் செய்யப்படுகிறது. அதன் மூலம் அமெரிக்காவினதும், அதன் நேச உயர் குழாமினதும் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், இஸ்ரேலிய பிரச்சாரத்தளம் பலம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. அமெரிக்காவின் மிகப் பிரதானமானதும், முக்கியத்துவமானதுமான ஐந்து விடயங்கள் ஸியோனிஸ்களின் கட்டுக்குள் இருக்கின்றன. அவை நிதி, ஊடகம், களியாட்டத்துறை, அரசியல் மற்றும் புலமையாளர்கள்!

தற்போதைய உலகம் எதிர்கொள்கிற மிகச் சிக்கலான பிரச்சினை/விடயம் பலஸ்தீனப் பிரச்சினை. உங்கள் நிறுவனம் சர்வதேச நீதிக்காக பாடுபடுகிறது. உங்கள் பார்வையில் பலஸ்தீனப் பிரச்சினைக்கான நீதியான தீர்வு எதுவாக இருக்கும்? வரலாற்றிலேயே மிகப் பெரும் அநீதிகள் இடம் பெறுகிற ஒரு விடயமே பலஸ்தீன விவகாரம். கொள்கையளவில் எல்லா மக்களும் சம உரிமைகளுடன் அமைதியாக வாழ்கிற ஒற்றைப் பலஸ்தீனம் தான் இருக்கவேண்டும். அதில் இப்ராஹீமிய சமுதாயங்கள் ஒன்றாக வாழக்கூடியதாகவும், அனைத்து மதங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படக்கூடியதாகவும் இருக்கும். ஆனால், அது சாத்தியமற்ற ஒன்று போலவே தென்படுகிறது. அப்படியாயின், நாம் அடுத்த சாத்தியமான தீர்வைப் பார்க்க வேண்டும். அது, இரட்டை அரசுகள் என்ற தீர்வு!

அரபு இஸ்ரேலியர்களது பிறப்பு வீதத்தை எடுத்துப்பார்ப்போம். அது இப்போதைய வளர்ச்சிப் போக்கில் தொடர்ந்தும் செல்லுமாயின், இன்னும் சில வருடங்களில், இஸ்ரேலின் உள்ளேயே யூத சனத்தொகையை சமப்படுத்துகின்ற அளவைப் பெறும். அதனால்தான், ஏரியல் ஷரோன், அனைத்து யூதர்களும் இஸ்ரேலுக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார். அத்துடன் இஸ்ரேலில் ஒரு சட்டம் இருக்கிறது. அது ஒவ்வொரு யூதரையும் இஸ்ரேலியப் பிரஜையாக்கிவிடுகிறது. மறந்துவிடாதீர்கள். 12.9 மில்லியன் மொத்த யூத சனத்தொகையில் 4 மில்லியன் ஏற்கனவே இஸ்ரேலில் நிலைகொண்டுவிட்டது. 6 மில்லியன் அளவில் அமெரிக்காவில் இருக்கிறது. மேலும் பார்த்தீர்களானால், ஒரு சின்னஞ் சிறிய நாடு தன் அனைத்து அண்டை நாடுகளுடனும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் கூட இது போன்ற உதாரணம் கண்டுகொள்ளமாட்டீர்கள். பாருங்கள் சண்டை பிடிப்பது மட்டுமல்ல, நீண்ட காலமாக தாக்குப்பிடித்தும் நின்று கொண்டிருக்கிறது. ஒரு சண்டை நடந்தால், ஒன்றில் நீங்கள் தோற்கடிக்கப்படவேண்டும். அல்லது ஏதாவது சமரசத் தீர்வொன்றுக்கு வரவேண்டும். முடிவு காண வேண்டும்.

சில மறுதலையான விஷயங்களும் இருக்கின்றன. அதில் முக்கியமானது இஸ்ரேலிய சமுதாயத்தினரிடையேயுள்ள 'சுயம்' தொடர்பான பிரச்சினைகள், பாகுபாடுகள் அங்கு ஐரோப்பிய 'ஒரிஜின்', எதியோப்பிய 'ஒரிஜின்' போன்ற பாகுபாட்டுப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இது அவர்களின் குடியேற்ற வருகையினால் தோன்றியது. மற்றும் இஸ்ரேலின் பொருளாதாரமும் சொல்லத்தக்க வகையில் ஸ்திரமானதல்ல. அமெரிக்காவும், பரந்து வாழும் சில யூத பெருந்தகைகளின் நன்கொடைகளுமே இஸ்ரேலை நகர்த்திக் கொண்டிருக்கிறது!

அரசியல் எனும்போது அது ஒரு கட்டமைப்புமிக்க சக்தி. இந்த கட்டமைப்பை தீர்மானிப்பது. அதனை சிறந்த நிலையில் செலுத்துவது ஒவ்வொரு அரசும் கொண்டிருக்கும் யாப்பாகும். எனவே, இந்த யாப்பினை சகல அரசுகளும் கொண்டிருப்பது கடமையாகும். எழுதப்பட்டோ அல்லது எழுதப்படாமலோ எந்த வகையிலாவது அங்கு யாப்பு முறையில் அரசு காணப்படுகையில் தான் ஒரு நாட்டினது நிர்வாகம் செம்மையடைகிறது.



நஸீமுல் பலாஹ்

இஸ்லாமிய அரசு ஒன்று தன்னுடைய அதிகாரக் கட்டமைப்பை தீர்மானிக்கும் யாப்பாக இஸ்லாமிய அடிப்படைச் சட்ட மூலாதாரங்களான அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் அன்றி வேறில்லை. இந்த அடிப்படை மூலாதாரங்களின் வழியிலேதான் சட்டவாக்கம், சமூக பொருளாதார கருமங்கள், அரசாங்க வேலைத்திட்டங்கள் என்பன போன்ற சகல அரசசார் கருமங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

இந்தக் கடப்பாடு இவ்வாறு இருக்க, அல்-குர்ஆனை மிக ஆழ்ந்து கவனிக்கையில், அதன் வழிகாட்டலோ ஆழமானதாகவும், விசாலமானதாகவும் உள்ளது. வரலாறு, ஆன்மீகம், தத்துவம், அறிவுரைகள், உதாரணங்கள் என்று நீண்டே செல்லும் இன்னோரன்ன அம்சங்களை உள்ளடக்கிக் கொள்ளும் அல்-குர்ஆன் ஓர் அரசின் செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை மிகச்சிறப்பாக வலியுறுத்தி வழிகாட்டல்களையும் தருகின்றது.

அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) அவர்கள் "நான் மாக்சிஸம், பரிணாமம், லெனினியம், போன்ற பல கோட்பாடுகளைப் படித்து இவைகள் சமுதாயத்தின் வெளிச்சங்கள் என்றிருந்தேன். ஆனால், அல்-குர்ஆனைப் படிக்க ஆரம்பித்தவுடன் என்னுள் உருவாகிய தெளிவு அவைகள் எல்லாம் வெறும் சித்தாந்தங்கள் என்றுணர்ந்தேன்". என்று தன்னுடைய அல்-குர்ஆனிய அனுபவத்தை இவ்வாறு சொல்கிறார். (முஜ்தமஃ)

எமது அரசியல் தலைமைகளிடமும், பொறுப்புதாரிகளிடமும் இவ்வாறு கேட்கத்தோணுகிறது. "நீங்கள் அல்-குர்ஆனை எத்தனை தடவைகள் முழுமையாகப் படித்திருக்கிறீர்கள்? எத்தனை வசனங்களை மனனம் செய்திருக்கிறீர்கள்? நீங்கள் எல்லாம் அல்-குர்ஆனின் நிழலில் பெற்றிருக்கும் "அரசியல் அனுபவம்" அல்லது "அரசியல் நெறி" என்ன?

எனவே, அல்-குர்ஆனைப் படியுங்கள், அதன் வழிகாட்டலில் உங்களது அரசியலையும் நீங்கள் ஆரம்பியுங்கள். அப்போதே, உங்களது விருட்சங்கள் கிளைகளாக வளர்ந்து கனிதரும்.

அல்-குர்ஆன் கூறுகிறது.

"அலிப். லா.மீம்: இந்த வேதமானது இதில் சந்தேகமில்லை. இது பயபக்தியுள்ளோருக்கு நேர்வழி காட்டியாகும்" (2.1)

## மறைத்தல் அழகு



பெண்ணே...!
மூடி மறைந்து
முழு ஆடையணிந்து
முக மூடிக்குள் இருக்க வேண்டிய நீ
***
அரையாடையணிந்து
ஆடவர் மத்தியில்
உன்
அங்கங்களை
காட்டுவது ஏன்?
***
உன் முன்
வாழ்ந்து காட்டிச் சென்ற
ஸஹாபியப் பெண்மணிகளின்
வாழ்க்கை வரலாறுகளை
கொஞ்சம் புரட்டிப் பார்!
***
எடுத்துக்காட்டாக,
அன்னை ஷுமையாவின்
வாழ்க்கை.....
அவர்கள்
தூய உணர்வுடனும்,
தியாகத்துடனும்,
வீரத்துடனும்
வாழ்ந்து காட்டிச் சென்றிருக்க.....
***
நீ
மட்டும்
உன்
மனோ இச்சைக்கு இசைவாக
நடப்பது ஏன்....?
***

காவத்தமுனை ஜாபிர் எச்எம்.

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலின் பின்னணி இருப்பை கேள்விக்குட்படுத்துவதே!

அண்மைக் காலங்களில் மூதூர, திருகோணமலை, கிண்ணியா, தம்பலகாமம் போன்ற முஸ்லிம்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசங்களில் நடைபெற்ற, நடந்து கொண்டிருக்கின்ற மறைமுகமான அல்லது நேரடியான இத்தாக்குதல்கள் அனைத்தையும் சற்று ஆழ்ந்து நோக்குகின்ற பொழுது அவற்றிற்குப் பின்னால் பல பாரிய திட்டங்கள் ஊசலாடுவதை நாம் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

ஒரு பாரிய நீண்டகால திட்டமிடலின் அடிப் படையில் திருகோ ணமலை மாவட்டத் தினைத் தமது தாயக மாகக் கொண்டுள்ள முஸ்லிம் மக்களின் இருப்பினை நலிவடையச்



செய்து எவ்வித அடையாளமும் அற்ற ஒரு மக்கள் கூட்டமாக வைத்திருக்கும் நடவடிக்கைகளையும், தாமாகவே இப்பிரதேசங்களை விட்டு வெளியேறி விடச்செய்யும் நடவடிக் கைகளையும் சமாதானத்தை விரும்பாத மூன்றாம் தரப்பு என்ற பெயரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம்கள் மீது அண்மைக் காலங்களாக மேற்கொள்ளப்படும் இந்த அடாவடித்தனங்கள் அனைத்தும் எம்மைப் பொருளாதார ரீதியில் பலாவீனப்படுத்தி எமது இருப்பினைக் கேள்விக்குள்ளாக்கி முஸ்லிம் அரசியல் அடையாளத்தை இல்லாமல் செய்யும் ஒரு தந்திரோபாயமாக அமைந்திருப் பதனை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். சமாதான ஒப்பந்தம் நடைபெற்றதன் பின்பு முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகளி னால் பல அத்துமீற ல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. குறிப்பாக மூதூர் முஸ்லிம்கள் மீது இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றமையும் அவைகளைத் தாங்கள் செய்யவில்லை என்று விடுதலைப் புலிகள் மறுத்ததையும் யாரோ மூன்றாவது சக்தி இந்த செயல்களை மேற்கொள்கின்றது என்று பொய் அறிக்கைகளை விட்டதனையும் நாம் நன்கு அறிவோம்.

அதுமட்டுமல்லாது முஸ்லிம்களிடத்தில ஒரு பெரிய ஆயுதக் குழு இருப்பதாகவும் பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் தாங்கள் செய்கின்ற குற்றத்தை மறைப்பதற்காக என்னென்ன சாக்குப் போக்குகளெல்லாம் சொல்ல முடியுமோ அவற்றையெல்லாம் கூறுகின்றார்கள். இவர்கள் யாருக்கு இந்தப் பூச்சாண்டி காட்ட நினைக்கின்றார்களோ தெரியவில்லை. அத்தோடு முஸ்லிம்கள் மீது நேரடியாக சில அடாவடித்தனங்களை மேற்கொண்டுவிட்டு அதனை மறைப்பதற்காக அல்லது தப்பித்துக் கொள்வதற்காக அவர்களுக்குள்ளாலேயே அவர்களால் உருவாக்கிக் கொண்ட "மறவர் படை" என்ற படையின் பக்கம் குறிப்பிட்ட பிரச்சினையை நகர்த்துகின்றார்கள்.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இதுபற்றி அரசாங்கமும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் எதுவித கவனமும், அக்கறையுமின்றி நடந்து கொள்கின்றார்கள். சிங்களப் பேரினவாதிகளோடு போராடிய தைரியத்தில் விடுதலைப்புலிகள் அப்பாவி முஸ்லிம்களோடும் மோதிப் பார்க்கலாம் என்று நினைக்கின்றார்கள் போலும். முஸ்லிம்கள் ஒன்றும் குட்டக் குட்டக் குனிபவர்கள் அல்ல என்பதை எமது வரலாறுகள் புரட்டப்பட்டால் அவர்களுக்குப் புரியும்.

எந்த சமூகம் தங்களது விடுதலைக்கான வழி ஆயுதப் போராட்டம்தான் என்று கருதுமளவுக்குத் தாக்கப்படுகின்றதோ, அப்போது அந்த சமூகத்தின் போராட்டத்தை ஒரு போதும் நிறுத்த முடியாது.

எனவே எமது இருப்புக்குறித்து முஸ்லிம்களாகிய நாங்கள் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம். அண்மைக்கால நிகழ்வுகள் அனைத்தும் முஸ்லிம்கள் மீது அநியாயமாக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட ஒரு பழிவாங்கும் நடவடிக்கை மாத்திரமல்லாமல், எம்மை எமது தாயகத்தை விட்டும் வெளியேற்றும் ஓர் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையுமாகும்.

அபூ நஜா நடுத்தீவு, மூதூர் - 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால நிர்வாக தீர்வுத்திட்ட யோசனையும் முஸ்லிம்களின் தனி அலகு கோரிக்கையும்

முஸ்லிம்கள் கறிவேப்பிலையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளனர். பயன்பட உள்ளனர் என்பது தற்பொழுது இடைக்கால நிர்வாகத் தீர்வுத் திட்ட யோசனை புலிகளால் முன்வைக்கப் பட்டவுடன் தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் முஸ்லிம்களுக் கெதிராகப் புலிப்படையினரால் மேற்கொள் ளப்பட்ட பள்ளித்திடல், பங்குறான படு கொலைச் சம்பவங்கள், சம்மாந்துறை – காத்தான்குடிப் பள்ளிவாயில் படுகொலைச் சம்பவங்கள், ஏறாவூர், மூதூர் சம்பவங்கள், அக்கரைப்பற்று, கல்முனை, வாழைச் சேனை படுகொலைச் சம்பவங்கள், பள்ளி வாயில்களில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டமை. புனித மக்காவுக்குச் சென்று புனிதக் கடமையை நிறை வேற்றிவிட்டு வந்து கொண்டிருக்கும் போது பஸ்ஸை இடைநடுவே வழிமறித்துக் காத்தான்குடி ஹஜ்ஜாஜிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள், அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் நோக்கி பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த அப்பாவிப் பொதுமக்கள் தடுத்துநிறுத்தப்பட்டு குத்தியும், வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட சம்பவங்கள், பொத்துவிலிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம் பொதுமக்கள் கிளைமோர் தாக்குதலுக்குட்பட்டு பஸ்ஸுக்குள்ளேயே சாம்பலான சம்பவங்கள், பொலிஸ் நிலைய தாக்குதலின்போது முஸ்லிம் பொலிஸ்காரர்கள், முஸ்லிம் ஊர்காவல் படையினர் முஸ்லிம் சீ.வீ.எப். படையினர் தனியாக பிரித்தெடுக்கப்பட்டு உயிருடன் கஞ்சுகுடி ஆற்றுப் பகுதியில் புதைக்கப்பட்ட சம்பவங்கள். வயல் வெளிகளுக்குச் சென்றோர், மீன்பிடிக்கச் சென்றோர், காட்டுக்கு விறகுவெட்டச் சென்றோர், அப்பாவி பொதுமக்கள் முஸ்லிம்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக துடிதுடித்துக் கொல்லப்பட்ட இரத்தக் கறைபடிந்த சம்பவங்கள் முஸ்லிம் மக்களால் மறக்கவும் மன்னிக்கவும் முடியாத சம்பவங்கள் காரணமாக முஸ்லிம் மக்கள் – புலிகளையும், தமிழ் மக்களையும் படிப்படியாக நம்புவதைக் கைவிடத் தொடங்கினர். பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் இருந்த முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் ஆகாயமும் பாதாளமும் போல மாறி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளை போல தமிழ் மக்களுடன் ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம் மக்களை புலிப்படையினர் கால அவகாசமேயின்றி உடுத்த உடையுடன் தாம் பிறந்த சொந்த மண்ணை விட்டு ஓடோட விரட்டியடிக்கப்பட்ட சம்பவங்கள் எதைக் காட்டுகின்றன?

அண்மையில் புலிப்படையினரால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிருவாக தீர்வுத்திட்ட யோசனை நகலிலும் கூட முஸ்லிம்களது இருப்பிடம், பாதுகாப்பு, கலாசாரம், நில அமைப்பு தொடர்பாக எதுவுமே தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டிருக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அவர்கள் – பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள்



02.06.1992 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் வண்டியை புலிப்படையினர் வழிமறித்து 16 முஸ்லிம் அப்பாவிகளை குத்தி. வெட்டிக் கொன்றனர். அதில் இரண்டு கிராம அதிகாரிகளும் அடங்குவர். அவர்கள் பயணம் செய்த பஸ் வண்டியையும் குத்தி. வெட்டிக் கொல்லப்பட்டவர்களில் ஒருவரையும் காணலாம்.

தனித்தரப்பாகப் பங்குகொள்ளும் தருணம் இதுவல்ல என்று கூறியுள்ளார். மட்டுமல்ல யானையும் யானையும் சண்டை பிடிக்கும் போது இடையில் தகரப்பத்தைகள் மிதிபடுவது இயல்பானதே. அதற்காக தகரப் பத்தைகளும் உரிமை கோர முடியுமா எனவும், 05.11.2003ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் கூறியுள்ளார். அப்படியானால் சிங்களப் பெரும்பான்மை. தமிழ் சிறுபான்மை மக்களை நசுக்கியது போன்று, ஒரு சிறுபான்மை இனமான தமிழ் மக்களும், புலிகளும், இன்னொரு சிறுபான்மை இனத்தை நசுக்குவதுதான் முடிவா? இவ்வாறுதான் தமிழ்ப்புலிப்பயங்கரவாதம் உருவானது. அப்படியானால் எதிர்காலத்தில் முஸ்லிம் பயங்கரவாதம் உருவாக இடமளிப்பதுதான் நோக்கமா?

இதனால்தான் புலிகள் மீதும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் முஸ்லிம் மக்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர். இவ்வாறான காரணங்களினால்தான் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாக அலகு அவசியம் என்ற உணர்ச்சி எழுந்துள்ளது. வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு. கிடைக்கின்ற அதே உரிமைகளும் சலுகைகளும் எதுவித பாரபட்சமுமின்றி முஸ்லிம்களுக்குக் கிடைக்க வேண்டும். முஸ்லிம் மக்களின் இக்கொந்தளிப்பும் ஆவேசமும் நியாயமானதே. எனவேதான் வடக்கு கிழக்கில் முஸ்லிம்களுக்கு தன்னாட்சி சுய அலகு அவசியத்திலும் அவசியமானது.

முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப் பாகப் பங்குபற்ற வேண்டும் என்பதும். இடைக்கால தீர்வுத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கு தனியான நிர்வாக அலகு வழங்கப்பட வேண்டும் என்பதும் தற்போதைய ஆளும்கட்சி அரசியல் தரப்பினருக்கும். புலிப்படையினருக்கும் எத்திவைக்கப்பட்டும் எந்தப் பிரயோஜனமும் ஏற்படவில்லை. பலராலும் தட்டிக்கழிக்கப்பட்ட இந்த யோசனைகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் சம்மேளனமாவது கருத்திற்கொண்டு நாட்டில் முஸ்லிம்களும் சகல உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக இன்னொரு சிறுபான்மை இனத்துக்கு அடிமைப்படாமல் வாழ வழிவகை செய்ய வேண்டும். இதுதான் இன்றைய வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷையாகும். முஸ்லிம்களின் இவ்வபிலாஷையை நிறைவேற்ற திடசங்கற்பம்பூணாத எந்த ஒரு அரசும் நிலைத்து நிற்காது என்பது கடந்த கால அரசியல் பாடமாகும்.

படமும் தகவலும் ஆக்கமும் :
அபூ அப்துல்லா பொத்துவில்

---

ஒரு நாட்டுக்கு சட்டம் தேவைப்படுவது நாட்டை நிர்வகிக்கவே தவிர மக்களை நிர்வகிக்க அல்ல. சிறந்த. சட்டத்தை மதிக்கும் பிரஜைகளை உருவாக்க வேண்டுமானால், பண்பான எண்ணங்களாலும், சிறந்த எதிர்பார்ப்புகளினாலும் அவர்களின் உள்ளங்களை உரமூட்ட வேண்டும். அதன் அடிப்படை பாடசாலை கல்வியாகும். ஒரு பாடசாலையைத் திறந்து வைத்தால் 10 சிறைக் கூடங்களை மூடிவிட முடியும் என்று கூறுவது அதனால்தான்.

தற்போது இலங்கையின் சனத்தொகை 1,93,59,000 ஆகும். 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளம் பராயத்தினரின் சனத்தொகை முழு சனத்தொகையில் 32.5 வீதம் ஆகும். கடந்த காலத்தில் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறியவர்கள் 47 சதவீதம் வரை அதிகரித்துள்ளனர். இவர்களும் இளம்பராய சனத்தொகையையே சேர்வார்கள். முழு இளம்பராயத்தவரில் 71 வீதமானோர் இச்சமூகம் நேர்மையற்றது. நியாயமற்றது என்றே கருதுகின்றனர். இவர்களுள் 50 சதவீதமானோர் எந்தவொரு அரசியல் கட்சியையும் நம்பத் தயாராக இல்லை.

## கல்வியின் சரிவும் குற்றங்களின் விருத்தியும்

கடந்த 10 வருட காலத்துள் இந்நாட்டில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை 5,70,621 ஆகும். முக்கியமாக கொலை. பாலியல் வல்லுறவு. கொள்ளை மற்றும் வீடுடைப்பு ஆகியவை அவற்றுள் அடங்கும். அதிகளவு குற்றச் செயல்கள் நடந்திருப்பினும் தண்டிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 34,101 ஆகும். கடந்த 10 வருடகாலத்துள் இந்த நாட்டில் நிகழ்ந்த கொலைகளின் எண்ணிக்கை 17,639 ஆகும். பாலியல் வல்லுறவுகளின் எண்ணிக்கை 9559 ஆகும். அதேபோல் கொள்ளைச் சம்பவங்கள் 47,950 ஆகும். வீடுடைப்புச் சம்பவங்கள் 1,28,151 ஆகும். இந்த குற்றச் செயல்களுக்காக தண்டிக்கப்பட்டோர் மிகச் சொற்பமே. கொலைகளுக்காக 81 பேருக்கும், பாலியல் வல்லுறவுகளுக்காக 66 பேருக்கும். கொள்ளைச் சம்பவங்களுக்காக 1325 பேருக்கும். வீடுடைப்புக்காக 8624 பேருக்கும் மட்டுமே தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றன.

மேலும் வேதனைக்குரிய இக்குற்றச் செயல்களுக்காக 2,10,863 வழக்குகளே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் புரிவது என்னவென்றால். செய்யப்படுகின்ற குற்றச் செயல்களைக் காட்டிலும் அரை பகுதிக்கும் குறைந்த தொகையே நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுகின்றது என்பதே.

எது எப்படியிருப்பினும், இவை நாட்டினதும் சமூகங்களினதும் எதிர்கால வீழ்ச்சியாகும். ஆகவே இனிமேலாவது கல்வியுடன் தொடர்புடைய அனைத்து நிர்வாகிகளும் இதில் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆகவே ஒரு தேசிய கல்விக் கொள்கையொன்றை தயாரித்து. அரசியலை அதில் கலக்காமல் செயல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## வெளவால்



பறக்கும் வல்லமையுள்ள ஒரே பிராணி இனம் வெளவாலாகும். அதன் செட்டைகள் மனிதரின் இரு கரங்கள் போன்று செயற்படக் கூடியவை. அவை சவ்வினால் இணைக்கப்பட்டுள்ளன. உலகின் எல்லா நாடுகளிலும் பொதுவாக வெளவால்கள் காணப்படுகின்றன. குத்துமதிப்பாக 1000 வெளவால் இனங்கள் உள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 13 இனங்கள் அழிந்து போகும் நிலையில் உள்ளன. உலகில் வாழும் பிராணிகளுள் 1/4 பகுதி வெளவால்கள் என்றே கூறப்படுகிறது. வெளவால்கள் இரண்டு உப பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை மெகாசிரொப்டெரா எனும் பெரிய வெளவால்களும் மைக்ரோசிரொப்டெரா எனும் சிறிய வெளவால்களுமாகும்.

மனிதர்களே வெளவால்களின் எதிரிகளாவர். தீய சகுனம். மரணம் ஆகியவற்றுக்கும் வெளவால்களுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்புள்ளதாக மனிதர்கள் நம்புவதே அதற்குக் காரணமாகும். அதேவேளை ஆபிரிக்கா கண்டத்திலுள்ள சில வறிய நாடுகளிலுள்ள மனிதர்கள் தமது உணவிற்காக வெளவால்களைக் கொல்ல முற்படுகின்றனர். ஆயிரக் கணக்கில் வெளவால்கள் வசிக்கும் பொந்துகளைத் தீக்கிரையாக்கும் சில கோத்திரத்தவர்கள் வெந்து போகும் வெளவால்களை உணவாகக் கொள்கின்றனர்.

### சாரணியத்துக்கான ஜனாதிபதி விருது-2003



கல்முனை ஸாஹிறா தேசிய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் எம்.பி. சபீன் சம்லி என்பவருக்கு சாரணியத்துக்காக வழங்கப்படும் உயர்விருதான ஜனாதிபதி விருது இவ்வாண்டு கிடைத்துள்ளது.

கல்முனை-அக்கரைப்பற்று மாவட்ட சாரணர் சங்கத்தின் சிரேஷ்ட சாரணரான இவர். சாய்ந்தமருதூரைச் சேர்ந்த பீ.டி. பதூர்தீன் - ஏ. உம்மு சல்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.




## 'கிரகம்பெல்' அல்ல

தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்? என்ற கேள்விக்கு தற்போது அளிக்க வேண்டிய சிறந்த விடைதான் அந்தோனியோ மூஸி என்பது. இவர் இத்தாலியைச் சேர்ந்தவர். தொலைபேசியின் தந்தை அலெக்சாண்டர் கிரகம்பெல் என்று அமெரிக்காவினால் வழங்கப்பட்டிருந்த கௌரவம் கடந்த வருடம் (2002) ஜூன் மாதம் காங்கிரஸினால் நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக தொலைபேசியின் உண்மையான கண்டுபிடிப்பாளராக இத்தாலியைச் சேர்ந்த அந்தோனியோ மூஸி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தற்போது உத்தியோகபூர்வமாக பெல்லின் பேடன்ட் அனுமதிப் பத்திரம் வழக்கில் இருப்பினும் மூஸிக்கு அதிக கௌரவம் வழங்கப்படுகிறது.



மேலும். பிலிப்ரெயினுடைய கண்டுபிடிப்பையிட்டும் ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வின் முடிவில் தொலைபேசியின் கண்டுபிடிப்பாளரின் பெயர் மாற்றத்திற்குள்ளாக இடமுண்டு. ஆனால், இப்போது அந்த கௌரவம் இத்தாலியைச் சேர்ந்த அந்தோனியோ மூஸிக்கே உரித்தானது.

அமெரிக்க காங்கிரஸினால் தொலைபேசியின் உண்மையான கண்டுபிடிப்பாளர் அந்தோனியோ மூஸிதான் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. பல வருட கால ஆவணங்களை பரிசீலனைக்குட்படுத்தியதன் காரணமாகவே உண்மையான தொலைபேசியின் கண்டுபிடிப்பாளர் மூஸிதான் என்பதை தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது என்று நியுயோர்க் நகர ஸ்டேடன் தீவைச் சேர்ந்த (மூஸி வசித்த பிரதேசம்) காங்கிரஸ் உறுப்பினர் விடோ பொஸெலா என்பவர் கூறினார். பலவித உபகரணங்களைக் கண்டுபிடிக்க கிரகம்பெல் பாடுபட்டார். பிற்காலத்தில் பலவற்றைக் கண்டுபிடித்து வெற்றியீட்டினார். ஆனால். தொலைபேசியைக் கண்டுபிடித்த கௌரவம் அவரைச் சாராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோப்பில் முகம்மது மீரான்

# தமிழ் நாவல் உலகில் ஒரு புதிய வருகை



தோப்பில் முகம்மது மீரானை எனக்கு முதலில் அறிமுகப்படுத்தியவர் கேரளப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த டாக்டர் நாச்சிமுத்து அவர்கள் 1989இல் நான் சென்னை சென்றிருந்த போது மீரானின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை' என்ற நாவலைப் பற்றிக் கூறினார். ஒரு வித்தியாசமான நாவல் படித்துப் பாருங்கள் என்றார். அதன் பதிப்பகத்தாரின் விலாசத்தையும் தந்தார். அப்போது மீரான் இலக்கிய உலகில் பரவலாக அறியப்பட்டிருக்கவில்லை. அவரது நாவலும் புத்தகக்கடைகளில் கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு டிசம்பரில் நான் மீண்டும் தமிழகம் சென்றிருந்த போது ஓராண்டுகால இடைவெளியில் மீரானின் பெயர் உயர் இலக்கிய வட்டாரத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருப்பதைக் கண்டேன். சுந்தர ராமசாமி மீரானையும் அவரது நாவலையும் மிகவும் சிலாகித்துச் சொன்னார். கீழக்கரைக்குப் போகும் வழியில் திருநெல்வேலியில் அவரைக் கட்டாயம் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். அவரே மீரானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எமது சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தார்.

எம். ஏ. நுஃமான்

மீரான் திருநெல்வேலிக்கு அண்மையில் பேட்டை என்னும் கிராமத்தில் வசித்து வருகிறார். திருநெல்வேலி நகரில் அவருக்கு ஒரு கடையும் உண்டு. மிளகாய் வத்தல் வியாபாரம் செய்கிறார் என்று நினைக்கிறேன். பேட்டை வீட்டில் பல மணி நேரம் மீரானுடன் பேசிக் கொண்டிருந்தேன். வயது ஒருமை மட்டுமின்றி பல விசயங்களில் எமக்குள் கருத்தொருமை இருப்பதையும் உணர்ந்தேன்.

மீரானின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை' முஸ்லிம் முரசில் தொடராக வெளிவந்த போது இலக்கிய உலகில் யாரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

தமிழ் நாவலுக்கு ஒரு புதிய களத்தையும் ஒரு புதிய வாழ்க்கை முறையையும் அறிமுகப்படுத்தி அதன்மூலம் ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்திருப்பது இந் நாவலின் முக்கியத்துவத்துக்கு ஒரு காரணமாகும். தமிழ் நாவலுக்கு நூறு வயது கடந்துவிட்டபோதிலும் இதுவரை தமிழ் பேசும் சமூகத்தை அது முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை என்றே கூற வேண்டும்.

## பழத்தில் பழுத்தது...

தமிழ் பேசும் முஸ்லிம்களின் சமூக வாழ்வு தமிழ் நாவலில் பிரதிபலிக்கப்படவே இல்லை. முஸ்லிம் வாழ்க்கைப் பின்னணியில் நாவல் என்ற பெயரில் எழுதப்பட்டவை எல்லாம் கற்பனைப் புனைவுகளும். சீர்திருத்தப் பிரச்சாரக் கட்டுக் கதைகளும்தான். முஸ்லிம் சமூகம் பற்றிய ஒரு யதார்த்தப் படிமம் தமிழ் நாவலில் இடம்பெறவே இல்லை. தனது 'கடலோரக் கிராமத்தின் கதை' மூலம் முதல்முதல் மீரான் அந்த வெற்றிடத்தை நிரப்பி இருக்கிறார். இதன் மூலம் தமிழ் நாவல் ஒரு புதிய பரிணாமத்தைப் பெறுகின்றது. 70களில் ஹெப்சிபா ஜேசுதாசனின் 'புத்தம் வீடு' செய்தது போல.

ஒரு புதிய களத்தையும், புதிய வாழ்க்கை முறையையும் அறிமுகப்படுத்துவதனால் மட்டும் ஒரு நாவல் முக்கியத்துவம் பெற்றுவிடுவதில்லை. ஒரு படைப்பைப் பொறுத்தவரை உண்மையில் இவை இரண்டாம் பட்சமானவைதான். ஒரு படைப்பின் அடிப்படையான வெற்றி அது வாழ்க்கைத் தரிசனத்திலும் தங்கியுள்ளது. இத்தரிசனம் குறிப்பாக அப்படைப்பு சித்தரிக்கும் வாழ்க்கை பற்றியதாக மட்டுமன்றி பொதுவாக மனித வாழ்க்கை முழுமையையும் தழுவி அமைகின்றது. அவ்வகையில் ஒவ்வொரு சிறந்த படைப்புக்கும் ஓர் இரட்டைத்தன்மை இருக்கிறது எனலாம். ஒன்று குறிப்பான தன்மை (Particularity) அதாவது அப்படைப்பு சித்தரிக்கும் சூழலின் ஒரு உண்மையான படிமத்தைத் தருவது. மற்றது பொதுவான தன்மை (Genarality). அதாவது முழு மனித வாழ்வுக்கும் ஒரு பொதுக் குறியீடாக அமைவது. ஒவ்வொரு சிறந்த நாவலாசிரியனுக்கும் அவனது படைப்பு ஒரு ஜன்னலாகவே அமைகின்றது. அவன் தன் படைப்பில் சித்தரிக்கும் அவனது காலம், சமூகம் என்னும் ஜன்னலூடாக வெளி உலகம் முழுவதையும் பார்க்கிறான். முழு வாழ்க்கையையும் தரிசிக்கிறான். ஒரு பண்பட்ட வாசகனுக்கும் அப்படைப்பு ஒரு ஜன்னலாகவே அமைகின்றது. அதனூடே அவன் முழு வாழ்க்கையையும் காண்கிறான். வாழ்வு பற்றிய ஒரு தரிசனத்தைப் பெறுகிறான். இவ்வாறுதான் ஒரு படைப்பு கால. தேச. வர்த்தமானங்களைக் கடந்து செல்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், இடத்தில், சமூகத்தில் தோன்றினாலும் உலகப் பொதுமையாகின்றது.

தோப்பில் முகம்மது மீரானைப் பற்றிப் பேசும் போது இந்த உண்மையை வலியுறுத்துவது அவசியமாகின்றது. அவர் காட்டும் வாழ்க்கைப் புலம் தமிழ் நாவலுக்கு மிகவும் புதியது. அரை நூற்றாண்டுக்கு முந்திய தமிழ் நாட்டு முஸ்லிம் கிராமம் ஒன்றை (தேங்காய்ப்பட்டிணம்) அவர் தன் படைப்புக்குக் களமாகக் கொண்டிருக்கிறார். பாரம்பரிய பழக்க வழக்கங்களும். அறியாமையும். மூட நம்பிக்கைகளும் கொண்ட கட்டிறுக்கமான சமூகம் பொருளாதார வலுமிக்க ஒரு சிலரின் பிடியில் நசுங்குண்டு மூச்சுத் திணறிக் கிடக்கும் சமூகம் நவீன நாகரிகத்தின் ஒளிக்கீற்றுப் புகமுடியாத மூடுண்ட சமூகம். இந்தச் சமூகத்தின் மனிதர்களையும் அவர்களின் வாழ்க்கைச் சலனங்களையும் நாம் இந்த நாவலில் காண்கின்றோம். மதம் பற்றிய மூட நம்பிக்கைகள் மனிதர்கள் மீது கவிந்து ஆட்சி செலுத்துவதைக் காண்கிறோம். ஒவ்வொரு மனிதனும் தன் கண்ணுக்குத் தெரியாத தளைகளில் கட்டுண்டு கிடக்கிறான். அடக்கியும் அடக்கப்பட்டும். சுரண்டியும் சுரண்டப்பட்டும். ஏமாற்றியும் ஏமாந்தும். நோவித்தும் நொந்தும் தன் வாழ்க்கையை வாழ்ந்து கழிக்கின்றான். இத்தகைய சமூகம் நிலைத்திருக்க முடியாது. அதன் கட்டிறுக்கம் குலைந்து மெல்ல மெல்லச் சிதிலம் அடைந்து, தன் சிதைவுக்குக் காரணமான புதிய வித்துக்களுடன் மூர்க்கமாக மோதி அழிந்து விடுகின்றது. இவ்வாறு ஒரு மூடுண்ட சமூகத்தையும் அதன் சிதைவையும் மீரான் தன் நாவலில் சித்திரமாக்கியுள்ளார். அவ்வகையில் இது இறந்த காலத்தின் கதை மட்டுமல்ல. நிகழ்காலத்தின் கதையும்தான். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கதை மட்டுமல்ல. எல்லோருடைய கதையும்தான். நல்ல நாவல்களுக்குரிய இந்த இரட்டைத் தன்மை மீரானின் நாவலையும் அந்த வரிசையில் சேர்த்து விடுகின்றது.

நன்றி காலச்சுவடு - ஆண்டு மலர் 1991




முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி. இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை. முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும். ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப் படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை புலிகள் உட்பட தமிழ்ப் பயங்கரவாதிகளாலும், அரச படைகளினாலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட, அங்கவீனமடைந்த முஸ்லிம் தேச மக்களின் விபரங்களை முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம் மக்களிடமிருந்து திரட்டிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் தேசத்தில் 6,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரையில் 450க்கு உட்பட்ட விபரங்களே எமக்கு கிடைத்துள்ளன. தாமதிக்காமல் நமது மக்களின் இழப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள். இந்த சமூக வேலைத்திட்டத்தில் சமூக சக்திகளே பங்கு கொள்ளுங்கள்.



65

அப்துல் காதர் முகமட் அன்வர், 80, மீன்பிடி இலாகா வீதி, புதிய காத்தான்குடி.
பிறந்த திகதி : 16.01.1970
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : மட்டக்களப்பு பொதுச்சந்தை 08.08.1995. விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 5599

---

66

அசனார் கச்சி முஹம்மது, சபீனா வீதி, புதிய காத்தான்குடி 03. பிறந்த திகதி : 1956.07.13
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : காத்தான்குடி 27.10.1989 இல் மரணம் விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 5498

67

சேகு முகைதீன் முஹம்மது றியாஸ், 1705, பதுறுப்பள்ளி வீதி, காங்கேயனோடை 13, ஆரயம்பதி
பிறந்த திகதி : 1974.04.15.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : மட்டக்களப்பு. நாவற்குடா 09.09.1990 மரணம் விடுதலைப் புலிகளினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 2081

---



68

அப்துல் லத்தீப் அப்துல் நயீம், 4ம் வட்டாரம், இறக்கக் கண்டி, நிலாவெளி.
பிறந்த திகதி : 1968.12.05.
கும்புறுப்பிட்டி 15.02.1992. மரணம் இனந்தெரியாதோரினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 386

---

69

ஆதம்பாவா அப்துல் கபூர், இல. 97, கர்பலா வீதி மேற்கு, புதிய காத்தான்குடி 06
பிறந்த திகதி : 1961.12.10.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : ஆரைப்பற்றை 1988.05.26. மரணம் இனந்தெரியாதோரினால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 386

---



70

மீராலெவ்வை ஜனூபர், 650 ஏ, ஆலிம் வீதி, சாய்ந்தமருது 14.
பிறந்த திகதி : 1969.03.20.
சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : காரைதீவு, 17.11.1989.
மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டது.
மரண அத்தாட்சிப்பத்திர இல.: 505

## பேரீச்சம் பழத்தின் மருத்துவ நலன்

"எவர் தினந்தோறும் காலையில் ஏழு "அஜ்வா" பேரீச்சம் பழத்தை சாப்பிட்டு வருகிறாரோ அவருக்கு நஞ்சும், சூனியமும் யாதொரு தீங்கும் செய்யாது. அன்றைய தினம் முழுவதும் (இரவு உட்பட)" என்று, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர் - ஸஃதிப்னு அபீவக்காஸ் (ரலி)
ஆதாரம் - புகாரி, முஸ்லிம், அபூதாவூத்)

"(அஜ்வா என்பது மதீனாவில் உற்பத்தியாகும் ஓர் உயர்வகைப் பேரீச்சம் பழமாகும்) நிச்சயமாக உயர்ந்த "அஜ்வா" பேரீச்சம் பழத்தில் நிவாரணம் இருக்கிறது. அன்றி அது நஞ்சை முறிக்கும் கஷாயம் ஆகும். அதனை அதிகாலையில் சாப்பிட வேண்டும்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.


(அறிவிப்பவர் - ஆயிஷா (ரலி)
ஆதாரம் - (முஸ்லிம்)

மௌலவி எம்.ஆர்.எம். ஹலீமுல்லா
(ரஹ்மானிய்யா)
நாபாவெளை.

முஸ்லிம் குரலில்
விளம்பரம் செய்து
நமது பத்திரிகை
வளர்ச்சிக்கு
உதவுங்கள்

தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road (White Park)
Colombo 10 .
Phone : 0114 734507
Fax: 0114 734508

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவனியுங்கள் - அன்பும் வழிகாட்டலும் சிறுவர்களுக்குத் தேவை

அன்பு மனப்பான்மையுடன் வளர்க்கப்பட்ட குழந்தைகள், தாம் தமது பெற்றோரின் வாழ்விற்கான இன்றியமையாத் முக்கிய பாகம் வகிப்பவர்கள் என உணர்வர். விஷேடமாக வீட்டில் அமைதியின்மை, அல்லது பெற்றோரிடையில் பனிப்போர் நிலவினால், பிள்ளைகள் தாம் இடைநெரிசலில் சிக்குண்டவர்கள் போன்றும் பிரதியுபகாரம் செய்ய வேண்டும் என்ற கடப்பாடு உடையவர்கள் போலும் எண்ணுவர்.

பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது உணர்ச்சிபூர்வமான கட்டாயப்படுத்தலினைப் பிரயோகிக்கின்றனர் என்பதைப் பெரும்பாலும் உணருவதாகத் தெரியவில்லை. அன்பு, ஒழுக்கம், பாதுகாப்பு என்பன முக்கியமானவை. ஆயினும் அவர்கள் அதிகமானவற்றைப் பெற விளைபவர்களாகவும் தொடர்ச்சியான கோரிக்கை விடும் நிலைக்கு வருபவர்களாகவும் இருந்தால் அங்கு அபாய நிலை ஏற்படும்.

பிள்ளைகள் சுகாதார ரீதியிலான நற்பழக்கங்கள் பற்றி அறிவூட்டப்படுதல் வேண்டும். அவர்கள் பொறுப்புணர்ச்சி பயில்வதற்காக, சிறு வயதிலேயே பணிகள் பாரஞ்சாட்டப்படுதல் வேண்டும். அவர்களை உற்று நோக்கி கவனித்து, வழிகாட்டி, நிபந்தனையின்றி அன்பு செலுத்தி பாதுகாப்பு உணர்வை ஊட்டுதல் வேண்டும்.

மரியாதை, நிபந்தனையற்ற அன்பு எனும் பின்னணியில் வளரும் குழந்தை, குடும்பத்தில் ஒழுங்கமைப்பற்ற நிலையினையும், மனத்தாக்குதல்களையும், பிரச்சினை களையும் ஏற்படுத்தும். எனினும் இவை பரவாயில்லையெனலாம். மன்னிக்கும் மனப்பான்மையினையும், பரஸ்பர உதவிகளையும் குழந்தை குடும்பச் சூழலிலேயே பெறும். இதன் வாயிலாகத்தான் உலகம், வாழ்வதற்கேற்ற நல்லிடமாகிறது.

குடும்பத்தில் குழப்ப நிலையினையேற்படுத்தும் குழந்தையன்றிப் பெரும்பாலும் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்ட குழந்தையே துரதிஷ்டவசமாக மனநோய் சிகிச்சை பெற வேண்டியிருக்கும். பிள்ளைகள் அதிகம் வற்புறுத்தலுடன் வளர்ந்தால், வளர்க்கப்பட்டால் விளையக்கூடிய துர்விளைவுகள் குறித்துப் பெரும்பாலான பெற்றோர்கள் உணருவதில்லை. தவறற்ற நிலை பாராட்டிப் பரிசளிக்கப்பட வேண்டியதெனினும் அளவு மீறினால் இடர் ஏற்படும்.

ஆசிரியர்கள் தமது அப்பியாசப் புத்தகங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளக் கூடாது என்று விரும்புகின்றனர். சில குழந்தைகள் பிறருடன் பங்கிட்டு வாழ விரும்புவதில்லை. சிறு இடத்தைக் கூடத் தமக்கு மட்டும் உரியது என எண்ணுகின்றனர். எனினும் வயது ஏற ஏற இத்தன்மை மாற வேண்டும். இன்று சிறுவர்களின் காலமும் நேரமும் பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கட்டளைகளை நிறைவேற்றவே செலவாகின்றன. பாடசாலைகள் கூட இப்போட்டித் தன்மையினை வளர்க்கின்றன: இதனால் பிள்ளைகள் தமது சுயஉணர்வை வெளிப்படுத்த முடிவதில்லை. மற்றோர் குறை காண்பர் என அஞ்சுகின்றனர்.

தம்பிள்ளைகளை முன்னணியில் இருத்துவதற்காகப் பெற்றோர்கள் எத்தூரமும் செல்லத் தயாராக உள்ளனர். போட்டியொன்றில் வெற்றி பெறுவதற்காக டியூஷன் ஆசிரியர் மூலம் ஓர் கவிதையினை எழுதுவித்து அதனைப் பிள்ளையின் ஆக்கம் எனப் பாரங்கொடுத்த ஒரு தாயை நான் அண்மையில் அவதானித்தேன். தமக்குத் தேவையானதை அடையப் பெறுவதற்காகப் பெற்றோர் எதையும் செய்யத் தயங்குவதில்லை. இதன் விளைவாகப் பிள்ளைகளும் எவ்வகையிலும் சரி நேர்மையீனமாக நடக்கப் பின்வாங்குவதில்லை. பணத்தால் எதையும் சாதிக்க முடியுமென அவர்கள் பயிலுகின்றனர். எனவே வெற்றியின் மையக்கரு பணம். இதற்காக (டியூசன்) தனிப்பட்ட ஆசிரியர்களை அணுகுகின்றனர். பிள்ளையின் செயற்பாட்டில் ஏதும் குறைகண்டால் அது ஆசிரியரின் திறமையில் குறை எனக் கருதப்படும். பணத்தை அள்ளி இறைக்கும் பெற்றோர்களுக்காகக் கல்வித் தாபனங்கள் எத்தகைய விளைவுகளுக்கும் இடமளிக்கத் தயாராக உள்ளனர்.

ஐ.நா சபையின் 'சிறுவர் உரிமைகள்' பட்டயத்தின் படி 'சிறுவர் துஷ்பிரயோகம்' என்பது பெரும் ஒரு மீறுதலாகும். எனினும் ஏழை பணக்காரர்கள் எனும் வேறுபாடின்றிப் பிள்ளைகள் பெற்றோர்களால் அழுத்தம் கொடுக்கப் படுகின்றனர். இது கடுமையான கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

சமுதாயத்தில் தம் பிள்ளை உயர் பதவி வகிக்க வேண்டும் எனப் பெற்றோர்கள் கனவு கண்டு செயற்படுவதிற் தவறில்லை. எனினும் பெற்றோர்கள் உதாரண புருஷர்களாக திகழ்ந்து செயற்படுதல் வேண்டும். ஒழுக்க ரீதியில் உறுதியானவர்களாக இருத்தல் வேண்டும். ஏனெனில் பிள்ளைகளின் வாழ்வில் இவை பிரதிபலிக்கும். பிற்கால வாழ்க்கையில் யதார்த்தங்களுக்கு முகங்கொடுக்கையில் தம்மைத்தாமே நொந்து கொள்ளக் கூடிய அவல நிலை ஏற்படலாம்.

இதனைத் தடுப்பதற்காக எவ்விடயத்திலும் நெகிழ்ந்த தன்மையும், சமபல நிலையும் பேணப்படுதல் வேண்டும். இதனால் குடும்பத்துக்கு அதிகரித்த புகழ் கிடைக்காது என்பது உண்மை. எனினும் சமநிலையான குடிமகனை உருவாக்க இது உதவும். இதன் மூலம் நாளைய உலகு மிகவும் சிறப்புறும். இறுதியில் கவனிக்கப்படுவது கேடயமன்று. உயர்வடைந்து தம்மைப் பற்றி தாம் நல்லெண்ணம், திருப்தி பெறுவதே முக்கியம். சிறுவர்கள் எமது எதிர்காலச் செல்வங்கள்.

உலகம் தனது சமநிலையினைப் பேணுவதற்கு அவர்கள் உறுதுணையாக இருப்பர். உரிய நேரத்தில் கண்டித்து அவர்கள் வாழ்வில் முன்னேறிச் செல்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் அன்புத் தொல்லையினால் அவர்களை மூழ்கடித்து விடாதீர்கள். ●

டெய்லி மிரர் 14.10.2003

எழுதியவர் : சஞ்சாரி.

தமிழில் : ஏ. எம். முஹமட் மதனி

## பாராட்டுங்கள் 07

இல்லறத்தில்
நுழையும் நம்மவர்கள்
எல்லோரும் அது
பற்றிய எல்லா வகையான
அறிவுகளுடனும்
இருப்பதில்லை. இதனால்
சிற்சில இடறல்கள்
தலைகாட்டவே செய்யும்.
அவ்வாறானவற்றைக்
களைந்து நல்லறமாக
மாற்றுவதற்கும் ஒருவரை
ஒருவர் நன்கு புரிந்து
இணைபிரியாத்
தம்பதிகளாகத்
திகழவதற்கும்
ஆலோசனைகளை பன்னூல்
ஆசிரியர் 'கையேடு கலைஞர்'
டாக்டர் அப்துல் பாரி
'புதுமணத் தம்பதிகள்
கையேடு' என்ற தலைப்பிலான
நூலில் முன்வைத்துள்ளார்.
அவற்றிலிருந்து சில பகுதிகள்
இங்கு இடம்பெறுகின்றன.
நமது மக்களும் இவ்வாறான
இடறல்களை சந்திக்கும்
போது அவற்றிலிருந்து
விடுதலை
பெறுவதற்கு
இத்தொடர் வழிகாட்டும்
என்று நம்புகின்றோம்.

மருமகள் செய்யும் சின்ன விஷயங்களைக் கூட மாமி பாராட்ட வேண்டும். பாராட்டப் பாராட்ட ஊக்கமாகச் செயல்படுவார்கள்.

மற்றவர்கள்முன் மருமகளை உயர்வாகப் பேசுங்கள். அது அவர்களுக்கு 'டானிக்' போல! இன்னும் சேவை செய்ய ஆர்வத்தைத் தூண்டும்.

மருமகளும் மாமியாரை இப்படிப் பாராட்ட வேண்டும். "எங்கள் மாமி பிரியாணி



செய்தால். சாப்பிடும் கை மணக்கும்" "எங்கள் மாமி கிண்டும் அல்வாவை வாயில் போட்டால். வழுக்கிக்கொண்டு வயிற்றுக்குள் போய்விடும்". "நேற்று எனக்கு ஒரே தலைவலி. என் மாமியார் பற்றுப் போட்டுவிட்டார். தலைவலி போயே போய்விட்டது" என்றெல்லாம் புகழுங்கள். மாமியின் மனதில் உங்களுக்கு உயர்ந்த இடம் கிடைக்கும்.

கணவனும் மனைவியைப் பாராட்ட வேண்டும். மனந்திறந்து பாராட்டுங்கள்! கண்ணே! மணியே! ராஜாத்தி டார்லிங்! என்று கொஞ்சுங்கள். மற்றவர்களை வைத்துக் கொண்டு உங்கள் மனைவியின் சமயலைப் புகழுங்கள். பாராட்டுவதால் எந்த நஷ்டமும் இல்லை. ஆனால், ஏராளமான லாபம் உண்டு.

### குறை கூறாதீர்

மருமகளைப் பற்றி யாரிடமும் குறை கூறக் கூடாது. குறிப்பாக, வேலைக்காரர்களிடம் மருமகளைப் பற்றிக் குறை கூறவே கூடாது. அவர்கள் காது மூக்கு வைத்து அதை மருமகளிடம் போய்ச் சொல்லுவார்கள். பகை வளரும்.

அதற்குப் பதில் மருமகளைப் பற்றிப் பாராட்டிப் பேசுங்கள். அதுவும் மருமகள் காதில் போய் விழும் மருமகள் மகிழ்ந்து. மாமியாரை அதிகமாக மதிக்கத் தொடங்குவாள்.

"எங்கள் வீட்டுக்கிழவி இருக்கிறாளே..." என்று புறம் பேசாதீர்கள். இது பகையை வளர்க்கும். ●

# நல்ல நட்பின் அவசியம்

தருவது : மீரா

வாலிபப் பருவத்தின் வாசலில் காலடிவைக்கும் ஒவ்வொரு இளைஞனும் அவன் எந்த சமூகச் சூழலில் உளாவுகின்றான், யாருடன் கலந்திருக்கின்றான். அவனுடைய சம வயதினருடன் அல்லது வயதால் கூடியவருடன் அவன் கொண்டிருக்கும் தொடர்பின் தன்மை பற்றியெல்லாம் ஒரு கணம் கண்ணோட்டமிடுவது அவசியப்படுகிறது. ஏனென்றால் ஒரு நல்ல சூழலோ அல்லது தூய கலப்புதான் மனித வாழ்வில் தியாகம், அர்ப்பணிப்பு, முயற்சி என்ற சமுதாயப்பண்பில் ஈடுபாட்டையும, அனுபவத்தையும் ஏற்படுத்தும்.

ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தில், நல்ல பண்பாடுகள் அவனில் உருவாகுதல் பெரியவர்களது நட்பு, குறிப்பாக பெற்றோரது உறவே அதிகம் பங்களிப்புச் செய்கின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் காணப்படும் இணைப்பும், பிணைப்பும் நல்லதொரு உறவையும், அன்பையும் காலப்போக்கில் சமூக வாழ்விலும், குடும்ப வாழ்விலும் உருவாக்கி விடுகின்றது.

இன்றைய சமூக வழுக்களில் காணப்படும் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான நட்புறவுக் குறைவே, அவர்களது தப்பான பழக்கங்களுக்கும், கூடாத நட்புறவுகளுக்கும் வழிகோலி கல்வி, பண்பாடு, ஒழுக்கம் போன்ற துறைகளில் வீழ்ச்சிக்கும் இளைஞர்கள் மத்தியில் மோசமான சிந்தனைப்போக்கும் உருவாக வழியாகிறது. எனவே இவர்களால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவோ. அன்பு, பரஸ்பரத்தன்மைகளை உணரவோ முடியாதுள்ளது. நமது சமூகத்தில் காணப்படும் பெற்றோர்கள் பிள்ளைகளின் இப்படியான தொடர்புகளைத் தடுக்கின்றார்களே தவிர. பிள்ளைகள் அவர்களுடன் நட்புறவு கொள்ள ஒருபோதுமே சந்தர்ப்பங்களை வழங்குவதில்லை. அவ்வாறு வழங்குவதற்கு அவர்களுக்கு இன்றைய சமூகச் சூழல் இடங்கொடுப்பதுமில்லை.

உண்மையில் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான நட்புறவின் நோக்கம் அவர்களுக்கிடையிலான அன்புப் பாலத்தை ஏற்படுத்துவதும், ஒருவர் மற்றவரோடு கொள்ளும் இலேசான தொடர்பை உண்டாக்குவதுமாகும். சில சந்தர்ப்பங்களில், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் பேரிங்கிதம் (Joy) அளவோடு இருப்பதில் தவறில்லை. ஏனெனில் அதன் மூலம் ஒரு பிள்ளை தனக்குத் தேவையான உணர்வு சார்ந்த விடயங்களையும், சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது.

பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யும் பணிவிடைகள் அவர்களது உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அது எதிர்காலத்தில் அப்பிள்ளை தன் வாலிபப்பருவத்தில் தன் பெற்றோரையோ அல்லது தனக்கு வழிகாட்டும் பிறரையோ மதித்து அவர்களுக்கு பணிவிடை செய்யும் மனோ பாவத்தை ஏற்படுத்துகிறது.

சாப்பிடும் போதும், வீட்டில் இருக்கும்போதும் தம் பிள்ளைகளுடன் கூடியுறவாடி மகிழ்வது அப்பிள்ளைகளுக்கு பல்வேறுபட்ட உபதேசங்களையும், வழிகாட்டல்களையும் வழங்கி, பெற்றோரின் மதிப்பையும், அவர்களை ஒப்புக்கொள்வதன் அவசியத்தையும் உள்ளங்களில் ஏற்படுத்தி விடுகின்றது. ●

நன்றி : முஜ்தமஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் போராட்டமும், புதிய பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும்

14வது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலொன்று நடைபெறுமானால் பிரதான இருபெரும் அரசியல் கட்சிகளில் ஆட்சியமைத்திட வல்லமை பெற்றவர் யார் என்பதைவிட, அதனைத் தீர்மானிக்கும் சிறிய மற்றும் சிறுபான்மையினக்கட்சி எது என்பதே முக்கியமானதாகும். விகிதாசார தேர்தல் முறையானது நடைமுறையில் காணப்படும் வரையிலும் இலங்கை அரசியல் களத்தின் இந்நிலை என்பதும் தவிர்க்கவே முடியாதது. 225 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புமுறையில் பெரும்பான்மையினத்தவர்களின் அதிகளவு ஆதரவென்பது இரு பிரதான கட்சிகள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி கட்சி சார்பு நகர்வுகளைக் கொண்டதாகவே உள்ளது.

2001ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் ஐ.தே. முன்னணியுடன் மலையகக் கட்சிகளும். மு.கா கட்சியும் இணைந்தே போட்டியிட்டிருந்தன. அவ்வாறான ஆதரவுப்பலத்துடன் அக்கட்சியானது மொத்தமாகப் பெற்றுக்கொண்ட வாக்குகள் 4086,026 (45.62 வீதம்) ஆகும். அதனூடாக மொத்தமாக மாவட்டரீதியிலாக 96 உறுப்பினர்களையும் தேசியப் பட்டியலினூடாக 13 உறுப்பினர்களுமாக மொத்தம் 109 ஆசனங்களைப் பெற்றிருந்தது. பொ.ஐ. முன்னணியானது மொத்தமாக 3330.815 (37.19 வீதம்) வாக்குகளைப்பெற்று மாவட்ட ரீதியிலாக 66 உறுப்பினர்களையும் தேசியப் பட்டியலினூடாக 11 உறுப்பினர்களுமாக 77 ஆசனங்களைப் பெற்றிருந்தது. மூன்றாம் நிலைமைக்கு எழுச்சிபெற்றுள்ள ம.வி. முன்னணி மொத்தம் 815.353 (9.10 வீதம்) வாக்குகளைப்பெற்று மாவட்ட ரீதியிலாக 13 உறுப்பினர்களையும். தேசியப்பட்டியலினூடாக 03 உறுப்பினர்களுமாக 16 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இதனடிப்படையில் ஆளும் ஐ.தே. முன்னணியானது மொத்தமாகப் பெற்றுக்கொண்ட வாக்குகளைவிட மற்றைய இரு எதிர்க் கட்சிகளும் 60.042 வாக்குகளை மேலதிகமாகப் பெற்றிருந்தது.

கடந்த தேர்தலில் பொ.ஐ. முன்னணியானது மொனராகலை மாவட்டத்தில் மாத்திரம் ஐ.தே. முன்னணியைவிட 1256 மேலதிக வாக்குகளினால் வெற்றி பெற்றிருந்தது. 2000ஆம் ஆண்டுத் தேர்தலில் பொ.ஐ. முன்னணியானது மலையகக் கட்சிகள் மற்றும் மு.கா. ஆதரவுகளுடன் 13 மாவட்டங்களில் வெற்றி பெற்று 107 ஆசனங்களைப் பெற்றது. அதனடிப்படையில் ஆட்சி நிர்ணய வல்லமையானது மு.கா மற்றும் மலையகக் கட்சிகளின் கரங்களில் இருந்தது. அதே நிலைப்பாடு மாற்றமடைந்தே 2001ம் ஆண்டில் ஐ.தே. முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த 17 தேர்தல் மாவட்டங்களில் 16 மாவட்டங்களில் ஐ.தே. கட்சியானது வெற்றிபெற்றிருந்தும் கிடைக்கப்பெற்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை என்பது 109 ஆகவே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆக ஒரு கட்சியானது வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த சகல தேர்தல் மாவட்டங்களிலும் வெற்றி பெற்றுக்கொண்டதும் விகிதாசார முறையிலமைந்த தேர்தல் அமைப்பு முறையின் காரணத்தினால் பெரும்பான்மைப்பலம் என்பது சாத்தியப்படக் கூடியதாகவே இல்லை. நிர்ணய வல்லமை என்பது சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் கரங்களிலேயே ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் பல தேர்தல் மாவட்டங்களில் ஐ.தே. முன்னணியைவிட பொ.ஐ.முன்னணி. ம.வி. முன்னணி அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்தது.

| மாவட்டம் | ஐ.தே.மு | பொ.ஐ.மு | ம.வி.மு. | மேலதிகம் |
|---|---|---|---|---|
| களுத்துறை | 249416 | 220215 | 58613 | 29412 |
| காலி | 238989 | 232931 | 61806 | 55748 |
| கம்பஹா | 437289 | 428780 | 113990 | 105481 |
| குருனாகல் | 382768 | 332775 | 63652 | 13659 |
| மாத்தறை | 171661 | 171141 | 54476 | 53956 |
| மொனராகலை | 80549 | 81805 | 21987 | 23243 |
| இரத்தினபுரி | 227394 | 212377 | 40337 | 25320 |
| பொலன்னறுவை | 85235 | 72103 | 18384 | 5252 |
| மாத்தளை | 106749 | 85769 | 15026 | (5954) |
| கேகாலை | 208104 | 170901 | 36711 | (492) |

இவ்வாறான கள நிலைமைகளை அவதானித்தே பொ.ஐ.முன்னணி மக்கள் விடுதலை முன்னணியுடன் தேர்தல் கூட்டு உடன்படிக்கைக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றது. வடக்கு கிழக்கு தேர்தல் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 17 மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாவட்ட ரீதியிலாகத் தெரிவாகப்படக்கூடிய 165 உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்வதற்கான போட்டியாகவே அவதானிக்க முடிகின்றது. வடக்கு கிழக்கு மாகாண தேர்தல் மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள 31 உறுப்பினர்களின் நிலையென்பது அதிகளவில் மாறுபட்டதாகவே காணப்படும். அத்துடன் நிர்ணயிக்கப்பட்டுள்ள 29 தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுள் சிறுபான்மையினக் கட்சிகளுக்கான சுமார் நான்கு உறுப்பினர்கள் போக மீதமானவற்றுடன் பிரதான சிங்களக்கட்சிகளின் போட்டியென்பது ஆக 190 மொத்த உறுப்பினர்களுக்கானதாகவே காணப்படுகின்றது. பொ.ஐ. முன்னணி மற்றும் ம.வி.முன்னணி கூட்டமைப்பினால் தேர்தலொன்றிற்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டால் தேர்தல் கள நிலையை பின்வருமாறு அவதானிக்கலாம்.

| மாவட்டங்கள் | கூட்டமைப்பு | ஐ.தே.கட்சி | ஐ.தே. முன்னணியானது 2001ல் பெற்றவை |
|---|---|---|---|
| களுத்துறை (10) | 06 | 04 | 05 |
| காலி (10) | 06 | 04 | 05 |
| கம்பஹா (18) | 10 | 08 | 09 |
| குருனாகல் (15) | 08 | 07 | 08 |
| மாத்தறை (08) | 05 | 03 | 04 |
| மொனராகலை (05) | 03 | 02 | 02 |
| இரத்தினபுரி (10) | 06 | 04 | 05 |
| பொலன்னறுவை (05) | 03 | 02 | 03 |
| மாத்தளை (05) | 03 | 02 | 03 |
| கேகாலை (09) | 05 | 04 | 05 |
| அதிகமான வாக்குகளைப் பெறாத மாவட்டங்கள் | | | |
| கொழும்பு (20) | 08 | 12 | 11 |
| கண்டி (12) | 05 | 07 | 07 |
| புத்தளம் (08) | 03 | 05 | 05 |
| அனுராதபுரம் (08) | 03 | 05 | 04 |
| அம்பாந்தோட்டை (07) | 03 | 04 | 04 |
| பதுளை (08) | 03 | 05 | 05 |
| நுவரெலியா (07) | 03 | 04 | 04 |
| வடக்கு கிழக்கு மார்காணம்: | | | |
| யாழ்ப்பாணம் (09) | -- | -- | 01 |
| வன்னி (06) | 01 | -- | 02 (முகா ஆதரவு) |
| மட்டக்களப்பு (05) | 01 | -- | -- |
| திகாமடுல்ல (07) | 03 | 01 | 01 |
| திருகோணமலை (04) | 01 | 01 | 02 (முகா ஆதரவு) |

வடக்கு கிழக்கு மாகாணத்தின் 31 உறுப்பினர்களுடன் 196 மொத்த உறுப்பினர்கள் பகிர்வுக்கான மேற்படி தரவுகளின் அடிப்படையிலும், வடக்கு கிழக்கு மாகாணம் உட்பட பரவலாகவே முஸ்லிம்களிடம் காணப்படும் நிரந்தர இருப்பிற்கான அச்சுறுத்தல் நிலைமை மற்றும் பிரதேச அபிவிருத்தி மந்தநிலைப் போக்குகள் என்பவை, மற்றும் 2006ஆம் ஆண்டு வரைக்கும் ஜனாதிபதி அவர்களின் அதிகார மேலாதிக்கம் மிகைத்தசக்தி காணப்படுவதும் எதிர்கால வாக்களிப்பு நிலைமைகளில் மாற்றங்களைக்கூட ஏற்படுத்தலாம்.

உத்தேச கணிப்பின் அடிப்படையில் பொ.ஐ.முன்னணி மற்றும் ம.வி. முன்னணிக்கட்சிகள் கூட்டமைத்துக் களமிறங்கி வெற்றிபெற்றுக்கொண்டாலும் ஆக 105 ஆசனங்களுக்கும் மேலாகப் பெற்றுக் கொள்ளுமா? என்பது சந்தேகமே. இதே வேளையில் ஐ.தே.மு 90 ஆசனங்களுக்குள் மட்டுப்படுத்தப்படலாம். மலையக மக்கள் கட்சிகளும் மு.கா. கட்சியும் தனித்துவமாகப் போட்டியிட்டால் ஐ.தே. முன்னணி பா.உறுப்பினர்களின் எண்ணிக்கையானது மேலும் வீழ்ச்சியுறும். மேற்படி இரு சிறுபான்மைக்கட்சிகளும் களத்தில் 10ற்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றுக்கொண்டாலே வழக்கமான ஆட்சி நிர்ணய சக்தி கொண்டவர்களாக அடையாளப்படுத்தப்படுவார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் வாக்குகளை அதிகளவாகக்கொண்ட மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் சார்பு கொண்டவர்களே ஆதிக்கம் செலுத்துவர். தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் உட்பட சுமார் 20 ஆசனங்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். திட்டமிடப்பட்டவாறு இவர்களுடன் இணைந்த செயற்பாட்டுடன் மலையகக் கட்சிகளும் களமிறங்கினால் நிச்சயம் அதுவே பேரம்பேசும் வல்லமை மிகைத்த ஆட்சி நிர்ணய சக்தியாக மிளிரும். ஐ.தே. முன்னணியினர் ஆட்சியமைத்திட தமிழ்த் தரப்பினர் ஆதரவு வழங்கினால் அதில் சங்கமிப்பதென்பது மு.கா. கட்சியினருக்கு தொடர்ச்சியான சிக்கல் நிலை கொண்டதாகவே அமையும். இதேவேளை 113 ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள பொ.ஐ.மு மற்றும் ம.வி. முன்னணி கூட்டுத் தவறினால் கிடைக்கப்பெறும் ஆசனத்தைக்கொண்டு மு.கா உடனடியாக ஆதரவு வழங்கிட முடியாத நிலை. காரணம், ஏற்கனவே ம.வி. முன்னணியுடனான கசப்புணர்வும், ஏற்கனவே பொ.ஐ. முன்னணி சார்பாக செயற்படும் தே.ஐ.முன்னணி சார்பானவர்களின் ஆதிக்கம் என்பவைகள். எனவே மிகவும் சங்கடமானதொரு நிலையென்பது மு.கா. தரப்பினருக்கென்பதும் தவிர்க்கமுடியாதது.

அ. மு. அனஸ்
திருமலை

எனவே, அரசுகளுடனோ, வேறெந்த சக்திகளுடனோ மு.கா. செய்து கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையிலும் முஸ்லிம்களின் உரிமைகளே பிரதானப்படுத்தப்படுதல் வேண்டும். எனவே மு.கா. வை வழிநடாத்துவோர் (தமது லட்சியங்களையன்றி) கட்சி தாபிக்கப்பட்டதன் லட்சியத்தை நோக்கியே செல்லக் கடமைப்பட்டவர்கள். மட்டுமன்றி, அதுகுறித்து மக்களுக்கு பொறுப்புச் சொல்லவும் கடமைப்பட்டவர்கள். மேலும் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் அனைத்தையும் மக்களின் கண்காணிப்புக்கு இட வேண்டும். அதேபோல மக்களும் தம் அரசியல் தாபனம் தன் லட்சியத்தை நோக்கிச் செல்லுகையில் புரிகின்ற சாதனைகளை வாழ்த்தி வரவேற்பதுடன்.

முடிவுக்குக் கொண்டுவந்த முஸ்லிம் காங்கிரஸ் அதற்குக் கூறிய காரணம் அவ்வாட்சி முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை என்பதாகும். எனவே, அமையவிருந்த ஐ.தே.மு. அரசுடன் மு.கா. முஸ்லிம்களின் உரிமைகளை மாத்திரம் டிமான்டாக வைத்து பங்காளியாகும் என மக்களும் எதிர்பார்த்தனர். அதனைக் கூறியே மு.கா.வும் வாக்குக் கேட்டது. எப்படி சந்திரிகா அரசுடன் மு.கா. பங்காளியான போது செய்து கொண்ட உடன்பாட்டை முஸ்லிம்களுக்கு வெளிப்படுத்தவில்லையோ (அதை அறிந்து கொள்ளவேண்டிய யோக்கியதை ஓட்டுப்போட்ட மக்களுக்கு உண்டு.

மூதூர் முகம்மதலி ஜின்னாஹ் ஜே.பி.

# M.O.U. என்ற பெயரினிலே - எங்கள் உரிமை பறிபோகுது தீவினிலே

லட்சியத்தை விட்டுவிலகும் சந்தர்ப்பங்களில் கட்சியை ஆக்கபூர்வமாக விமர்சிக்கவும் வேண்டும். எப்போது முஸ்லிம்களின் லட்சியங்களை வென்றெடுக்க முடியாது என அரசியல்வாதிகள் உணர்கிறார்களோ அக்கணமே அவர்கள் ஏமாற்று அரசியல் நடாத்தாமல், விலகிக்கொள்ள வேண்டும். எப்போது அரசியல்வாதிகள் ஏமாற்றுகிறார்கள் என்பதை மக்கள் உணர்கிறார்களோ அப்போது மக்கள் தம் அரசியலை தம் நேரடிக் கண்காணிப்புக்குட்படுத்தி மாற்றுவழிகள் குறித்து ஆராயவேண்டும்.

04. ரணில் அரசும் முஸ்லிம் காங்கிரஸூம். வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பெரும்பாலான ஆதரவைப்பெற்ற கட்சி என்ற வகையிலும், முஸ்லிம்களின் உரிமைகளை வென்று வருவோம் என வாக்குறுதியை வழங்கிய கட்சி என்ற வகையிலும் முஸ்லிம்களின் இனப்பிரச்சினைத் தீர்வில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு முஸ்லிம் காங்கிரஸூக்கே உண்டு. ஆதலால் முஸ்லிம்களின் இனப்பிரச்சினை தீர்வில் ஏற்படுகின்ற பாராமுகம், சமாளிப்பு, அசமந்தம், கவனயீனம், தப்புகள், ஏமாற்றுக்கள் என்பன குறித்து மக்களின் மன்றத்தின் முன்பு அதிக விமர்சனத்துக்கும், கேள்விக்கு முட்படுத்தப்படவேண்டியதும் முஸ்லிம் காங்கிரஸேயன்றி வேறல்ல என்பதை (அபிவிருத்தி என்ற பெயரில் சுயதேவைப் பூர்த்தியை நாடும் வேடதாரிகளைத்தவிர) முஸ்லிம்களின் உரிமைகளை ஆசிக்கின்ற எவரும் ஏற்றுக்கொள்வர்.

சந்திரிகாவின் ஆட்சியை இடைநடுவில்

அதேபோல உடன்பாட்டை வெளியிட வேண்டிய கடப்பாடு மு.கா. வுக்குண்டு) அதே போன்றே ரணில் அரசுடன் செய்து





கொண்ட உடன்பாடும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அதேவேளை தம் கட்சி செய்து கொள்ளும் உடன்பாடுகளைக் கட்சி தமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதில் முஸ்லிம்கள் அதிக அக்கறை காட்டுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஓட்டுப்போட்டதுடன் எல்லாம் முடிந்துவிட்டது என்றிருக்காது செய்து கொள்ளும் உடன்பாடுகளை அறிவதிலும், அவ்வுடன்பாட்டின் முன்னேற்றம் பற்றி மதிப்பீடு செய்வதிலும் முஸ்லிம்களும், முஸ்லிம் ஊடகங்களும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா தொடுத்திருப்பது நவீன சிலுவைப் போர்

# பின்லாதின் தெரிவிப்பு!



கடந்த 13ஆம் திகதி ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினரால் பிடிபட்டு, அவருக்கெதிராக அமெரிக்கா நடாத்தவிருந்த 'நீதியான" விசாரணையை முழு உலகும் நிராகரித்து கண்டித்திருப்பதுடன் அவருக்கான தண்டனையை தீர்மானிக்கும் உரிமை ஈராக்கிய மக்களிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று பலராலும் வேண்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, அண்மையில் (அதாவது 20.12.2003அன்று) Islamic News Agency என்ற இணையத்தளம் ஒரு செய்தியை வெளியிட்டது. அச்செய்தியில் 'அல்-அரேபியா" என்ற செய்தி நிறுவனம் அல்-காயிதா அமைப்பின் தலைவர் உஸாமா பின் லாதின் பேசியதாக ஓர் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டது. அதனூடாக உஸாமா பின் லாதின், ஈராக் மண்ணில் அமெரிக்கா தன் நேச நாடுகளுடன் மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்ததுடன், அதை நவீன சிலுவை யுத்தம் என்றும் வர்ணித்துள்ளார்.

பின் லாதின் அவ் ஒலி நாடாவில் 'அமெரிக்கா மேற்கொள்ளும் யுத்தமானது இஸ்லாமிய உலகுக்கெதிரான நவீன சிலுவைப் போர் என்றும், அல்லாஹுவே அன்றி வேறெவராலும் அதன் முடிவை அறிந்திட முடியாத ஒரு நீண்ட போராகவும், முழு இஸ்லாமிய உம்மத்தினதும் எதிர்காலம் அதனோடு இணைந்ததாகவே இருக்கும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'இன்று அமெரிக்கா முழு உலகின் முன்னாலும் மிகப் பலமாகக் கத்திக்கொண்டே அழிவில் வீழ்ந்துகொண்டிருக்கின்றது. அல்லாஹ் அதன் சூழ்ச்சிகளை, கிழக்கிலும், மேற்கிலும் தமது ஜீவனோபாயத்திற்காகவே ஆயுதம் ஏந்திய, கீழ்த்தரமான மனிதர்களிடம் உதவி கேட்டு ஒதுங்குவதன் மூலம் வலிமை குன்றச்செய்திருக்கின்றான். அவர்களில் எத்தனையோ பேருக்கு அமெரிக்க குடியுரிமைகூட இல்லை." என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன், ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைக்கெதிராக போராளிகளால் மேற்கொள்ளப்படும் பதில் தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிக் கூறும்போது 'நீங்கள் மேற்கொள்ளும் எதிர்ப்புத் தாக்குதல்கள் ஆச்சரியமில்லை. ஏனென்றால் நீங்கள்தான், பூமியின் நாலாதிசைக்கும் இஸ்லாத்தைச் சுமந்து சென்ற அந்த உன்னதப் போராளிகளின் பிள்ளைகளாச்சே." என்றும் தெரிவித்துள்ளார்.



சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளி வாயலின் அழகிய தோற்றம்.

படம்: எம்.எம்.ஜெஸ்மின்


## உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

**BETA TRAVELS மூலம் சவூதி அரேபியாவில் பிரபல்யம் வாய்ந்த GULF CATERING SERVICES கம்பனியில் வேலை செய்வதற்கு SCHOOL CANTEEN SALESMAN தேவை.**

தகைமைகள்.

- சாதாரண ஆங்கில அறிவு அவசியம்
- G.C.E. (O/L) படித்தவர்களாக இருக்கவேண்டும்.
- 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

கடவுச்சீட்டு (PASSPORT), 03 புகைப்படப் பிரதிகளுடன் சமூகமளிக்கவும்

குறிப்பு:

**ஒரு வாரகாலத்திற்குள் பயணம் மேற்கொள்ள இருப்பதால் உடனடியாக சமூகமளிக்கவும்**

தொடர்புகளுக்கு

**BETA TRAVELS**

937, 1ST FLOOR, MARADANA ROAD,
COLOMBO - 08, SRI LANKA.
MOBILE: 072-2795732, 0777 - 320771
TEL: 011- 5359860
L. L. NO: 1543

advt.


# ஈராக் உணர்வுகள்

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் யுத்தம் இன்றுவரை நீடித்து வருகிறது சதாம் கைதுக்குப்பின்னும், இது, ஈராக்கிய மக்களது வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் மனோபாவத்தையும் வெளிக்கொணர்கின்றது.




ஈராக்கிய வீதிகளில் ஏற்பட்டுவரும் இயல்பு நிலை மாற்றம் இதற்கொரு நல்ல உதாரணமாகும். ஈராக்கின் தலைநகரான பக்தாத் வீதிச் சுவர்களெங்கும் பல கருத்தாழமிக்க அடையாளங்களை காண முடிகிறது. இந்த அடையாளங்கள் கருத்தொற்றுமையின்றி, இடத்துக்கிடம் வேறுபடுவதானது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




'சுன்னிகள்" பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினருக்கெதிரானதும், சதாம் ஹுசைனை ஆதரிப்பதுமான கருத்துக்கள் காணப்படும் அதேவேளை, 'ஷீஆக்கள்" அதிகமாக வசிக்கும் பகுதிகளில் சதாம் ஹுசைனை இழிவுபடுத்தும் சொற்பிரயோகங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனாலும், இதன் மூலமாக ஈராக் மக்களின் உள்ளுணர்வுகளையும், முன்னாள் ஜனாதிபதி சதாமின் ஆட்சிமீதிருந்த விருப்பு - வெறுப்புக்களை எடைபோடக்கூடியதாக இருக்கின்றது. இது இவ்வாரு இருக்க பக்தாதின் மேற்குப்பகுதியிலிருக்கும் அல்-ஹாரிஸிய்யா என்ற இடத்தில் அமைந்திருக்கும் ஈராக்கின் முந்திய புலனாய்வுத்துறை கட்டிடச் சுவர்களில் 'அல்லாஹ்வின் பாதையில் போராடுவோம்" என்ற கருத்தில் அடையாளங்கள் எழுதப்பட்டு, அழிக்கப்பட்டுள்ள அடையாளங்களையும் காண முடிகிறது.





**MUSLIM KURAL,**
No:181/1, Maligakanda Rodd,
(White Park)
Maradana, Colombo -10
Sri Lanka.

Phone: 0114- 734507
Fax: 0114-734508



முஸ்லிம் குரல்
MUSLIM KURAL


## முஸ்லிம் குரலின் தொடர்ச்சியான வருகைக்கு நமது மக்களிடமிருந்து ஆதரவு தேவை!

முஸ்லிம் குரல் தனது சுவடுகள் இருபத்தொன்பதை நமது சமூக அரங்கில் பதித்திருக்கிறது! முஸ்லிம் குரல் பற்றிய உங்கள் கருத்துக்கள், பத்திரிகையின் கருத்து நிலைப்பாடுகளிலிருந்து மாறுபட்டும் நிற்கலாம் அல்லது முழுமையாகவோ, ஒருபகுதியாகவோ உடன்பட்டும் நிற்கலாம்! இது அவரவர்களின் அரசியல் சமூகப்பார்வையைப் பொறுத்தது என்பதை நாமறிவோம்!

உடன்பாடு, முரண்பாடு எனும் கருத்து சார்ந்த நிலைப்பாடுகளுக்கு மேலால், முஸ்லிம்களுக்கான ஊடகங்கள், குறிப்பாக அச்சு ஊடகங்களின் தேவை குறித்து நாம் அனைவரும் உணர்வோம்! இந்த உணர்வின் தேவைப்பூர்த்தியை முஸ்லிம் குரல் மிகக் குறைந்த அளவிலேனும் நமது சமூக அரங்கில் பிரதிபலித்திருந்தால், இப்பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வரவேண்டிய கடமை நம் அனைவருக்கும் உரியதாகிறது.

இந்த சமூகக் கூட்டுப் பொறுப்பை உணர்ந்து, மிகமோசமான நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ள முஸ்லிம் குரலின் ஆயுளை நீடிப்பதற்கு முன்வாருங்கள். எமக்கு நிதியுதவி வழங்குங்கள். தனிமனிதர்களின் முடியுமான சிறுபங்களிப்புகள் மொத்தமாக வடிவம் பெறும்போது, முஸ்லிம் குரலை தொடர்ந்து கொண்டுவருவதற்கு பக்கத் துணையாக இருக்கும் என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறோம்!

உங்கள் உதவிகளை
Muslim Kural Publication,
181/1, Ananda Mawatha,
Colombo - 10.
என்ற முகவரிக்கு அனுப்பவும்.

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்

முஸ்லிம் குரல் இரு வாரங்களுக்கு வெளிவராது என்பதை மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printcom - 254369